உதயன்

விலை ரூ.20
பக்கம் 36

சுடர் 30 | கதிர் 077 | வள்ளுவர் ஆண்டு 2046 | தை 28 | புதன்கிழமை | 11-02-2015

# சிறிலங்கா செய்தது இனப்படுகொலையே!

## வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம் எதிர்ப்பு ஏதுமின்றி நிறைவேற்றம்.



யாழ்ப்பாணம், பெப்ரவரி 11
இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்தது முதல் தமிழர்கள் மீது சிறிலங்கா இனப்படுகொலையையே நிகழ்த்தி வந்துள்ளது என்று வடக்கு மாகாண சபை நேற்று தீர்மானம் நிறைவேற்றியது.
"தமிழர்களுக்கு எதிரான சிறிலங்காவின் இனப் படுகொலை" என்ற தலைப்பில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து தற்போது விசாரணை நடத்திவரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், இனப்படு கொலை குறித்த இந்த முறைப்பாட்டையும் கவனத்தில் எடுத்து தகுந்த விசாரணைக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கும் பரிந்துரைக்க வேண்டும் என்றும் இந்தத் தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது. பக்.24

### "உண்மையை எடுத்துரைக்கும் ஆவணம்"



யாழ்ப்பாணம், பெப்.11
இலங்கையில் காலம் காலமாக தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை உலகுக்கும், சிங்கள மக்களுக்கும் எடுத்துரைக்கும் ஆவணமாக இன்றைய பிரேரணையைக் கொண்டு வந்துள்ளேன். இன்றைய சூழ் நிலையில் இராணுவ முகாம்கள் அகற்றப் படாவிட்டால் - ஜெனிவாத் தீர்மானம் உரிய காலத்தில் உண்மையை உரைக்காவிட்டால் தமிழ் மக்களின் பாடு எவ்வாறு அமையப் போகின்றது என்பதைக் கட்டியம் கூறும் கருத்து மிகுந்த ஆவணமாகவே இந்தப் பிரே ரணையை மதிப்புசால் சபையின் முன்னால் பிரேரிக்கின்றேன். இனப்படுகொலை தொடர்பான அறிக்கையை மாகாண சபை அமர்வில் சமர்ப்பித்து உரையாற்றும்போது வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் இவ்வாறு கூறினார். பக்.24

### "விசாரணையை தாமதிக்க விரும்புகிறது அமெரிக்கா"

யாழ்ப்பாணம், பெப்.11
ஐ.நா. விசாரணையைத் தாமதப்படுத்துவதற்கு அமெரிக்கா விரும்புகின்றது. இது தொடர்பில் எம்மிடம் நேரடியாகவே கேட்கப்பட்டது. நாம் அதை மறுத்துவிட்டோம். - இவ்வாறு வடக்கு முதலமைச்சர் கூறினார்.
"தாமதம் சிங்கள வாக்குகளைப் பெற உதவும் என்று நினைக்கின்றீர்கள். ஆனால் அந்தத் தாமதம் தமிழ் வாக்குகளைப் புறக்கணிக்கும் தன்மையானது என்பதை அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் நிசா பிஸ்வாலிடம் சுட்டிக்காட்டினோம்." - என்றும் அவர் குறிப்பிட்டார்.
இனப்படுகொலை தொடர்பான பிரேரணை முன்மொழிவதற்கு முன்னர் ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். பக்.24

# தமிழர்கள் மீதான படுகொலைகள்

[ஒரு இன அல்லது மத அல்லது தேசிய அல்லது கலாசார குழுவை முழுமையாகவோ பகுதியாகவோ படுகொலை செய்தல்: இனப்படுகொலை - ஐ.நா.]



வடக்கு மாகாண சபை நேற்று நிறைவேற்றிய இனப்படு கொலை தொடர்பான தீர்மானத்தில், சிறிலங்கா அரசால் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்ட படுகொலைகள் குறித்து வரலாற்றுரீதியாக விலாவாரியாக விளக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்களின் சாரம் வருமாறு:
சிங்களவர்களைத் தமிழர்கள் தாக்குகிறார்கள் என்ற வெறும் வதந்திகளின் மூலம் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட படுகொலைகள் தூண்டிவிடப்பட்டன. சிங்களம் மட்டும் சட்டம் அல்லது உத்தியோகபூர்வ மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்ட காலம் முதலே இது நடந்து வருகிறது, என்கிறது தீர்மானம்.
"சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து 1956இல் அமைதியாகப் போராட்டம் நடத்திய தமிழர்களின் ஆர்ப்பாட்டம் மீது சிங்களத் தேசியவாதிகளின் கோரிக்கையின் கீழ் சிங்களக் காடையர்கள் தாக்குதல் நடத்தியமையை தீர்மானம் சுட்டிக் காட்டுகின்றது. இந்தச் சம்பவம் கல்லோயாவை எட்டிய போது தமிழர்களே வன்முறைக்குக் காரணம் என்ற வதந்தியாக மாறியிருந்தது. ஜூன் 11 முதல் 16 வரை சிங்களக் காடையர்கள் நடத்திய தாக்குதல்களில், 150 தமிழர்க்ள் கொல்லப்பட்டனர். மேலும் 100 பேர் காயமடைந்தனர். தமிழர்களின் சொத்துக்கள் நாசமாக்கப் பட்டன. இவற்றையெல்லாம் பொலிஸார் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தடுத்து நிறுத்தவில்லை." என்று விவரிக்கின்றது தீர்மானம்.
இதேபோன்று 1958 மே மாதம் 22 முதல் 27 வரை நாடு முழுவதும் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டன என்றும் இதில் 300 தமிழர்கள் கொல்லப்பட்டனர், 1000 பேர்வரையிலானோர் காயப்பட்டனர், 200 பெண்கள் வன்புணரப்பட்டனர் என்றும் தீர்மானம் சுட்டிக்காட்டுகின்றது. இதன்போதும், சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தமிழர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிடுவதற்காக வதந்தியைப் பரப்பினார் பிரதமர் என்றும் தீர்மானம் குறிப்பிடுகிறது. பக்.23

# சிங்கள வாக்குகளுக்காக பேச்சு மாறுகின்றது அரசு

## மாமன் சொன்னதை மருமகன் செய்தார் மாகாண சபையில் முதலமைச்சர் சீற்றம்



யாழ்ப்பாணம், பெப்.11

சிங்கள மக்களின் வாக்குகளுக்காக மாமன் சொன்னதை மருமகன் இங்கு வந்து பேசிச் சென்றிருக்கின்றார். இப்போதே சிங்கள மக்களின் வாக்குகளுக்காகப் பயப்படும் அவர்கள், தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், சிங்கள மக்கள் செய்ய அனுமதிக்கின்றார்கள் இல்லை என்று சொல்லி இங்கிருந்து இராணுவ முகாம்களை அகற்ற மறுத்தால் என்ன செய்வது என்ற கேள்வியை எழுப்பிய வடக்கு மாகாண முதலமைச்சர், 'பழைய குருடி கதவை திறவடி' என்ற நிலைக்கே மீண்டும் வந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இனப்படுகொலை தொடர்பான பிரேரணையை வடக்கு மாகாண சபையில் நேற்றுச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ருவான் விஜேவர்த்தன, இராணுவத்தினரைச் சந்தித்து உங்கள் முகாம்கள் ஒன்றையும் நாம் அகற்றப் போவதில்லை என்று அண்மையில் உறுதிமொழி அளித்துள்ளார். இது அவரின் கருத்து என்று நான் நம்பவில்லை. 'மாமன்–மருமகன் கட்சி' (யு.என்.பி – என்பதை அங்கிள் நெர்பியூ பார்ட்டி) என்று ஐக்கிய தேசியக் கட்சியை அந்தக் காலத்தில் அழைப்பார்கள்.

இன்றைய மாமன் கூறி மருமகன் மதித்துரைத்த கருத்தாகவே இதனைக் காண்கின்றேன். காரணம் தேர்தல் வெற்றியின் பின்னர் நான் கொழும்பில் மேற்படி இளைஞரின் (ருவான் விஜேவர்த்தனவின்) மாமனார் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தேன்.

அவர் என்னைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள், 'நாங்கள் மகாநாயக்க தேரர்களிடம் வடமாகாண இராணுவ முகாம்கள் எதனையும் அப்புறப்படுத்தப் போவதில்லை என்ற உறுதிமொழியை அளிக்கவுள்ளோம்' என்பது. அதனைக் கூறிவிட்டு அவரின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போன்று, பொதுவாகச் சிரிக்காத அவர், சற்றுச் சிரித்தார்.

அதிலிருந்து நான் புரிந்து கொண்டது என்னவென்றால், 'மகாநாயக்க தேரர்களுக்கு இவ்வாறு கூறி அவர்களின் மனங்களைக் குளிர்விக்கப் போகின்றேன். அடுத்த தேர்தலில் நாங்கள் வெல்ல வேண்டும் அல்லவா?' என்பது போலத்தான் அவரின் கூற்றை அர்த்தப்படுத்திக் கொண்டேன். அந்தச் சூழ்நிலை காரசாரமான கருத்துப் பரிமாறல்களுக்கு உகந்த சூழ்நிலையல்ல. மௌனம் காத்தேன்.

ஆனால் மருமகனார் ருவான் விஜேவர்த்தன படையினரிடையே சென்று அதே கருத்தைச் சொன்ன போது தான் நான் விழித்துக் கொண்டேன். என்ன நடக்கிறது இங்கே?

சில வாரங்களுக்கு முன்னர் தான் எமது மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனைச் சந்தித்து வலி. வடக்கில் இராணுவத்துக்கு வேண்டப்படாத காணிகளில் மக்கள் மீளக் குடியேற வசதி அளிக்கவேண்டும் என்று கோரி அதற்கான அங்கீகாரத்தையும் பெற்று வந்தோம். 6 ஆயிரத்து 500 ஏக்கர் காணியில் ஐயாயிரம் ஏக்கரையாவது விடுவிக்க வேண்டும் என்று கேட்டு வந்தோம். அதற்குப் பச்சைக் கொடியையும் சுவாமிநாதன் காட்டியிருந்தார். ருவான் விஜேவர்த்தன கூறுவதைப் பார்த்தால் இராணுவத்தினருக்கு இடநெருக்கடி வரும் போல் இருக்கின்றதே! ஆறாயிரத்து ஐநூறு ஏக்கரில் ஹாயாக இருந்த அத்தனை இராணுவத்தினரையும் ஒருவரைக் கூட வெளியேற்றாமல் ஆயிரம் ஏக்கரினுள் அடைபட்டுக் கிடக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப் படுகின்றதா என்று எண்ணிப் பார்த்தேன். இராணுவத்தினரைக் குறைக்க மாட்டோம், இராணுவ முகாம்களை நீக்கமாட்டோம் என்பது இராணுவத்தினருக்கும் சிங்கள மக்களுக்கும் புதிய அரசு கூறும் கூற்று. இராணுவத்தினரை அப்புறப் படுத்துவோம், முகாம்களைக் குறைப்போம், மக்களை மீளக் குடியமர்த்துவோம் என்பது தமிழ் மக்களுக்குக் கூறும் கூற்று. இது எங்கோ சென்று இடிக்கின்றதே என்று சிந்தித்துப் பார்த்தேன். தேர்தலில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவே இவையெல்லாம் கூறப்படுகின்றன என்பதை உணர்ந்தேன்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்கின்றேன். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எங்கள் அனுசரணையுடன் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளுடன் நீங்களும் வெற்றி அடைகின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் மீண்டும் பிரதமர் ஆகின்றீர்கள் என்றும் வைத்துக் கொள்வோம். அப்பொழுது இராணுவ முகாம்களை நீங்கள் அப்புறப்படுத்த உங்களுக்கு வாக்களித்த சிங்கள சகோதர சகோதரியினர் விடுவார்களா? அனுமதி வழங்குவார்களா? நீங்கள் அப்புறப்படுத்தமாட்டோம் என்று உங்கள் மருமகனைக் கொண்டு உறுதிமொழி அளித்ததால் தானே நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம் என்று அவர்கள் கூற மாட்டார்களா? அப்பொழுது நீங்கள் எங்களைப் பார்த்து 'நான் என்ன செய்ய? சிங்கள மக்கள் இராணுவத்தைக் குறைக்க, முகாம்களைக் குறைக்க இடம் அளிக்கின்றார்கள் இல்லை' என்று கூற உங்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? இதைத் தானே சரித்திரம் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

நியாயபூர்வமான தமிழ்மொழிப் பிரயோகம் என்ற ஒரு சட்ட வரைவைக் கொண்டு வந்தார் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க. 200 புத்த பிக்குமார் ரொஸ்மிட் பிளேஸ் என்ற தெருவில் இருந்த அவரின் வீட்டிற்கு முன்னால் சென்று வரைவைக் கிழியுங்கள் என்றார்கள். உடனே கிழித்து விட்டார். காரணம் அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதி தமிழ் மொழியின் நியாயபூர்வமான பாவனைக்கு இடமளிப்பதல்ல. 'சிங்களம் மட்டும்' என்ற வாக்குறுதியே.

எனவே 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற நிலைக்கே நாங்கள் வந்துள்ளோம். எம்மை ஏமாற்ற சதிகள் நடக்கின்றன என்று தெரிந்து கொண்டேன். இதனையே ரணில் விக்கிரமசிங்கவும் உணர்ந்து கொள்ள வேண்டும் – என்றார். (த–5)

### ஈ.பி.டி.பி. உறுப்பினரை விடுவிக்குமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை

தமிழ் அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஈ.பி.டி.பி. உறுப்பினரை விடுதலை செய்யுமாறு அவரது உறவினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஊடாக ஜனாதிபதிக்குக் கோரிக்கை முன்வைத்துள்ளனர். யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மு.கோமகனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, அவரது உறவினர்களால் வடக்கு மாகாண சபை முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சரிடம் மனுவையும் அவர்கள் கையளித்தனர்.

கோமகன் கடந்த 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு மகஸின் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார். மக்கள் பிரதிநிதியாக இருந்த காலத்தில் அவர் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை மக்களிடையே கடும் அதிருப்தியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கோமகனை விரைவாக விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 320 இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும், என்று தெரிவிக்கும் மனுவை உறவினர்கள் முதலமைச்சரிடம் கையளித்தனர். (த–5)

### இலங்கையரின் 58.3 மில்லியன் டொலர் சுவிஸ் வங்கிகளில்

சுவிஸ் வங்கிகளில், இலங்கையைச் சேர்ந்தவர்களால் 58.3 மில்லியன் டொலர் பணம் இரகசியமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவிஸ் லீக்ஸ் வெளியிட்டுள்ள தகவலின்படி, இலங்கையைச் சேர்ந்த 92 வாடிக்கையாளர்களால் சுவிஸ் வங்கிகளில் 129 கணக்குகள் பேணப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த–5)

# ஏகமனதாக நிறைவேறியது இனப்படுகொலை பிரேரணை

யாழ்ப்பாணம், பெப். 11

இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டுக் கொண்டிருப்பது, சர்வதேச சட்டங்களுக்கு அமைய இனப்படுகொலை என்றும், இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சர்வதேச விசாரணை நடத்தவேண்டும் எனக் கோரும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனினால் முன்மொழியப்பட்ட பிரேரணை, வடக்கு மாகாணசபையில் ஆளும் – எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடக்குமாகாணசபையின் 22 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போது, கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்டு நீண்ட இழுபறிப்பட்ட இன அழிப்புத் தொடர்பான பிரேரணை, வடக்கு மாகாண முதலமைச்சரினால் நேற்று சபையில் முன்மொழியப்பட்டது.

**புதிய பிரதம செயலாளருக்கு வரவேற்பு**

வடக்கு மாகாணசபையின் அமர்வுகளுக்கு பிரதம செயலாளர் இதுவரையில் பங்கெடுப்பதில்லை. வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் முதல் நாளில் மாத்திரமே முன்னைய பிரதம செயலாளர் வருகை தந்திருந்தார். ஆனால் புதிய பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட அ.பத்திநாதன், நேற்றைய தினம் இடம்பெற்ற சபை அமர்வில் முழுமையாகப் பங்கெடுத்திருந்தார்.

இவரை வரவேற்று பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் கருத்துத் தெரிவித்தார். இதன்போது ஏனைய உறுப்பினர்கள் மேசையில் தட்டி, வரவேற்றனர்.

**ஒன்றரை மணி நேரம் பேச்சு**

முதலமைச்சர் குறித்த பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, தமிழில் அந்தப் பிரேரணையைக் கொண்டு வரவேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டார். சுமார் அரை மணிநேரம் இதற்காக எடுத்துக் கொண்டார். இதன் பின்னர் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட பிரேரணை உறுப்பினர்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. அதனை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தனக்கே



உரிய பாணியில் சபையில் சமர்ப்பித்தார். ஆங்கிலமொழி மூல பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கு முதலமைச்சர் ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டார்.

**சலசலப்பு**

முதலமைச்சர் பிரேரணையைச் சபையில் சமர்ப்பித்த பின்னர், ஆளும் கட்சியான கூட்டமைப்பு உறுப்பினர்கள் எல்லோரும் வழிமொழிவதற்காக எழுந்தனர். இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர், க.விந்தன், நெடுந்தீவில் இடம் பெற்ற படுகொலை தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. அதனை இதில் உள்ளடக்கவேண்டும்– என்றார். இதனைத் தொடர்ந்த வவுனியா மாவட்ட உறுப்பினர் லிங்கநாதன், ஒதியமலையில் இடம் பெற்ற படுகொலை இதில் உள்ளடக்கப்படவில்லை. அதனையும் உள்ளடக்க வேண்டும் – என்றார்.

இதன்போது அமைச்சர் டெனீஸ்வரன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர், அதனை உள்ளடக்கலாம். தற்போது இந்தப் பிரேரணையை வழிமொழியலாம் என்று தெரிவித்தார். இதற்கு அவைத் தலைவரும் இணங்கினார்.

**ஈ.பி.டி.பியை நீக்கவேண்டும்**

இதன்போது, எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், ஆரம்பத்தில் இந்தப் பிரேரணையை ஆதரிக்க நினைத்திருந்தேன். ஆனால் எமது கட்சியாகிய ஈ.பி.டி.பியின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை தேவையற்ற விதத்தில் – எனக்குத் தெரிந்து, தவறு செய்யாத எமது கட்சியின் பெயரை உள்ளடக்கியுள்ளனர். மேலும், நீண்ட ஆங்கில உரை தொடர்பில் பதில் வழங்க கால அவகாசம் தேவை என்று கேட்டார். இதன்போது, வடக்கு முதலமைச்சர் மற்றும் அவைத் தலைவர் இருவரும், ஈ.பி.டி.பி. என்ற பெயரை நீக்க இணங்கினர். இதனைத் தொடர்ந்து அவரும் ஆதரிப்பதாக எழுந்து நின்றார்.

**முஸ்லிம் காங்கிரஸ் மௌனம்**

எதிர்க்கட்சியின் சார்பில், சி.தவராசா மற்றும் இ.அங்கஜன் ஆகியோர் சபைக்கு வரவில்லை. சபைக்கு வந்தவர் களில், றிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை சேர்ந்த ஜனோபர், ஈ.பி.டி.பியின் தவநாதன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தர்மபாலா ஆகியோர் எழுந்து நின்றனர். அந்த வேளையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ரயீஸ் மற்றும் ஜெயதிலக ஆகியோர் எழுந்து நிற்கவில்லை.

ஆனாலும் பிரேரணை எவரது எதிர்ப்பும் இன்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக அவைத் தலைவரினால் அறிவிக்கப்பட்டது.

(த–5)

# ஒரு தொடர், ஒரு கிண்ணம் ஆனால் இரண்டு தொடக்க விழாக்கள்



உலகக்கிண்ணத் தொடருக்காக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண், நியூஸிலாந்தின் கிறைஸ்ட் சேர்ச் என இரு மைதானங்களில் ஒரே நேரத்தில் தொடக்க விழாக்கள் நடைபெறவுள்ளன.

சர்வதேச கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபையின் 11வது உலக்கிண்ணத் தொடர் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்தில் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. மார்ச் மாதம் 29ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில் மொத்தமாக 49 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதற்கான தொடக்கவிழா நாளை ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து என இரு நாடுகளிலும் இலங்கை நேரப்படி முற்பகல் 11 மணிக்கு நடக்கவுள்ளது.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ணில் உள்ள சிட்னி மையர் மியூசிக் பவுல் என்ற திறந்த வெளி மைதானத்தில் நடைபெறும் ஒரு விழாவில் உலக்கிண்ணத் தொடரில் பங்குபற்றும் வீரர்கள், முன்நாள் வீரர்கள், பிரபல்ய நட்சத்திரங்கள் எனப் பலரும் கலந்து கொள்கின்றனர். தொடக்க விழாவின் இறுதியில் ஆஸ்திரேலிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகளும் வாணவேடிக்கைகளும் நடைபெறவுள்ளன. மொத்தம் முப்பதாயிரம் பேர் வரையில் அமரும் இந்த மைதானத்தில் தொடக்க விழாவைக் காணவரும் ரசிகர்களுக்கு கட்டணம் எதுவும் கிடையாது.

ஆஸ்திரேலியாவில் தொடக்க விழா நடக்கவிருக்கும் அதே நேரத்தில் நியூஸிலாந்தின் கிறைஸ்சேர்ச் மைதானத்திலும் இரண்டாவது தொடக்க விழா நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிறைஸ்சேர்ச் நகர் கடந்த 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

# பொலார்ட், பிறாவோ விடயத்தில் ஏமாந்துவிட்டோம்



உலகக்கிண்ணத் தொடருக்கான மே.இ.தீவுகள் அணியில், நம்பிக்கையான சகலதுறை வீரர்களான போலார்ட், பிறாவோ ஆகியோர் சேர்க்கப்படாதது குறித்து உலகின் தலைசிறந்த நட்சத்திரங்கள் பலர் தமது கருத்துக்களை தெரிவித்து வந்த நிலையில் மே.இ.தீவுகளின் தற்போதைய அணித்தலைவரான ஹோல்டர் பொலார்ட், பிறாவோ விடயத்தில் மௌனம் கலைத்துள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்; போலார்ட், பிறாவோ இருவரும் இல்லாதது மிகப்பெரிய இழப்பு போலார்டு, பிறாவோ இருவரும் உலகின் மிகச்சிறந்த நட்சத்திரங்கள். அவர்களைத் தேர்வு செய்வதும், செய்யாததும் எங்கள் கையில் இல்லை. நான் தேர்வாளரும் அல்ல. பரிந்துரை செய்பவரும் அல்ல. இருவரும் இல்லாதது மே.இ.தீவுகளுக்கு மிகப்பெரிய சோர்வைத் தந்துள்ளது. ஆனால் இதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். இதையே சிந்தித்து கொண்டிருந்தால் சாதிக்க முடியாது. கிண்ணத்தை வெல்வதற்கான அடுத்த கட்ட முயற்சிகளை பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளேன். கெயில் மிகச்சிறந்த அதிரடி ஆட்டக்காரர். எனது நம்பிக்கையும் அவரே. அவரையே பெரும் பலமாக நம்பியுள்ளேன். அணியில் உள்ள அனுபவ வீரர்கள் உட்பட அனைவருடனும் நல்ல உறவை பேணி வருகிறேன் தற்பொழுது அணிக்குள் பிளவுபாடுகள் இல்லை. ஆனால் அணிக்கு வெளியே மனக்கசப்புக்கள் உள்ளன – என்றார்.



# சுற்றுலாத்துறையை சுழற்றும் உலகக்கிண்ணம்

உலகக்கிண்ணத் தொடரை முன்னிட்டு இந்தியாவில் இருந்து இதுவரை சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து செல்ல முன்பதிவு செய்துள்ளனர் என இந்திய சுற்றுலாத்துறை தெரிவித்துள்ளது. இது கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் 37 சதவீத அதிகரிப்பாகும்.

இதனால் இந்தியாவில் உள்ள சுற்றுலா ஏற்பாட்டு நிறுவனங்கள் உற்சாகமடைந்துள்ளன. இந்தியா – பாகிஸ்தான் இடையிலான ஆட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. அதனை நேரில் பார்க்கவே இந்திய ரசிகர்கள் பெரும்பாலானோர் ஆர்வம் காட்டுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக கோடை விடுமுறை காலத்தில்தான் சுற்றுலா நிறுவனங்கள் மிகவும் மும்முரமாக செயல்படும். ஆனால் இப்போது உலகக்கிண்ணத் தொடரை முன்னிட்டு பல முன்னணி சுற்றுலா நிறுவனங்கள் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றன. (ரி)

## இன்றைய ஆட்டங்கள்

ICC CRICKET WORLD CUP 2015

இலங்கை - சிம்பாப்வே
இலங்கை நேரப்படி (காலை 3.30 மணி)

நியூஸிலாந்து - தென்னாபிரிக்கா
இலங்கை நேரப்படி (காலை 3.30 மணி)

இங்கிலாந்து - பாகிஸ்தான்
இலங்கை நேரப்படி (காலை 9.00 மணி)

ஆஸ்திரேலியா - ஐ.அ.இராச்சியம்

### பயிற்சி ஆட்டம் 5

இந்தியா 364/5 (50 ov)
ஆப்கான் 211/8 (50 ov)

இந்தியா 153 ஓட்டங்களால் வெற்றி

1 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| ஆர்.சர்மா 150 (122) | எச்.ஹசன் 1 |
| ஏ.ரஹானே 88 (61) | எம்.நபி 1 |

2 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 60 (85) | எம்.சர்மா 2 |
| [illegible] 44 (72) | [illegible] 2 |

### பயிற்சி ஆட்டம் 6

ஸ்கொட்லாந்து 296/6 (50 ov)
அயர்லாந்து 117 (27 ov)

ஸ்கொட்லாந்து 179 ஓட்டங்களால் வெற்றி

1 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 103 (108) | [illegible] 3 |
| [illegible] 58 (70) | [illegible] 2 |

2 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 37 (44) | [illegible] 4 |
| [illegible] 23 (34) | [illegible] 3 |

# தொடரும் ஆதிக்கம்




வெற்றிக் கிண்ணத்துடன் பொன்டிங்

ஆபிரிக்க கண்டத்தில் ஆட்டம். 2003 ஆம் ஆண்டு நடந்தது எட்டாவது உலகக் கிண்ணம். மாற்றங்கள் எதுவும் புதிதாக உட்புகுத்தப்படவில்லை. 14 அணிகள். இரண்டு குழுக்கள். சர்சையைக் கிளப்பிய சூப்பர் சிக்ஸ் முறைமை.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, கென்யா, நமீபியா, கனடா, இங்கிலாந்து, பங்களாதேஷ் நெதர்லாந்து. 7 அணிகள் ஒரு குழுவில். லீக் ஆட்டத்தில் ஒவ்வொரு அணியும் மற்றைய 6 அணியுடன் மோத வேண்டும். குழுவில் முதல் மூன்று இடங்கள் பிடிக்கும் அணிகள் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தகுதி.

## லீக் ஆட்டம்

ஆபிரிக்க மண்ணில் ஆட்டம். இதனால் ஆபிரிக்கா மேற்கிந்தியத்தீவுகள் மோதலுடன் தொடங்கியது போர். பெப்ரவரி 9ஆம்திகதிமுதல்ஆட்டம்.ஆரம்பமேசறுக்கியது ஆபிரிக்காவுக்கு. மேற்கிந்தியத் தீவுகள் அரும்பொட்டில் 3 ஓட்டங்களால் வெற்றியை தனதாக்கியது. இந்தத் தொடர் முழுவதும் இலங்கை ஆதிக்கம் செலுத்தியது. அதிர்ச்சிகளைக் கொடுத்தது – வாங்கியும் கொண்டது.

நியூஸிலாந்துடனான முதலாவது ஆட்டத்திலேயே 47 ஓட்டங்களால் வெற்றியை தன்வசப்படுத்தியது. ஜெயசூரியாவின் சதம் கைகொடுத்தது. பங்களாதேஷ் உடனான ஆட்டத்தில் சாதனை படைத்தது இலங்கை. துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷுக்கு களமிறங்கிய முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே அதிர்ச்சி.

சமிந்தவாஸ், முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே ஹற்றிக் வீழ்த்தினார். 124 ஓட்டங்களுடன் சுருண்டது. பதிலளித்து ஆடிய இலங்கை இலக்கைக் கொடுக்காமல் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. கத்துக்குட்டி கனடாவுடன் மோதியது இலங்கை. நாணயச் சுழற்சியில் வென்றது. பந்து வீச்சை தேர்வு செய்தது. பரிதாபம் கனடா. 36 ஓட்டங் களுக்குள் சுருண்டது. மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கைப் பதிவு இன்று வரை. பதிலுக்கு ஆடியது இலங்கை. ஓர் இலக்கை பறிகொடுத்தது. கனேடிய அணியில் இலங்கைத் தமிழன். சன்ஜன் பந்து வீச்சில் சரிந்தார் சனத். முடிவில் ஒன்பது இலக்குகளால் வென்றது இலங்கை. மேற்கிந்தியத்தீவுகளையும் சரித்தது இலங்கை. இந்த ஆட்டத்தில் இலங்கை நூதனமுறையில் திருட்டைக் கையாண்டது. சர்வானின் மண்டையை உடைத்து வெளியேற்றினார் டில்ஹார பெர்னாண்டோ. இதனால் மேற்கிந்தியத் தீவுகளைக் கட்டுப்படுத்தி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

கென்யாவுடனான ஆட்டத்தில் அதிர்சி தோல்வி இலங்கைக்கு. 53 ஓட்டங்களால் கென்ய மண்ணில் இலங் கைக்கு அவமானம். இதனால் சுப்பர் சிக்ஸ் நுழைவு இறுக்கம். இந்த நிலையில் இறுதி லீக்கில் ஆபிரிக்காவுடன் அதன் சொந்த மண்ணில் மோதியது இலங்கை. முதலில் ஆடியது இலங்கை. 9 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது. மழை வந்தது. ஆட்டம் 45 பந்துப் பரிமாற்றங்களில் மட்டுப்படுத்தப்பட்டது. வெற்றி இலக்கு 230 ஆக நிர்ணயம். களத்தில் பவுச்சர் – குளூஸ்னர். 44.5 ஆவது பந்தை முரளி வீசினார். விளாசினார் பவுச்சர். ஆறு ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது. ஓட்ட எண்ணிக்கை 229 ஆகியது. ஆட்டம் சமநிலை. அடுத்த பந்தில் ஓர் ஓட்டம் எடுத்தால் ஆபிரிக்கா வெற்றி.

விதி விளையாடியது ஆபிரிக்காவிடம். ஆபிரிக்க அணித் தலைவர் பொலக்கின் தவறான சமிஞ்சை. அடுத்த பந்தை தடுத்தாடினார் பவுச்சர். இறுதியில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இலங்கை இரண்டு புள்ளிகளைப் பெற்றது. சுப்பர் சிக்ஸ் முன்னேறியது. ஆபிரிக்கா மீண்டும் ஏமாற்றம்.

கனடா அணி கத்துக்குட்டி அணி. ஆனால் மேற்கிந்தியத்தீவுகளுடன் திடீர் அதிரடி. முதலில் துடுப்பெடுத்தாடியது கனடா. அந்த அணியின் டேவின்ஸன் 66 பந்துகளில் சதம் கடந்து அசத்தினார். ஆனாலும் ஏனைய வீரர்கள் பொறுப்பான ஆட்டம் இல்லை. இதனால் வெற்றியைப் பெறமுடியவில்லை.

லீக் தொடரில் இந்திய அணி அசத்தல் ஆட்டம். ஆனால் ஆஸி.யுடன் மட்டும்மோசமானஆட்டம்.125ஓட்டங்களுக்குள் சுருண்டது இந்தியா. ஆஸி.க்கு இலகு வெற்றி. எதிரி பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வென்றது.

சிம்பாப்வேயில்கொடூரஆட்சி.இதைக் காரணம் காட்டி அங்கு செல்ல இங்கிலாந்து மறுத்தது. கென்யாவுக்குச் செல்ல நியூஸிலாந்து மறுத்தது. இந்த வாய்ப்புக்களை இரு அணிகளும் பயன்படுத்தின. இதனால் அடுத்த சுற்றுக்குள் நுழைந்தன.

பரிதாபத்துடன் பாகிஸ்தான், இங்கிலாந்து மூடையைக் கட்டின. ஆனாலும் பாகிஸ்தான் வசிம் அக்ரம் சாதனை படைத்தார். 500 இலக்குகளை முதன் முதலில் வீழ்த்திய பெருமையை இந்த உலகக் கிண்ணத்திலேயே அவர் எட்டினார்.

## சுப்பர் சிக்ஸ்



இலங்கை, நியூஸிலாந்து, கென்யா ஒரு குழுவிலிருந்தும் ஆஸ்திரேலியா, இந்தியா, சிம்பாப்வே மற்றைய குழுவிலிருந்தும் வந்தன் மோதலுக்கு. முதலாவது சுப்பர் சிக்ஸ் ஆட்டம் இலங்கை, ஆஸியிடையே. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. 5 இலக்குகளை இழந்து 319 ஓட்டங்களைக் குவித்தது. பதிலளித்த இலங்கையால் 223 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. முடிவு 96 ஓட்டங்களால் தோல்வி.

இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவும் கென்யாவும் மோதியது. 225 ஓட்டங்களைப் பெற்றது கென்யா. பதிலளித்த இந்தியாவுக்கு ஆரம்பம் ஆச்சரியம். 24 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகள் பறிபோனது. கங்குலி பொறுப்பான ஆட்டம். இறுதியில் 6 இலக்குகளால் வெற்றி கிடைத்தது. மூன்றாவது ஆட்டத்தில் நியூஸிலாந்தும் சிம்பாப்வேயும் பலம் பார்த்தன. 252 ஓட்டங்கைளைப் பெற்றது சிம்பாப்வே. நதன் அஸ்ரலின் சதத்தினால் 4 இலக்குகளை இழந்து வெற்றியைப் பெற்றது நியூஸிலாந்து.

இந்தியாவும் இலங்கையும் நான்காவது ஆட்டத்தில் மோதின. முதலில் ஆடியது இந்தியா. 292 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த இலங்கை 109 ஓட்டங்களுடன் படுத்துக் கொண்டது. இந்தியாவுக்கு 183 ஓட்டங்களால் வெற்றி கிடைத்தது. ஆஸியும் நியூஸியும் அடுத்த சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் மோதின. ஆஸி. 208 ஓட்டங்களுக்குள் சுருண்டது. நியூஸி பதிலுக்கு 112 ஓட்டங்களுக்குள் மடங்கியது. கென்யா சிம்பாப்வே ஆறாவது ஆட்டத்தில் பலப் பரீட்சை. சிம்பாப்வேயை சுருட்டியது கென்யா.

இந்தியா, நியூஸிலாந்து ஆட்டத்தில் இந்தியாவுக்கு இலகுவெற்றி. 146 ஓட்டங்களுக்குள் சுருண்டது நியூஸிலாந்து. 3 இலக்குகள் இழந்து வெற்றியைப் பெற்றது இந்தியா. சிம்பாப்வேயுடன் இலங்கை மோதியது. ஆறுதல் வெற்றி இலங்கைக்கு கிடைத்தது. ஆஸி.கென்யா இறுதி சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் மோதல். ஆஸி இறுதியில் வெற்றி.



### 2003 உலகக் கிண்ணம்

#### அதிகூடிய ஓட்டங்கள்

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | ஓட்டங்கள் | கூடிய ஓட்டங்கள் |
|---|---|---|---|
| எஸ்.டெண்டுல்கர் (இந்தியா) | 11 | 673 | 152 |
| எஸ்.கங்குலி (இந்தியா) | 11 | 465 | 112 |
| ஆர்.பொன்டிங் (ஆஸி.) | 11 | 415 | 140 |

#### அதிகூடிய இலக்குகள்

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | இலக்குகள் | சிறந்த பெறுபேறு |
|---|---|---|---|
| எஸ்.வாஸ் (இலங்கை) | 10 | 23 | 6/25 |
| பி.லீ (ஆஸி.) | 10 | 22 | 5/42 |
| ஜி.மெக்ராத் (ஆஸி.) | 11 | 21 | 7/15 |

# அரையிறுதி




ஆஸி., இந்தியா, கென்யா, இலங்கை மயிரிழையில் நுழைந்தது. முதலாவது அரையிறுதி ஆஸியுடன் இலங்கைக்கு அமைந்தது.
முதலில் துடுப்பெடுத்தாடியது ஆஸ்திரேலியா. கில் கிறிஸ்ட் அதிரடி ஆட்டம். ஆறாவது பந்துப் பரிமாற்றத்திலேயே அரவிந்த டீ சில்வா அறிமுகம்.சுழல்பந்து.திணறிய கில்கிறிஸ்,சங்காவிடம் பிடிகொடுத்தார். ஆட்டமிழப்புக் கோரிக்கை. நடுவர் ஆட்டமிழப்பு வழங்கவில்லை. பெருந்தன்மையுடன் கில்கிறிஸ்ட் மைதானத்திலிருந்து வெளியேறினார். ஆரம்பத்தில் தடுமாறியது ஆஸி. மத்திய வரிசையில் சைமன்ஸ் மாத்திரம் நிலைத்துக் கொண்டார். இறுதியில் 212 ஓட்டங்களை 7 இலக்குகளை இழந்து பெற்றுக்கொண்டது.
பதிலுக்கு தொடங்கியது இலங்கை. ஆரம்பத்திலிருந்தே சரிவு. 38 பந்துப் பரிமாற்றத்தில் 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தது 7 இலக்குகளை இழந்து. களத்தில் சங்கா – சமிந்த வாஸ். வந்தது மழை. இலங்கையிடமிருந்து வெற்றியைப் பறித்தது. இதனால் இறுதி மீண்டும் ஆஸி.க்கு.
இரண்டாவது அரையிறுதியில் இந்தியாவும் – கென்யாவும் மோதியது. ஆட்டம் பலமாக இல்லை. இந்தியா தனது போக்கில் வெளுத்து வாங்கி இறுதிக்குள் நுழைந்தது.

## கொசுறுத் தகவல்

- லீக் தொடருக்கு முன்பாகவே, ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் ஊக்கமருந்து சோதனையில் சிக்கினார். இதனால் அவர் அணியிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஒரு வருட போட்டித் தடையையும் எதிர்கொண்டார்.
- ஸ்பொன்சர் நிறுவனங்களின் சின்னங் களை அணிந்து விளையாடுவது தொடர்பாக இந்திய வீரர்களுக்கும் கிரிக்கெட் சபைக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

சிம்பாப்வேயின் இனவெறி அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்த நாட்டு அணியின் வெள்ளையின வீரர் அண்டி பிளவர், கறுப்பின வீரர் ஹென்றி ஒலங்கா இருவரும் கைகளில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினர். இதனால் உலகக் கிண்ணத் தொடர் முடிந்ததும் இருவரும் நாட்டை விட்டு வெளியேறினர்.



## இறுதி ஆட்டம்



ஆட்டத்துக்கு முன்னர் மழை பெய்தது. அதைக் கவனத்தில் கொள்ளாது நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் கங்குலி, ஆஸியை துடுப்பெடுத்தாட பணித்தார். தவறான முடிவால் விபரீதமான விளைவு வந்தது.
ஆரம்பத்திலிருந்தே ஆஸி வெளுத்து வாங்கத் தொடங்கியது. இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு எங்கே பந்து போடுவது என்று தெரியவில்லை. [illegible]




உதயன் உலகக் கிண்ண கொண்டாட்டம், உங்களுடன். எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை. நீங்கள் பார்த்த உலகக் கிண்ண ஆட்டம் தொடர், நடப்பு உலகக் கிண்ண தொடர்பிலான விமர்சனம்.....

'உலகக் கிண்ண வாசகர் கணை' உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

cricket@uthayan.com
www.facebook.com/
uthayan.print

கேள்விக் கூப்பன்களை எதிர்பாருங்கள்....

தினம் ஒரு பரிசுப் போட்டி
மாபெரும் இறுதிப் போட்டி
அரையிறுதிப் போட்டி

லட்சங்களில் பரிசுகளை வெல்லுங்கள்!!!

நீங்கள் தயாரா?

பரிசுகளை தினந்தோறும் அள்ள

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** விளையாட்டாக பேசும் வார்த்தைகள் வீண் வம்புக்கு வழி வகுக்கும். எனவே கவனமாக இருக்கவும். மறதியால் முக்கிய விடயங்களில் தாமதம் ஏற்படலாம்.

**இடபம்:** கடினமாக உழைத்து வெற்றி பெறுவீர்கள். உங்களின் செல்வாக்கு உயரத் தொடங்கும். குலதெய்வ பிரார்த்தனைகளை முறையாகச் செய்து குடும்ப வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** போட்டியாளர்களின் நெருக்கடிகளைத் தாண்டி வேலைகளைச் சரியாக முடிப்பீர்கள். ஆக்க பூர்வமான எண்ணங்களை நடைமுறைப்படுத்தி முன்னேறுவதற்கான வாய்ப்புகளைத் தேடுவீர்கள்..

**கடகம்:** உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களின் விமர்சனங்களை பெரிதுப்படுத்தாமல் நடந்துகொள்வீர்கள். பொது வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள் கிடப்பில் கிடந்த நல்ல திட்டங்களை மன உளைச்சல் இல்லாமல் செய்யத் தொடங்குவீர்கள்.

**சிங்கம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளுடன் முக்கிய விடயங்கள்ள செயற்படுத்தி குடும்பத்தில் அமைதி கெடாமல் பார்த்துக்கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

**கன்னி:** மேலதிகாரிகளின் ஆதரவு குறைவாக இருப்பதால் அவர்களைப் பற்றி வெளிப்படையாகப் பேச வேண்டாம். மேலும் உங்களின் கோரிக்கைகள் சற்று தாமதமாகப் பரிசீலிக்கப்படும்.

**துலாம்:** தீயவர்களை இனம் கண்டு அவர்களிடமிருந்து விலகியிருப்பது நல்லது. கூட்டாளிகள் உங்கள் முடிவுகளை ஆமோதிப்பதுபோல் தெரிந்தாலும் முதுகுக்குப் பின்னால் தவறாகப் பேசுவார்கள்.


**விருச்சிகம்:** இரகசியங்களை எவரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். புதிய பதவிகள் தேடி வரும். எதிரிகள் உங்களிடம் அடங்கி நடப்பார்கள். மக்களின் ஆதரவு எதிர்பார்த்த அளவுக்குக் கிடைத்து உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.


**தனுசு:** உங்கள் பெயரும், புகழும் உயரும். உங்களின் திறமைகள் பளிச்சிடும். சக கலைஞர்களுடன் ஒற்றுமையாகப் பழகுவீர்கள். அவர்களிடமிருந்து நல்லுதவிகளைப் பெறுவீர்கள். அநாவசிய பயணங்களைச் செய்ய வேண்டாம்.

**மகரம்:** உறவும், சுற்றமும் அனுகூலமாக இருக்கும். அவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்வீர்கள். உங்கள் பெயரில் அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**கும்பம்:** செய்தொழிலில் உங்களை முன்னிலைப் படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் உருவாகும். உங்களுக்கு கீழ் வேலை செய்பவர்களின் சிறுசிறு தவறுகளைக் கண்டுகொள்ள மாட்டீர்கள்.

**மீனம்:** எல்லா விடயங்களுக்கும் உடனடி தீர்வைக் காண்பீர்கள். நண்பர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும்.










## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

யாராவது உங்களை தொடும்போது அது உங்களுக்கு தெரியாமல் போனா அது அறியாமை.
யாராவது தொடும்போது ஓர் உணர்வு உங்களுக்கு வந்தா அது லவ்...
யாருமே தொடாதபோது உங்களுக்கு உணர்வு வந்தா உடனே ஓடுங்க அது நிச்சயம் பேயாத்தான் இருக்கும்.

## ஆண் வயிற்றில் கர்ப்பப்பை



நபரொருவரின் வயிற்றில் கர்ப்பப்பை இருப்பதை கண்டு மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்த சம்பவம் பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

பிரிட்டனின் லங்காஷயர் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்விபரீத நிலையை எதிர்கொண்டுள்ளார். சிறுநீருடன் இரத்தம் வெளியானதைத் தொடர்ந்து இவர் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் பரிசோதனையை மேற்கொண்டபோதே இவருக்கு கர்ப்பப்பை இருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த நோய் மிகவும் அரிதாக ஏற்படுமென்றும் இவ்வாறானவர்கள் வெளியில் ஆண் உறுப்புடனும் உள்ளே பெண்களுக்கான கர்ப்பப்பையுடனும் காணப்படுவரென்றும் மருத்துவர்கள் கூறியுள்ளனர். கர்ப்பப்பையை சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றுவதற்கு உடன்படுமாறு வைத்தியர்கள் குறித்த நபரிடம் தெரிவித்துள்ளனர்.

## வாடிப்போன அனுஷ்கா

அனுஷ்கா தமிழில் வெற்றிப் படங்களை அதிகளவு கொடுக்கவில்லை. இருந்தாலும் அனுஷ்காவுக்கு ரசிகர்கள் இருக்கிறார்கள் என்பது தான் உண்மை. அந்த ரசிகர்களை, லிங்கா, என்னை அறிந்தால் ஆகிய இரு திரைப் படங்களும் திருப்திப்படுத்தவில்லை. இரண்டு திரைப்படங்களிலுமே தோற்றத்திலும் கதாபாத்திர வடிவமைப்பிலும் அவருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லை. இவை தமிழ் திரைப்படங்களில் உள்ள நிலைஎன்றால்,அனுஷ்காபெரிதாக நம்பியிருக்கும் பாகுபலி திரைப்படத்தைப் பற்றி தெலுங்கு திரையுலகில் கடந்த சில நாட்களாக ஒரு வதந்தி பரவியது.

அதாவது இரண்டு பாகங்களாக எடுக்கப்பட்டுள்ள பாகுபலி திரைப் படத்தின் முதல் பாகத்தில் அனுஷ்கா இடம்பெற மாட்டார், இரண்டாவது பாகத்தில் தான் அனுஷ்கா வருகிறார் என்று தகவல் பரவியது. ஆனால், இப் படிப்பட்ட வதந்தியை திரைப்படத்தின் நெருங்கிய வட் டாரங்கள் மறுத்துள்ளன. திரைப்படத்தின் முதல் பாகத்திலேயே அனுஷ்கா, தமன்னா, பிரபாஸ், ராணா என அனைத்து நட்சத்திரங்களும் வருகிறார்கள்.பரவிவரும்வதந்தியும் உண்மையல்ல என்று தெரிவித்திருக்கிறார்களாம். இனி, இந்த திரைப்படத்தைப் பற்றி சம்பந்தப் பட்டவர்கள் யாராவது பேசவும் தடைவிதித்திருக்கிறார்களாம்.

அனுஷ்காவைச் சுற்றி மட்டுமே கடந்த சில காலமாக ஏன் இப் படிப்பட்ட செய்தி பரவி வருகிறது என்பது புரியாத புதிராக உள்ளது என அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் புலம்புகின்றன.



## பறவைக் காய்ச்சல்



உலகை உலுக்கியெடுக்கும் நோய்களுள் பறவைக் காய்ச்சலும் முக்கிய இடம் பெறுகின்றது.

இந்தப்பறவைக்காய்ச்சலை குறிப்பிட்ட காலத்தில் ஓர் இடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்கு நகரும் பறவைகளே பரப்புவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதாவது காட்டில் வாழும் பறவைகளே இந்தக் காய்ச்சலுக்கு அதிகளவில் காரணமாகத் திகழ்கின்றன. இதற்குச் சான்றாக ஐக்கிய இராச்சியத்தில் உள்ள வாத்துப் பண்ணை ஒன்றில் பறவைக் காய்ச்சல் ஏற்படுவதற்கு ரஷ்யாவில் இருந்து வந்த காட்டுப் பறவைகள் காரணமாக இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை ரஷ்யா, கிழக்கு ஆசியா, வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வைரஸ் காய்ச்சல் தொற்றுவதற்கும் இடம் பெயர்ந்த காட்டுப் பறவைகளே காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஏகமனமாக நிறைவேற்றப்பட்டது கிழக்கு மாகாண சபை 'பட்ஜெட்'

மட்டக்களப்பு, பெப், 11

கிழக்கு மாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் நேற்றுக் காலை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டிருந்த ஹாபீஸ் நஸீர் அஹமட் முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் முன்னிலையில் முதலமைச்சர் செயலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாண கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் விவசாய அமைச்சராக மாகாண சபையின் சட்ட ஆலோசகரான சட்டத் தரணி ஏ.எம். ஹனீப்லெப்பை முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அதன் பின்னர் கிழக்கு மாகாண சபை யின் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம் பெற்றது. தொடர்ந்து தவிசாளர் ஆரிய வதி கலபதி தலைமையில் சபை அமர்வுகள் இடம்பெற்றன. இதன்போது புதிய முதலமைச்சர் மற்றும் புதிய மாகாண சபை உறுப்பினரான அலிசாஹிர் மௌலானாவுக்கு சபை உறுப்பினர்களால் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து 2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் மாகாண முதலமைச்சர் ஹபீஸ் நஸீர் அஹமட்டால் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு செலவுத் திட்டத்துக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முதலமைச்சர் முன்வைத்தார்.

வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பைத் தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சீ.தண்டாயுதபாணி "தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்த வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கும்" என்று தெரிவித்தார்.

அதனையடுத்து வாக்கெடுப்பு எதுவுமின்றி கிழக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

இந்த வரவுசெலவுத்திட்டம் இதற்கு முன் னர் இடம்பெற்ற மூன்று சபை அமர்வுகளில் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-10)

## கிழக்கு மாகாண சபையில் அமளி சபை நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, பெப்.11

கிழக்கு மாகாண சபை அமர்வில் ஏற்பட்ட அமளியால் சபை அமர்வு நேற்று பத்து நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபை அமர்வு நேற்றுக் காலை ஆரியபதி கலபதி தலைமையில் நடைபெற்றது. இதன்போது வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்துக் கட்சிகளின் குழுத் தலைவர்களுக்கும் சபையில் உரையாற்ற தலா 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் குழுத் தலைவர் தயா கமகே உரையாற்றுகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமையும் கட்சியையும் அவதூறாகப் பேசியுள்ளார்.

அத்துடன் 'முடியுமாக இருந்தால் நாடாளுமன்றத் தேர்தலில் ரவூப் ஹக்கீம் கண்டியில் போட்டியிட்டு வெற்றி பெறட்டும்' என்று சவால் விடுத்தார்.

தயா கமகேயின் உரையால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆத்திரமடைந்ததுடன் அவரைக் கண்டிக்கவும் செய்தனர்.

இதனால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது. அதனை அடுத்து சபை நடவடிக்கைகளை தவிசாளர் பத்து நிமிடங்கள் ஒத்திவைத்தார். (வ-10)

## மோசடியுடன் தொடர்புடைய இருவர் இன்ரபோலால் கைது

### இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றவர்களாம்

கொழும்பு, பெப்.11

தேசிய இறைவரித் திணைக் களத்தில் இடம்பெற்றிருந்த 3.57 பில்லியன்கள் பெறுமதி சேர்வரி (வற்) மோசடியில்சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும், இலங்கையில் இருந்து மலேசியாவுக்குத் தப்பிச் சென்றிருந்த முக்கிய பங்காளிகள் இருவர் சர்வதேசப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேசப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள குறித்த இருவரையும் நாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பாக இரகசியப் பொலிஸின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் மலேசியாவுக்குச் சென்றுள்ளதாக உயர் மட்ட பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆசியாவிலேயே பெருத்த பெறுமதி சேர் வரி மோசடி தொடர்பான மேலும் 6 பேர் நாட்டிலிருந்து தப்பித்துச் சென்றுள்ளதாகவும் அந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

குறித்த 6 பேர்களிடையே பெறுமதி சேர்வரி மோசடியின் சூத்திரதாரியான குதுப்தீன் என்பவரும் இருப்பதோடு அவர் உள்ளிட்ட 6 பேரையும் கைது செய்வது தொடர்பாக சர்வதேச பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-22)

## புலிகளின் கடற்படைக் கலங்களை பார்த்து இந்திய கடற்படை அதிர்ச்சி

கொழும்பு, பெப். 11

விடுதலைப் புலிகளின் கடற்படைக்கலங்களைப் பார்த்து, இந்தியக் கடற்படையினர் ஆச்சரியத்துக்குள்ளாகினர். அது மட்டுமல்லாமல் கடற்புலிகளால் சொந்தமாக உருவாக்கப்பட்ட பல்வேறு போர்க்கப்பல்களையும் பார்த்து அவர்கள் வியந்துள்ளனர்.

இந்தியக் கடலோரக் காவல் படையின் ரோந்துக் கப்பலான வைபவ், கடந்த மாதம் 28 ஆம் திகதிதிருகோண மலைத் துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தது. கப்பல் திருகோண மலையில் தரித்துநின்ற போது, இந்திய கடலோரக் காவல் படை யினர், திருகோணமலையிலுள்ள கடற்படைத் தளத்துக்குச் சென்றனர். அங்கு கடற்படையினரால், விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப் பட்ட போர்க் கப்பல்கள் உள்ளிட்ட பல் வேறு ஆயுதத் தளபாடங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கடற்புலிகள் உருவாக்கிய கடற் கலங்கள் தொடர்பாக கடற்படை அதிகாரி ஒருவர், இந்தியக் கடலோரக் காவல் படையினருக்கு விளக்கிக் கூறியிருந்தார். அவற்றை அவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துள்ளனர். அத்துடன் கடற் புலிகளின் தொழில் நுட்பங்களையும் அவர்கள் வியந்துள்ளனர். இந்தியக் கடலோ ரக் காவல் படைக் கப்பலான வைபவ் கடந்த 2ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது. (வ-5)



## ஆன்மிக வகுப்புகள்

யாழ்ப்பாணம்.பெப்.11

யாழ்ப்பாணத்திலுள்ள சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் ஆன்மிக வகுப்புக்கள் பிரதி புதன்கிழமை தோறும் மாலை 4 மணி தொடக்கம் 6.15 மணிவரை செட்டித்தெரு நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த ஆன்மிக வகுப்புக்களில் பஜகோவிந்தம், மந்திர உச்சாடனம் ஆகிய வகுப்புக்களை பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்யா வழங்குவார். ஆர்வமுடையவர்கள் இந்த ஆன்மிக வகுப்புக்களில் பங்குபற்றமுடியும். (வ-14)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி பல்வேறு கல்விச்செயற்பாடுகளால் சிறப்புற்று 60 ஆவது அகவையில் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள எமது அன்புச் சித்தப்பா

**குமாரசாமி சிவானந்தம்**

அவர்கள் ஓய்வு காலத்திலும் கல்விப் பணி மற்றும் ஆன்மீகப் பணியினை மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல மாவடியான் தாள் பணிந்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துபவர் : இ. கோகிலன்
உரிமையாளர்: அபிலா ரெக்ஸ், சாவகச்சேரி,
உபசெயலாளர்: கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி,
இணைப்பாளர்: லயன்ஸ் கழகம், சாவகச்சேரி.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



திருமதி
**பசுபதி தவராசா**
(BA, PGDG-SLTS-I)
ஆசிரிய ஆலோசகர் இந்துசமயம்)

05.08.1984இல் ஆசிரியராகக் கல்விப் பணியில் இணைந்து கொண்டு 01.07.1998 இல் இருந்து முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகராக தன்னிகரில்லாத சேவையாற்றி இன்றுடன் (11.02.2015) தனது சேவையை நிறைவு செய்து ஓய்வுபெற்றுச் செல்லும் அவரைப் பாராட்டுவதுடன், சீரும் சிறப்பும் பெற்றுப்பல்லாண்டு வாழ வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

Congratulations

வலயக்கல்விப்பணிப்பாளர்,
பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள்,
உதவிக்கல்விப்பணிப்பாளர்கள்,
ஆசிரிய ஆலோசகர்கள்.
வலயக்கல்விப் பணிமனை முல்லைத்தீவு.

(56657)(3,7,5)



**நோயாளர் நலன்புரிசங்கம்**
**ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை**
**சிற்றுண்டிச்சாலை நிர்மாணிப்பதற்கான கேள்வி கோரல்**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம், வைத்தியசாலை வளாகத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரர்களிடம் கேள்வி கோரப்படுகின்றது. கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் வைத்தியசாலை அலுவலகத்தில் வேலை நாள்களில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:11.02.2015 தொடக்கம் 25.02.2015 பிற்பகல் 3.00 மணி வரை
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:26.02.2015 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி: 26.02.2015 பிற்பகல் 3.00 மணி

கேள்விகள் குறிக்கப்பட்ட காலத்தில் கிடைக்கக்கூடியவாறு இணைப்பிரதிகளில் (Original, Duplicate) தயாரிக்கப்பட்டு இரண்டு பிரதிகளையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு செயலாளர், நோயாளர் நலன்புரி சங்கம், ஆதார வைத்திய சாலை, தெல்லிப்பழை. என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சிற்றுண்டிச்சாலை நிர்மாணிப்பதற்கான கேள்வி கோரல் என்று எழுதப்படல் வேண்டும்.

01.கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
02.இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கணியவியலாற்றலையும் (SLS: 573: 1982) நியம அளவீட்டு முறைமையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
03.கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04.மேலதிக விவரங்களை ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | வேலையின் விவரம் | அண்ணளவான மதிப்பீடு தொகை (மில்லியன் ரூபா) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த (ICTAD) தரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | சிற்றுண்டிச்சாலை நிர்மாணம் | 5.5 மில்லியன் | C7 அல்லது அதற்கு மேல் | மூன்று மாதங்கள் | 55.000 | 2.000 |

நோயாளர் நலன்புரிசங்கம்,
ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை. (56655)(4.3.7)

லயன் சி.ஹரிகரன்
செயலாளர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



மண்ணில்
02.03.1922

விண்ணில்
12.01.2015

**திருமதி நகுலேஸ்வரி சின்னத்துரை**
(வெள்ளையம்மா)

கடந்த 12.01.2015 இல் இறைபதம் எய்திய எமது அன்புத் தாயார் திருமதி நகுலேஸ்வரி சின்னத்துரை அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (11.02.2015) புதன்கிழமை அமுதாம்பிகை மணிமண்டபத்தில் (வீரமாகாளி அம்மன் கோவில் நல்லூர்) மதியம் 12 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயாரின் இறுதி நிகழ்வில் கலந்து பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காத வாழ்வில் உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம் பெற்றதாயின்றி வேறில்லையே

49, பென்ரிக்கோஸ் லேன்,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 668 9565


# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.11

கிளிநொச்சி செம்பன்குன்று அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் தலைமை யில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப் பினர் பசுபதி அரியரத்தினம்கலந்துகொள்வார். (வ)

◆◆◆

கிளிநொச்சி பன்னங்கண்டி இ.த.க. பாடசாலை யின் வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடாலை அதிபர் நா.உதயகுமர் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெற உள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராக கிளி நொச்சி கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் நா.குகரா ஜாவும், சிறப்பு விருந் தினர்களாக கரைச்சி கோட் டக்கல்வி பணிப்பாளர் அ.அமிர்தலிங் கம், கிராம சேவையாளர்களான எஸ்.ஜெயச் சந்திரன், சு.இந்திரன் ஆகியோரும்கலந்து கொள்ளவுள்ளனர். (வ–21)

◆◆◆

பாஷையூர் சென் அன்ரனிஸ் மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி ரீ.பேரின்பம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ–135)

◆◆◆

மல்லாகம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் கு.திருச்செல்வம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன், தெல்லிப் பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முகதுல குமாரன், வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் ச.சர்வராஜாவும் கலந்து கொள்வர். (வ)

◆◆◆

மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வெள் ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதா னத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகசண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்த ராசா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி விளையாட்டுத் துறை இணைப்பாளர் லோ.ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர்கலந்து கொள்வர். (வ)

◆◆◆

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெற வுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கஜமுகன் ஹாட்வெயர் உரிமையாளர் திரு.திரு மதி ஈ.எஸ்.பி. நாகரட்ணம் தம்பதியினர் கலந்து கொள்வர். (வ)

◆◆◆

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கணக்காளர் திருமதி கே. பார்த் தீபனும் விசேட விருந்தினர்களாக மானிப்பாய் மக்கள் வங்கி கிளை முகாமையாளர் திருமதி பீ.விசாகன், சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.சிவானந்தராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (வ)


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**மயில்வாகனம் கிருஷ்ணானந்தா**
(முன்னாள் முகாமையாளர், மீன்பிடி கூட்டுத்தாபனம், பேசாலை)

மண்ணில்
24.09.1941

விண்ணில்
02.02.2013

ஈராண்டு போனதப்பா ஈரவிழிகளுடன்-துணை
இன்றி அன்றில் பறவையாய் உள்ளம் வாடுதப்பா
சீர் பெற்று நற்பணி புரிந்த நும் வாழ்வு-இறை
அடியில் நித்தியமாய் வாழுமப்பா
வாழ்வின் நீங்கா நினைவலைகளுடன் - உம்
ஆத்மா நிறைந்த சாந்தி பெற துதிக்கின்றோம்

மனைவி
திருமதி விக்கினேஸ்வரி கிருஷ்ணானந்தா,
குடும்பத்தினர்.

## நீங்கா நினைவுகளுடன் ஆண்டொன்றானது அம்மா



அமரர் **இராசா இராசம்மா**

மண்ணில்
04.04.1924

விண்ணில்
23.01.2014

இமை மூடித் திறப்பதற்குள்
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகளுடன்

குடும்பத்தினர்.
பூந்தோட்டம்,
வவுனியா.

## இரண்டாம் ஆண்டு சிரார்த்த தினம்



மலர்வு
24*06*1938

உதிர்வு
03*02*2013

திதி:
11.02.2015

**திருமதி இராஜகோபால் பரமேஸ்வரி**

குடும்பத்தின் குலவிளக்காய்!
குவலயத்தின் அகல் விளக்காய்!!!
நல்ல தாயாய்! நல்ல குடும்பத்
தலைவியாய்!
நலமுடன் வாழ்ந்து
பார்போற்றும் மக்கள்
செல்வத்தை
பார்தனில் விளங்க வைத்தீர்!
அகல் விளக்கு அணைந்தது தான்
அனைவரினதும் அகத்திலும்
கண்ணீர் துளியாய்
விளங்குதம்மா!

வறுவாவளை, திக்கம்,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

என்றும் உங்கள்
நினைவுடன்
குடும்பத்தினர்.

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
19.03.1985

ஆண்டவன் அடியில்
11.02.2007

**செல்வன் பத்மகாந்தன் சஞ்ஸீத்**
(பழைய மாணவன்- சாவகச்சேரி இந்துக்கல்லூரி
S.S.M பொறியியல் கல்லூரி- சேலம், இந்தியா)

ஊர் போற்ற சிறப்புடன்
உத்தமனாய் வாழ்ந்த உன்னை
கடலன்னை வடிவதனில்
காலனவன் கவர்ந்தெடுக்க
கனவான உன் நினைவுடனே
கழிந்ததுவே எட்டு ஆண்டுகள்

"புனிதவாசம்"
மீசாலை கிழக்கு, மீசாலை. (54196)(4.3.7)

குடும்பத்தினர்.
5-4/3, 42 ஆவது லேன்,
கொழும்பு-6

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **முருகேசு மார்க்கண்டு**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மண்ணில்
04.05.1929

விண்ணில்
29.01.2008

திதி: அபரபக்க சப்தமி
11.02.2015

ஆண்டுகள் ஏழது ஓடி மறைந்திட்டாலும்
உங்கள் பிரிவின் துயரமது எம்மை விட்டு மறையாது
ஆற்றிட இயலா வேதனையுடன் - நாம்
உங்கள் நினைவைச் சுமக்கின்றோம் எந்நாளும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற ஆண்டவன் பாதம் பணிகின்றோம்.

கிளானை, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை (56656)(3.7.4)

மனைவி, மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## ஆயுள்வேத மருந்தகக் கட்டடம் திறப்பு இன்று

யாழ்ப்பாணம், பெப்.11

சுதேச வைத்தியத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆயுள்வேத மத்திய மருந்தகக் கட்டடம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலை கருகம்பனையில் திறந்து வைக் கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும், சிறப்பு விருந்தினர் களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் க.விந்தன், பா.கஜதீபன், த.சித்தார்த்தன், வலி. வடக்கு பிரதேச சபைத்தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ–14)

# பெருந்தோட்ட நகரங்களில் கடைகளில் பழைய விலையிலேயே பொருள்கள்

## தோட்டத் தொழிலாளர்கள் அதிருப்தி

கண்டி, பெப்.11

அரசின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களினது விலைகள் குறைக்கப்பட்டுள்ள நிலையிலும் பெருந்தோட்ட நகரங்களையும் தோட்டங்களையும் அண்டிய கடைகளில் பழைய விலைக்கே அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் தோட்டத் தொழிலாளர்கள் அதிருப்தி அடைந் துள்ளனர்.

குறிப்பாக கண்டி, கம்பளை, புசல்லாவை, நுவரெலியா, ஹற்றன், பூண்டுலோயா, ராகலை மற்றும் மாத்தளை போன்ற இடங்களிலேயே இந்த நிலை காணப்படுவதாக மலையக மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்:

"கோதுமை மா, பால்மா, சீனி மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஆனால் மலையக உண வகங்களிலும், பேக்கரிகளிலும் உணவுப் பொருள்களின் விலை குறைக்கப்படவில்லை. இது குறித்து நுகர்வோர் பாதுகாப்புச் சபையும் விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களமும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு விலைக் குறைப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதேவேளை வரவு செலவுத் திட்டத்துக்கு முன்பதாகவே எரிபொருள்களினது விலைகளை அரசு குறைந்திருந்ததோடு அதன்பின்னர் பஸ் போக்குவரத்துக் கட்டணங்களிலும் கட்டணக் குறைப்பை மேற்கொண்டிருந்தது. எனினும் மலையகத்தின் பிரதான போக்குவரத்துச் சேவையான பஸ் மற்றும் குளிரூட்டப்பட்ட பஸ்களிலும் எதுவித கட்டணக் குறைப்பும் இதுவரை இடம் பெறவில்லை.

அத்துடன் மலையகத்தின் பிரதான நகர வர்த்தக நிலையங்களில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் காட்சிப்படுத்தப்படுவது தற்போது குறைவடைந் துள்ளது. எனவே அத்தியாவசியப் பொருள்களின் கட்டுப்பாட்டு விலையை அனுசரித்து வர்த்தகர்கள் விற்பதற்கும், விலை விவரங்களைக் காட்சிப் படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (வ–10)

## அருள் ஒளி தர்சன மாலை

யாழ்ப்பாணம், பெப்.11

டென்மார்க் பிரண்டாபதி அபிராமி அன்னையாரின் அருள் ஒளி தர்சன மாலையும் மாசி மாத விசேட பூசையும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களுடன் யாழ். பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய உத்தியோகத்தர்களும் இணைந்து அண்மையில் சிரமதான நிகழ்வை நடத்தினர். (வ)

## மட்டு. மீள்குடியேற்ற கிராமத்தில் இடம்பெற்ற விபத்தில் பெண் சாவு

மட்டக்களப்பு, பெப்.11

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேப்பவெட்டுவானில் நேற்றுமுன்தினம் காலை இடம் பெற்ற விபத்தொன்றில் பெண்ணொருவர் கொல்லப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இந்தச் சம்பவம் அன்றையதினம் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

செங்கலடி வேப்பவெட்டுவானைச் சேர்ந்த எஸ்.நாகேஸ்வரி (வயது–44) என்ற குடும்பப் பெண்ணே சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார். குறித்த பெண் வேப்பவெட்டுவானில் தனது கடை அருகே நின்றபோது அங்கு வந்த வான் ஒன்று அவருக்கு பின்புறமாக வேகமாகத் திருப்புகையில் வான் சில்லுக்குள் அகப்பட்டு பெண் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வான் கைப்பற்றப்பட்டதோடு வான் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் கரடியனாறு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள குறித்த வானின் சாரதி முன்னாள் அம்புலன்ஸ் சாரதியாக இருந்து ஓய்வு பெற்றவர் என்று விசாரணையின் போது தெரிய வந்திருக்கின்றது. (வ)


**விற்பனைக்கு**

சணல், யமுனாபாரி, கிடாய், மறி ஆடுகள், மைனர் கார், லான்சர் ல ஜப்பான், பொமரேனியன் ஆண்குட்டி, ஜப்பான் துவிச்சக்கர வண்டிகள் என்பன விற்பனைக்குள்ளன.

தொடர்பு - 077 434 7800

**தேவை**

சிற்றுண்டி தயாரிப்பதற்கு (வடை, றோல், பற்றிஸ்) பெண்கள் தேவை.
சிவகுருலேன், கொக்குவில்
077 735 2165

**வைத்திய சேவை இடமாற்றம்**

பரமேஸ்வராச்சந்தியில் இயங்கி வந்த யாழ். மத்திய வைத்திய நிலையம் தற்பொழுது இலங்கை வங்கிக்கு முன்னால் தபால்கட்டை சந்தி, இல.89, பலாலி வீதி, திருநெல்வேலியில் இயங்குகிறது.

சேவை வழங்குபவர்கள்

காலை 9.00-1.00 மணிவரை Dr. வே.மகேந்திரன்
மாலை 3.00-6.00 மணிவரை Dr. இ.தெய்வேந்திரன்

விபரங்களுக்கு:
தொ.பே: 021 221 9332

**வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிலையம் இலவச தொழிற்திறன் பயிற்சி வகுப்புக்கள்**

பாடசாலையை விட்டு நீங்கியோருக்கான
01. தையல் பயிற்சி
02. மனைப்பொருளியலும் மனை அலங்காரமும் பயிற்சி

வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு பயிற்சி நிலையம் இல.39, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாண நிலையத்தில் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றது. ஏற்கனவே விண்ணப்பித்து இடம் கிடைக்காதவர்கள், திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் மேற்படி பயிற்சி நிலையத்தில் மீள் பதிவு செய்துகொள்ளலாம். மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உள்ளன.

நிர்வாகம்
வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம்.

**சமையலாளர் தேவை(COOK)**

திருநெல்வேலியில் உள்ள றெஸ்ரோரண்ட் ஒன்றுக்கு சமையலாளர் உடனடியாகத் தேவை.

தொடர்பு - 077 997 8627

**ஊர்க்கோழி சேவல் தேவை**

சகல விதமான சேவல் மற்றும் கோழிகள் வாங்கப்படும். ஊர்க்கோழி சேவல் விற்பனைக்கும் உண்டு.
1. புறொயிலர்
2. கல்பேட் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புக்கு:
றோயல் கோழி இறைச்சிக்கடை
இராசபாதைச் சந்தி,
கோப்பாய்.
T.P: 0779229588 / 0770059318

**Aircompressor விற்பனைக்கு உண்டு**

நல்ல பாவனையில் உள்ள U.S.A யில் தயாரிக்கப்பட்டதும் 200*l* காற்றளவும் கொண்ட Aircompressor விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு றோயல் ரயர்க்கடை
இராசபாதைச் சந்தி, கோப்பாய்.
T.P: 0779229588 / 0770059318

**CHARTERED ACCOUNTANT CLASSES**

Business Level
Started 14.02.2015 (Saturday)
@ Acctecm Business Studies
Lecturers:
K.Mithulan
ACA (Chartered Accountant)
BSc Acc.spe USJ
District 1st in Commerce Stream-2008
ACCA Srilankan Prize winner June-2014
K.Thirukumaran
Chartered finalist, BSc.Acc.spe USJ
District 1st Commerce Stream-2006
C.Aishwarya
CIMA Passed Finalist
BSc.Acc.spe USJ
T.Sutharsan
Chartered finalist
BSc.public management spe.USJ

Contact us
Acctecm Business Studies
No.1, 2nd Lane, Power House Rd, Jaffna.
(near bustand)
T.P: 077 321 4002, 021 221 7733

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்

40 அடி அகலம் LED திரையில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

அஜீத் நடிக்கும் என்னை அறிந்தால்



காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30

முற்றிலும் குளிரூட்டப்பட்டது

**விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை**



★ பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
★ ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
★ வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
★ நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
★ பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)


## சுகாதார திணைக்களம், வடமாகாணம்
## பெறுகைகளுக்கான அழைப்பு
## வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளுக்கான உலர் உணவு விநியோகம் 2015/16

1.வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | வைத்தியசாலைகள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 1. | D/VN/2015/01 | ஆதார வைத்தியசாலை, செட்டிக்குளம் | 60,000 |

02.விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கேற்றவகையிலான வியாபார பதிவினையுடையவராக இருத்தல் வேண்டும்.

03.ஆதார வைத்தியசாலைக்கு விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது ஒரு வருடம் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.

04.நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கிடைக்கும் " பெறுகைக் கேள்வி விண்ணப்பம்" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **11.02.2015 தொடக்கம் 02.03.2015** வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

05.விலைக்கேள்விகள் **03.03.2015** ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக . வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.

06. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா (தொலைபேசி இல. 024-222-2140) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

07.கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

வைத்திய கலாநிதி (திருமதி) S.R.யூட்,
தலைவர், மாகாண திணைக்களத்தின் பெறுகைகள் குழு,
வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
சுகாதார கிராமம்,
பண்ணை, யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF CAMBRIDGE CAMBRIDGE ENGLISH
GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY

The Cambridge English exams listed below are approved by the U.K Home Office for Spouses and Civil Partner visa Applications to the U.K

**Cambridge - Prelimnary English Test (PET)**

- இது ஒர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

**Cambridge First Certificate in English (FCE)**

FCE is an upper intermediate level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.

UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றனர்

**Cambridge Certificate in Advanced English (CAE)**

CAE is an advanced exam. CAE tests the ability to communicate with confidence in English for work or study purposes. This exam is at CEFR Level C1

Subjects: Reading, Writing, Listening, Speaking, Use of English

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழுவதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

**புதிய வகுப்புக்கள் 16-02-2015ஆரம்பம்**

Course Schedule

| Mon, Tues, Wed, Thur | Saturday & Sunday |
|---|---|
| Duration 10 Week | |
| Time 10.00-12.00 | 03.00-05.00 |
| 03.00-05.00 | Exam: May & June |

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887
(தி/19581)(4.3.7)



**Say No to Elecricity Bill**

**உங்கள் மின்கட்டணத்தை Zero (0) ஆகக் குறைப்பதற்கு ஒரே தீர்வு**

நெற்மீற்றர் + சோலர் + மைக்ரோ இன்வெட்டர் தொழில்நுட்பத்தில்

- உங்கள் வீடு, வியாபார ஸ்தாபனங்கள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வைத்தியசாலை, ஹோட்டல் ஆகியவற்றிற்கு "சோலார்" பூட்டித் தரப்படும்.
- வங்கிக் கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
- மேலதிக விசேட வயரிங் தேவையில்லை
- பற்றறி தேவையில்லை
- அனைத்து மின் உபகரணங்களையும் பாவிக்கலாம்.



ரூபா 63,700/ இலிருந்து
25 வருட உத்தரவாதம்

**MICRO PC SYSTEMS**
18
No. 115 C, W. A. Silva Mawatha, Colombo 06, Sri Lanka.
Tel : 011 4000 686 Mobile : 077 307 6409
E-mail : mail@micropcsystems.com
Open on Sundays 9 a.m. to12.00 noon
VAVUNIYA : No. 73, 2nd Cross Street, Vavuniya.
JAFFNA : No.218,Hospital Road,Jaffna.
NELLIYADI : Kodikamam Road, Nelliyadi
KILINOCHCHI : A9 Road, Kilinochchi.
TRINCOMALEE : 231, Main St, Trincomalee.

# புலிகளின் முன்னாள் அரசியல் பொறுப்பாளர் டொமினிக் சாவு

யாழ்ப்பாணம், பெப்.11

90 களின் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த டொமினிக் (இந்திரன் சண்முகலிங்கன்) ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் காலமானார். அவர் யாழ்.மாவட்டப் பொறுப்பாளராக இருந்த சமயத்தில்தான் பிரேமதாஸ அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நடைபெற்ற சமரசப் பேச்சு முயற்சிகள் தோல்வியைடைந்து, 1990 ஜூனில் இரண்டாம் ஈழப்போர் வெடித்தது. போர் வெடிப்பதைத் தடுக்கும் முயற்சியாக புலிகளுடன் சமர சம் பேச வந்த பிரேமதாஸ அரசின் வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் யாழ்ப்பாணம், நல்லூரில் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் பலாலி திரும் பினார். அவரை வழியனுப்பிவைக்க, புலிகளின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் என்ற முறையில் டொமினிக்கும் அவருடன் கூடச் சென்றார். பலாலி முன்னரங்க நிலைகளுக்கு அப்பால் போர் சூனியப் பிரதேச எல்லையில் அமைச்சர் ஹமீத்துக்கு டொமினிக் விடை கொடுத்த சமயம் இரு தரப்புகளுக்கும் இடையில் அங்கு சண்டை மூண்டது. இரு தரப்புகளிலிருந்தும் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. எனினும் இரு தரப்புத் தலைவர்களும் விழுந்து எழும்பி, ஓடித் தப்பி தத்தமது பிரதேசத்துக்குள் எப்படியோ வந்து சேர்ந்தனர். இந்த விடயம் அந்த வேளையில் பரபரபாகப் பேசப்பட்டது. அந்தச்சமயத்தில் புதிதாக திரும ணம் செய்த டொமினிக்கின் துணைவியார் விடுதலைப் புலிகளின் நீதித் துறையில் ஒரு நீதியரசராகப் பணியாற்றினார். எனினும் பின்னர் ஒரு குறுகிய காலத்தில் இயக்கத் தலைமையோடு ஏற்பட்ட ஒரு சிறு முரண்பாட்டை அடுத்து டொமினிக்கும் துணைவியாரும் இயக்கத்தை விட்டு வெளியேறி லண்டனில் குடியேறினர். அண்மையில் சில காலம் பல்வேறு நோய் உபாதைகளுக்கு உள்ளாகியிருந்த டொமினிக் திருச்சியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார். அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். இந்திய அமைதிப்படை இலங்கையில் காலூன்றி யிருந்த காலத்தில் தீவிரமான போராளியாக பல களச்சமர்களில் டொமினிக் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

**திருமண நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும்**

இன்று (11.02.2015) புதன்கிழமை
முற்பகல் 11 மணிமுதல் வரும் சுபமுகூர்த்தத்தில்
பிரான்ஸ் ஸ்ரீசபரீசன் மஞ்சமாதா ஆலய மண்டபத்தில்
திருமாங்கல்யதாரணம் செய்யும் எமது குடும்ப
நண்பன் திரு.திருமதி கணேசமூர்த்தி ஜயா
தம்பதியரின் (கெருடாவில்) செல்வப்புதல்வன்
**விக்கினேஸ்வரன்**
திரு. திருமதி மங்களேஸ்வரி மகிழீஸ்வரன் தம்பதியரின்
செல்வப்புதல்வி **பாமினி**
ஆகிய இருவரும் இறைவன் துணையோடு
மாங்கல்யதாரணம் செய்து பதினாறு பேறுகளும் பெற்று
நல்வாழ்வு வாழ எம் குலதெய்வம் வெல்வில்
முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
சுப மஸ்து.



கலாநிதி சிவப்பிரம்மஸ்ரீ சிவா
நித்தியானந்த சிவாச்சார்யார்
குடும்பத்தினர்.
(ஆதீன பரம்பரைக் குரு
முருகன் தேவஸ்தானம்)
முருகன் வீதி, சங்கானை.

## கும்பாபிஷேகம்

அல்வாய் தேவரையாளி பதியுறை கண்ணகை அம்பாள் ஆலய ஆவர்த்தன அஷ்ட பந்தன பஞ்சகுண்ட பஷ் மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6.50 மணி தொடக்கம் 8 மணி வரை நடைபெறவுள்ளது.

◆ ◆ ◆

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணஸ்வர ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்ட, பஞ்ச குண்டபஷ் திருக்குட முழுக்கு பெருஞ்சாந்தி விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.05 மணி வரை நடைபெறவுள்ளது. (வ)

வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை - (மல்லாகம்)

**வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2015**

**சபை நிதி** மூலம் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக்கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி **11.02.2015 – 24.02.2015** பி.ப 03.00 மணிவரை.
- கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி **25.02.2015** ந.ப 12.00 மணிவரை.
- கேள்விகள் திறக்கப்படும் திகதி **25.02.2015** பி.ப 02.00 மணிக்கு.

கேள்விகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் கிடைக்கக் கூடியவாறு இணைப் பிரதிகளில் (Original, Duplicate) தயாரிக்கப்பட்டு இரண்டு பிரதிகளையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு **"தவிசாளர், வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, காங்கேசன்துறை.(மல்லாகம்)"** என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

1. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
2. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கணியவியலாற்றலையும் (SLS:573:1982) நியம அளவீட்டு முறைமையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD)பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மேலதிக விவரங்களை வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) ரூபா | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த (ICTAD)தரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | மகாத்மா வீதித் திருத்தவேலை – அளவெட்டி | 3.75 | C8 அல்லது அதற்குமேல் | மூன்றுமாதங்கள் | 54,000.00 | 1,000.00 |
| 02 | தெல்லிப்பழை பொது நூலகம் அமைத்தல் - கட்டம் II தெல்லிப்பழை | 3.42 | C8 அல்லது அதற்குமேல | ஆறுமாதங்கள | 50,000.00 | 1,000.00 |

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (மல்லாகம்).**
**11.02.2015**

(C19591)
(12.3.7)

**சோமசுந்தரம் சுகிர்தன், தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை.**

# இதோ டுவிட்டரில் புதிய வசதி

டுவிட்டரில் கணக்கைப் பயன்படுத்தாத போது தவற விட்ட முக்கிய டுவிட்டர்களை பார்ப்பதற்கு டுவிட்டர் புதிய அம்சத்தை அறிமுகப் படுத்தவுள்ளது.

'டுவிட்டரில் ஒரு நாளில் 50 கோடிக்கும் அதிகமான டுவிட்டர்கள் பகிரப்படுகின்றன. தற்போது டுவிட்டரில் நாம் ஒன்லைனில் இருக்கும் போது நாம் பின் தொடர்பவர்கள் செய்த டுவிட்டுகளை மட்டுமே படிக்க முடியும்.

பழைய டுவிட்டர்களை படிக்க வேண்டுமானால் நம்மை பின் தொடர்பவர்களின் பக்கத்திற்கு நேரடியாக சென்று படிக்க வேண் டும்.

'வைல் யு ஆர் அவே' (while you are away) என இதற்கு பெய ரிடப்பட்டிருக்கும். புதிய அம்சம் மூலம் பயனர்கள் ஒன்லைனில் இல்லாத சமயத்தில், அவர் பின் தொடர்பவர்கள் பகிர்ந்த முக்கியமான டுவிட்டுகளின் தொகுப்பை, அடுத்த முறை அவர் ஒன்லைனில் வரும்போது ஒரு தொகுப்பாக வழங்கப்படும்.

இந்த வசதியை டுவிற்றர் வழங்கியுள்ளது. இந்த முறை மூலம் நேரம் மிச்சப்படுத்தப்படுவதுடன், முக்கியமான டுவிட்டர்கள் கவனிக்கப் படாமல் போவதையும் தடுக்க முடியும்.



# ஜியோமி அறிமுகப்படுத்தும் மடிக்கணினி



ஸ்மார்ட் போன் உலகில் பரபரப்பை ஏற் படுத்தி வரும் ஜியோமி, புத்தாண்டில் புதிய மடிக்கணினியை அறிமுகம் செய்யப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது ஜியோமியின் முதல் மடிக்கணினியாக இருக்கும். புகைப்படத்துடன் இந்த மடிக் கணினி அம்சங்கள் பற்றிய விவரங்களும் வெளி வந்துள்ளன.


இந்த மடிக்கணினி இண்டெல் சிப், 15 இன்ச் டிஸ் பிலே, மற்றும் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட லினக்ஸ் இயங்குதளம் கொண்டிருக்கும் என்றும், இதன் விலை 481 டொலர் வரை இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஸ்மார்ட் போன் வடிவமைப்பில் ஆப்பிளின் வடிவமைப்பை நகலெடுப்பதாகக் குற்றச்சாட்டு கூறப்படும் நிலையில், இந்த மடிக் கணினி ஆப்பிளின் மேக்புக் போலவே இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஜியோமி புதிய சுற்று நிதியைப் பெற்று, சந்தை மதிப்பையும் 45 பில்லியன் டொலராக அதிகரித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்மார்ட் கைபேசிகளை சார்ஜ் செய்ய

நீண்ட வெளியூர் பயணங்கள், சுற்றுலாக்கள் என்பவற்றுக்குச் செல்லும்போது கைபேசிகளை சார்ஜ் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இவ்வாறான சிரமங்களுக்கு தீர்வாக சிறியவகை சோலர் பனல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. MicroUSB அல்லது Lightning Connector ஊடாக iPhone, Android கைபேசிகளை நேரடியாக இணைத்து சார்ஜ் செய்ய முடியும்.

Solar Page என்ற இந்தச் சாதனத்தின் ஊடாக iPhone 6 ஒன்றினை 2.5 மணி நேரத்தில் 100 வீதம் சார்ஜ் செய்யக்கூடியதாக உள்ளமை சிறப்பம்சமாகும்.






# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

## மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னத மாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண் போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### ஓவியப்போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 — தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர்

பிரிவு B தரம் 6, 7, 8, 9 — பனை வளமும் நாமும்

பிரிவு C தரம் 3, 4, 5 — பண்டிகை நிகழ்வு

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ் டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கா னது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினை யையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியி ருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ...............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில், பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# ஹங்கேரியின் நாடோடி குழந்தையால் சர்ச்சை



புடாபெஸ்ட், பெப். 11

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் பிறந்த குழந்தையொன்று ஹங்கேரி நாட்டில் பெரும் சர்ச்சை ஒன்றுக்குகாரணமாக ஆகியுள்ளது. ரிக்கார்டோ ராக்ஸ் என்ற அந்தக் குழந்தை, 2015 ஜனவரி 1ஆம் திகதி நள்ளிரவுக்கு சில வினாடிகள் கழித்து அந்த நாட்டில் பிறந்தான்.

ரோமா அல்லது ஜிப்சிகள் என்னும் இனத்தைச் சேர்ந்த அவனது பெற்றோரான சில்வியாவும், பீட்டரும் தற்போது அங்கு ஒரு வகையான இனவாதத் தாக்குதல்களை எதிர்கொள்கிறார்கள்.

அந்த குடும்பம் இருந்த பகுதிக்கான மேயர், ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் முதல் குழந்தைக்கு, ஒரு பணப்பரிசு அறிவித்திருக்கிறார். அது இந்த ஆண்டு ரிக்கார்டோவுக்கு கிடைத்துள்ளது. அதிகமான ஊடகங்கள் அதனை அந்தக் குடும்பத்தின் படத்துடன் செய்தியாக வெளியிட்டுள்ளன.

ஆனால், அதன் பிறகுதான் பிரச்சினையே வெடித்துள்ளது.

அந்த ஊரின் வலதுசாரிக் கட்சியான ஜொபிக் கட்சியின் துணைத் தலைவரான எலொட் நொவக், ரிக்கார்டோ குடும்பத்தின் படத்தை, தனது முகநூலில் போட்டு, "இந்த ரோமா குடும்பத்துக்கு இது மூன்றாவது குழந்தை, இந்த நிலை நீடித்தால், இந்த நாட்டில் உண்மையான ஹங்கேரியர்களின் எண்ணிக்கை ஒரேயடியாக குறைந்து, நாம் இங்கு சிறுபான்மையாகி விடுவோம், அவர்கள் ஹங்கேரியின் பெயரையும் மாற்றிவிடுவார்கள்" என்ற தொனிபட எழுதியுள்ளார்.

அந்தக் கருத்து அங்கு, ரோமா இனத்துக்கு எதிரான இனவாதக் கருத்துக்களைத் தூண்டியுள்ளது.

இவ்வளவு நாளும் தாம் இங்கு எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் இருந்ததாகக் கூறும் ரிக்கார்டோவின் குடும்பம் தற்போது தமக்கு அச்சமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஹங்கேரியில் ஒரு காலத்தில் ரோமாக்களின் (நாடோடிகளின்) இசை இல்லாமல் எந்த விழாவும் கிடையாது என்ற நிலைதான் காணப்பட்டுவந்தது. அந்தநாடோடி இனத்தின் ஒரு மூத்த வயலின் கலைஞருக்கு அங்கு சிலையும் இருக்கிறது. ஆனால், தற்போது அந்த இன மக்களுக்கு எதிரான எதிர்ப்புணர்வொன்று அங்கே உருவாகியுள்ளது. ரிக்கார்டோவின் பிறப்புடன்அது வெளிப்படஆரம்பித்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆம் ஆத்மி கட்சி அமோக வெற்றி

## டில்லி சட்டசபைத் தேர்தலில்



புதுடில்லி, பெப். 11

டில்லியில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில், ஆம் ஆத்மி கட்சி 61 தொகுதிகளில் முன்னணி வகித்து வரலாற்றில் மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை, 70 உறுப்பினர்களைக் கொண்ட டில்லி சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. இதில், மொத்தம் 67.14 சதவீத வாக்குகள் பதிவானது.

தேர்தலுக்கு பின்னர் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகளில் பெரும்பாலானவை கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சிக்கே சாதகமாக அமைந்திருந்த நிலையில், தற்போது வாக்கு எண்ணிக்கையும் அதையே பிரதிபலிக்கின்றன.

தற்போது பா.ஜ.க 7 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. காங்கிரஸ் அனைத்துத் தொகுதிகளிலும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இந்தத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி முன்னிலை பெற்று வருவதை யடுத்து அந்தக் கட்சியினர் உற்சாகமடைந்துள்ளனர்.

கட்சி அலுவலகத்தில் திரண்ட தொண்டர்கள் இனிப்பு வழங்கி அந்த வெற்றியைக் கொண்டாடி வருகின்றனர்.

வெற்றிபெற்ற அரவிந் கெஜ்ரிவாலை தொடர்புகொண்டு பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)




# குழந்தைகளை கண்காணிக்க அறிமுகமாகிறது புதிய கருவி

புதுடில்லி, பெப். 11

வீட்டுக்கு வெளியே இருக்கும் குழந்தைகளின் பாதுகாப்பை வீட்டில் இருந்தபடியே கண்காணிப்பதற்காகப் புதிய கருவி விரைவில் பெங்களூரில் அறிமுகமாக வுள்ளது.

இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்து வரும் நிலையில் பெற்றோர் தங்களது குழந்தைகளின் பாதுகாப்பை அறிந்து கொள்வதற்காகவும், அவர்கள் இருக்கும் இடத்தை அடையாளம் கண்டு கொள்வதற்காகவும் புதிய கருவி வந்துள்ளது.

குழந்தைகளின் பாடசாலை அடையாள அட்டைகளில் எளிதில் பொருத்தி கொள்ளும் இந்தக் கருவியை ரித்தீஸ் பாண்டியா என்பவர் அறிமுகம் செய்துள்ளார். இதில் இரு அவசர உதவி எண்களை பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி அவர் கூறுகையில், நானும் ஒரு பெண் குழந்தையின் தந்தை என்பதால் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் அசம்பாவிதங்களில் இருந்து அவர்களை மீட்பதற்காக இந்தக் கருவியைக் கண்டு பிடித்தேன்.

குழந்தைகள் கழுத்தில் அணியும், அடையாள அட்டைகளில் இந்தக்கருவியை பொருத்தலாம். ஆபத்து நேரத்தில் அதனை குழந்தை அழுத்தினால் போதும், அதில் பதிவு செய்யப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அது தகவல் அனுப்பிவிடும். அந்தக் கருவி மூலம் குழந்தைகள் ஆபத்தான நிலையில் இருந்தால் எளிதில் கண்டுபிடித்து விடலாம். பாலியல் வன்கொடுமைகளில் இருந்தும், அந்தக் கருவி குழந்தைகளை தற்காத்துக் கொள்ளும் வசதி கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அனைவரதும் வரவேற்பைப்பெற்றுள்ளது. (ஒ–ரி)



இந்தியாவுக்கு வருகைதந்துள்ள சிங்கப்பூர் அதிபர் டோனி டான் கெங் யாம் மற்றும் அவருடைய மனைவி மேரி சீ பீ கியாங்க் ஆகியோரை டில்லி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் வரவேற்கின்றனர்.

# ஈராக்கில் தாக்குதல்

## 22 பேர் சாவு; 40 பேர் காயம்

பாக்தாத், பெப். 11

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பத்து வருடங்களுக்கும் மேலாக நடைமுறையில் இருந்த இரவு நேர ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதையடுத்து அங்கு தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.



அந்த வகையில், நேற்று மனித வெடிகுண்டுத் தாக்குதலொன்றில் 18 பேர் பரிதாபமாக சாவடைந்துள்ளனர். அந்தத் தாக்குதலில் 40க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத்தின் அடன் சதுக்கம் பகுதியில் நேற்று நுழைந்த தீவிரவாதியொருவன், தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய் தான். அந்தத் தாக்குதலில் 18 பேர் சாவடைந்துள்ளனர்.

அந்தத் தாக்குதல் நடைபெற்ற சில மணித்தியாலங்களில் பாக்தாத்தின் வடகிழக்குப் புறநகர் பகுதியான ஹூசைனியாவில்நிகழ்ந்தமற்றொரு வெடிகுண்டுத் தாக்குதலில் நான்கு பேர்சாவடைந்துள்ளனர். (ஒ–ரி)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளை அழிப்போம் ஆயுதமேந்தி யாஸிதிகள் சபதம்

வொஷிங்டன், பெப். 11

ஐ.எஸ்.தீவிரவாதிகளை வேரோடு அழிக்கப்போவதாக யாஸிதி இன மக்கள் சபதமிட்டுள்ளனர். இதனால் ஐ.எஸ்.தீவிரவாதிகளை எதிர்கொள்ள குர்திஷ் படைகளிடம் யாஸிதி இன மக்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஈராக்கின் சிஞ்சார் மலைப்பகுதியில் வசிக்கும் சிறுபான்மையினத்தவரான யாஸிதி மக்களில் பல்லாயிரக்கணக்கானோரை கடந்தாண்டு ஐ.எஸ்.தீவிரவாதிகள் படுகொலை செய்துள்ளனர். மேலும் யாஸிதி இனச் சிறுமிகளும் பெண்களும் ஐ.எஸ்.தீவிரவாதிகளால் பாலியல் அடிமைகளாக்கப்படும் கொடூரமும் நடந்தேறி வருகிறது.



யாஸிதிகளுக்கு நேர்ந்த கொடுமையைத் தொடர்ந்தே ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக வான்வழித் தாக்குதலை மேற்கொள்ள அமெரிக்கா முன்வந்தது. இந்தநிலையில் ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் அமெரிக்க ஆதரவுடன் களத்தில்இருக்கும்குர்திஷ்மாகாணத்தின் அரச படைகளுடன் யாஸிதிகள் கை கோர்த்துள்ளனர். தற்போது யாஸிதிகளுக்கு குர்திஷ் படையான பெஷ்மெர்கா இராணுவம் பயிற்சி அளித்து வருகிறது.

எனவே ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கு எதிராக பயிற்சி பெற்ற யாஸிதி இனத்தவரும் களமிறங்க உள்ளதால்,ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்குகடும் நெருக்கடி உருவாகும்சூழ்நிலைஏற்பட்டுள்ளதாககூறப்படுகிறது. (ஒ–ரி)

# சார்லி ஹெப்டோ தாக்குதலால் ஓயாத பீதி

பரிஸ், பெப்.11

பரிஸ்நகரசாலைகளில்அதிரடிச்சண்டைக்காட்சிகளைப் படம் எடுப்பதற்குப்பொலிஸார்தடைவிதித்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி சில்வி பெர்னாட்தெரிவிக்கையில், பொலிஸ் உடைகளில் அல்லது வேறு துறையை சேர்ந்த அதிகாரிகளாக நடிகர்கள் சண்டைக்காட்சிகளில் ஈடுபடுவதுபோல் நடிக்கும் போது, அவர்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகலாம்.

மேலும் பொது இடங்களில் அது போன்ற சண்டைக்காட்சிகளை நடிக்கும்போது, மக்களிடையே குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.


எனவே படப்பிடிப்புகளின்போது போலித் துப்பாக்கிகள் மற்றும் அதிக சத்தம் கேட்கும் பட்டாசு வெடிகள் பயன்படுத்துவதையும்தடை செய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

பரிஸ்பத்திரிகையானசார்லிஹெப்டோ தாக்குதலுக்குப் பிறகு எந்த அசம்பாவிதமும் நடைபெறாத வகையில் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள் ளார். (ஒ–ரி)



இத்தாலியிலுள்ள வெனிஸ் நகரத்தில் இடம்பெற்ற பாரம்பரிய திருவிழாவில் பெண்ணொருவர் பாரம்பரிய உடை யணிந்து. நிகழ்த்தும் தேவதூதர்களின் விமானம் என்னும் நிகழ்வைக் கண்டு களிக்கும் அந்த நாட்டு மக்கள்.

# வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ். துணைத் தலைவர் சாவு




காபூல், பெப். 11

ஆப்கானிஸ்தானில் நடந்த வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் துணைத் தலைவர் சாவடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின்ஹெல் மண்டு மாகாணத்தில் ஐ.எஸ்.தீவிரவாதத் துணைத் தலைவர் முல்லா அப்துல் ராப். பதுங்கியிருந்தார். ஐ.எஸ். அமைப்புக்குத் துணைத் தலைவராக இருக்கும் அவருக்கு கோராசன் என மற்றொரு பெயரும் உள்ளது. ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புக்காக ஆள் சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வந்த அவர், அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# வேலைக்காக தினமும் 34 கி.மீ நடந்து செல்லும் பணியாளர்



வொஷிங்டன், பெப். 11

அமெரிக்காவில் நபரொருவர், தாம் வேலை செய்யும் நிறுவனத்தால் பஸ் வசதி செய்து கொடுக்கப்படாமையால் தினமும் 34 கி.மீ தூரம் நடந்தே அலுவலகம் சென்று வருகிறார்.

அமெரிக்காவின் பிரபல தொழில் நகரமான டெட்ராய்ட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் ரொபர்ட்சன் என்பவர் வேலை செய்துவரும் நிறுவனத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஊழியர்களுக்கான பஸ் போக்குவரத்து வசதியை நீக்கிவிட்டனர்.

ஆனாலும் சிறிதும் மனம் தளராத ஜேம்ஸ், தினமும் வெயில், பனி, மழை போன்ற எந்தப் பாதிப்பையும் பொருட்படுத்தாமல் நடந்தே பணிக்குச் சென்று வருகிறார்.

இவ்வாறு கடந்த 10 ஆண்டுகளாக விடுமுறை எதுவும் எடுக்காமல் தொடர்ந்து அலுவலகம் செல்லும் அவர் தினமும் நடந்து செல்வதைக் கண்டு அது குறித்து விசாரித்த பொது மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தற்போது அந்தச் செய்தி சமூக வலைத் தளங்களில் பரவியதையடுத்து, ஜேம்ஸுக்கு பலர் ஆதரவு தர முன்வந்துள்ளனர்.

தொடர்ந்து பல முகம்தெரியாத நபர்கள் ஜேம்ஸ் காரொன்றை வாங்குவதற்காக தற்போது அவருக்கு 3,00,000 அமெரிக்க டொலர்கள் அளித்துள்ளனர்.

இந்தநிலையில் கடந்த வெள்ளிக்கிழமை, ஜேம்ஸுக்கு டெட்ராய்ட்டில் உள்ள கார் நிறுவனமொன்று 37,000 அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான போர்ட் டாரஸ் என்னும் புத்தம் புதிய காரொன்றை வழங்கியுள்ளது. (ஒ–ரி)

# அமெரிக்க பணயக் கைதியும் தாக்குதலில் கொல்லப்பட்டாரா?

## ஐ.எஸ்.தீவிரவாதிகளின் தகவலால் பரபரப்பு



வொஷிங்டன் பெப்11

ஜோர்தான் மேற்கொண்ட வான் வழித் தாக்குதலில் அமெரிக்கப் பெண் பணயக் கைதியொருவர் சாவடைந்துள்ளதாக தெரிவித்து ஐ.எஸ். தீவிரவாதிகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். ஜோர்தான் விமானி கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஜோர்தான் அரசு சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள் மீது அதிரடித் தாக்குதல் மேற்கொண்டிருந்தது.

அதில் கடந்த 2013ஆம் ஆண்டு சிறைப்பிடிக்கப்பட்ட 26 வயதான கைலா முல்லர் என்ற அமெரிக்க சமூக ஆர்வலரும் சாவடைந்துள்ளதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

அது தொடர்பாகத் தீவிரவாதிகள் தெரிவிக்கையில், சிரியாவின் ரக்கா நகருக்கு வெளியே கட்டடம் ஒன்றில் கைலா முல்லர் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த 6ஆம் திகதி ஜோர்தானால் மேற்கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதலில் அந்தக் கட்டடம் தரை மட்டமானது என்றும் அந்தத் தாக்குதலில் அமெரிக்க பணயக் கைதியான கைலா முல்லர் கொல்லப்பட்டு விட்டார் எனவும் தெரிவித்துள்ளனர்.

அதனைத்தொடர்ந்து ஜோர்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் கட்டடமொன்று தரைமட்டமான காட்சியுடனான வீடியோவை தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.

அதில் இடிபாடுகளில், கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கைலா முல்லர் காணப்படவில்லை அவர் கொல்லப்பட்டதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை எனவும் கூறப்படுகிறது. எனினும் கைலா முல்லர் கொல் லப்பட்டு விட்டார் என்பதை தங்களால் உறுதி செய்ய முடியவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ–ரி)




# சார்லி ஹெப்டோவுக்கு எதிராக பிரிட்டனில் இஸ்லாமியர் போர்க்கொடி

பரிஸ், பெப்.11

இஸ்லாமிய இறைதூதரான முகமது நபியை அவமதித்து கேலிச் சித்திரம்வெளியிட்ட சார்லிஹெப்டோ பத்திரிகையைக் கண்டித்து இஸ்லாமிய அமைப்பினர் பிரிட்டனில் போராட்டம் நடத்தியுள்ளனர்.

சார்லி ஹெப்டோவின், இந்த நடவடிக்கை இலட்சக்கணக்கான இஸ்லாமியர்களின் மதநம்பிக்கையை புண்படுத்தியுள்ளது எனப் போராட்டத்தில் குதித்த இஸ்லாமியர்கள் தெரிவித்தனர்.

அதனையடுத்து லண்டனில் திரண்ட ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் சார்லி ஹெப்டோ பத்திரிகைக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

அந்தப் பத்திரிகையைக் கண்டிக்கும் விதத்தில் சார்லி ஹெப்டோ ஒரு மோசடிப் பத்திரிகை என்றும், சார்லி ஹொப்டோ பத்திரிகை நாகரிகத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எழுதிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பத்திரிகையின் வளர்ச்சிக்காக ஒரு மதத்தை இழிவுப்படுத்துவது தவறானது என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பத்திரிகை அலுவலகத் தாக்குதலில் 12 பேர் சாவடைந்தமை மிகவும் கண்டிக்கத்தக்கது எனக்கூறிய அவர்கள், இஸ்லாமிய அமைப்புக்களிடம் முறையான சட்டத்திட்டங்கள் இல்லாததையே இந்தத் தாக்குதல் எடுத்துக் காட்டுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்லாமிய அமைப்பு நடத்திய கையெழுத்துப் போராட்டத்தில் 10,000 இஸ்லாமியர்கள் தங்கள் கண்டனங்களை பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி ஆஸி.பிரதமர் அபோட்டுக்கு



கான்பெர்ரா,பெப். 11

ஆஸ்திரேலியாவில் லிபரல் கட்சியின் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆஸ்திரேலிய பிரதமர் வெற்றி பெற்றுள்ளார். ஆளும் லிபரல் கட்சி சார்பில் பிரதமராக பதவி வகித்து வருபவர் டோனி அபோட் ஆவார்.

அவருக்கு எதிராக கடந்த சில நாள்களுக்கு முன்னர் அவரது கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டது. அதனால் அவருக்கு எதிராக மேற்கு ஆஸ்திரேலிய எம்.பி. லூக் சிம்கின்ஸ், கடந்த வாரம் கட்சியில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானத்தின் மீது நேற்றுமுன்தினம் இரகசிய வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. கான்பெர்ராவில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடந்த அந்த வாக்கெடுப்பில் 61 வாக்குகள் பெற்று டோனி அபோட் வெற்றி பெற்றார். அவருக்கு எதிராக 39 வாக்குகள் பதிவானது. இந்தத் தகவலைக் கட்சித் தலைவர் பிலிப் ரட்டோக் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

# கப்பலில் தீயணைக்கும் ரோபோவை உருவாக்கியது அமெரிக்கக் கடற்படை



நியூயோர்க், பெப் 11

கடலில் செல்லும்போது கப்பலில் தீப்பிடித்தால் அந்தத்தீயை அணைப்பதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. இதனால் உயிரிழப்பும் அதிகமாக ஏற்படுகிறது. இதனைத் தடுக்க அமெரிக்கக் கடற்படையினர் மனிதனைப் போலச் செயற்படக்கூடிய ரோபோவை உருவாக்கியுள்ளனர்.

அது மனிதனின் உயரம் மற்றும் மனிதனைப்போன்ற நிறையைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. எந்த வெப்பத்தையும் தாங்கிச் சென்று தீக்குள்ளேயே புகுந்து தீயணைக்கும் வகையில் அது உருவாக்கப்பட்டுள்ளது. தண்ணீர் மற்றும்இரசாயனத்தைத்தெளித்து தீயை அணைக்கும் சக்தி கொண்டதாக அந்த ரோபோ வடிவமைக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிரபராதியை தூக்கிலிட்டது சீன நீதிமன்றம்

## பல வருடங்களின் பின்னர்அம்பலமாகிய உண்மை

உலகம் முழுவதும் நீதிமன்றங்களும், பொலிஸாரும் புலன் விசாரணை நடத்தினாலும், நிரபராதிகள் தண்டனை பெறுவது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தவகையில் சீனாவில் நிரபராதியொருவர் தூக்கிலிடப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவிலுள்ள மங்கோலியா தன்னாட்சி பிரதேசத் தலைநகர் ஹோஹாட்டில் கடந்த 1996ஆம் ஆண்டு ஒரு பாலியல் வன்புணர்வுச் சம்பவம் நடைபெற்றது. அது தொடர்பாக ஹக்ஜில்ட் என்ற 18 வயது வாலிபர் கைது செய்யப்பட்டு, அவருக்குச் சாவுத்தண்டனையும் விதிக்கப்பட்டது. பின்னர் அவர் தூக்கிலிடப்பட்டார்.

அது ஒரு புறமிருக்க சீனாவில் பல்வேறு இடங்களில் நடந்த கொலை மற்றும்தொடர் பாலியல்வன்புணர்வு சம்பவங்கள் தொடர்பாக கடந்த 2005ஆம் ஆண்டு ஷாவோ சிகாங் என்பவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை மேற்கொண்ட போது, 1996இல் ஹோஹாட்டில் நடந்த பாலியல் வன்புணர்வுக்கு அவர்தான்காரணம்எனத்தெரியவந்துள்ளது. அவரது ஒப்புதல் வாக்குமூலத்தால் உண்மையை உணர்ந்த நீதிமன்றம், நிரபராதியான ஹக்ஜில்ட்டின் பெற்றோருக்கு இழப்பீடு வழங்க உத்தரவிட்டதுடன், ஷாவோ சிகாங்குக்கும் சாவுத் தண்டனை விதித்துள்ளது. (ஒ–ரி)

# பிள்ளைகளை நல்லவர்களாகச் செதுக்கும் சிற்பிகள் அவர்களுடைய பெற்றோரே!

க.நல்லையா
ஓய்வுநிலை அதிபர்
சங்கானை

“பெற்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோ னெனக்கேட்ட தாய்' என்பது முதியோர் வாக்கு
"பட்டங்கள் பெற்று பட்டதாரி ஆனாலும் பண்பில்லையானால் அதில் பயனில்லை"
பிள்ளைக்கும் பெற்றோர்களுக்கும் இடையே காணப்படும் பாசம் அவனைச் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் நல்லவனாகவும், வல்லவனாகவும் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியுடன் கூடியதாக இருக்கவேண்டும்.
"கல்வியின் இலக்கு ஒழுக்கம்" எனவே இந்த உலகியற் கல்விகளோடு ஆன்மிகமும் சேர்ந்தால் ஒழுக்கமான பிள்ளையாகவும், ஆன்மிக ஈடுபாடு உடைய பிள்ளையாகவும் வருங்காலத்தில் உருவாக வழிசமைக்க முடியும்.
காலையில் எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்து பின் கடவுளை வணங்குகிறானா? பெற்றோர்களைக் கனம் பண்ணுகிறானா? மாலையில் விளையாடுகிறானா? இரவில் மீண்டும் இறை வணக்கம் செய்கிறானா? அயலவர்களுடன் அன்பாகப் பழகுகின்றானா? பெரியோர்களை மதிக்கின்றானா? என்பதை பெற்றோர்கள் அவதானிக்க வேண்டும். எனவே பிள்ளைகளை ஆரம்பம் முதல் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவனாக வளர்க்க வேண்டும்.
மூன்று வயது முடிந்தவுடன் முன்பள்ளிக்கல்வி வாழ்க்கை ஆரம்பிக்கின்றது. இக்காலத்தில் முன்பள்ளி முடிந்து வீடுவந்து சேரும் பிள்ளைக்கு முதலில் தகுந்த ஆறுதல் அளிக்கவேண்டும். அங்கே என்ன நடந்தது என்பது பற்றி மாலையில் பெற்றோர் கேட்டறிந்து கொள்ள வேண்டும். முன்பள்ளிக் கல்வி முடிந்து வந்ததும் பிள்ளைகளை உடனடியாக பிரத்தியேக வகுப்புக்களுக்கு அனுப்புவதை பெற்றோர் தவிர்க்க வேண்டும். மாலையில் அவர்களை சுதந்திரமாக விளையாட விட வேண்டும். இதனால் மனமும், உடலும் உற்சாகமடைந்து இரவில் படிப்பதற்கு இலகுவாக இருக்கும்.
முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளுக்கும் பாடசாலைக் கல்விக்கும் இடையே ஒரு தொடர்பு இருப்பதைப் பெற்றோர் கட்டாயம் அவதானிக்க வேண்டும். இது அப்பிள்ளைக்கு சிறந்த உத்வேகத்தை பெற்றுக்கொடுக்கும்.
உதாரணமாக இங்கே முன்பள்ளி ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்றவர் தற்போது அமெரிக்காவில் முதலாம் தரத்தில் கல்வி கற்கிறார். அவரால் அங்கு சுலபமாகக் கற்கமுடிகின்றது. ஆனால் இங்கு அவர் படித்த கல்வியைத் தொடர முடியவில்லை. ஏனெனில் அங்கே இன்றும் அவர்களுக்கு விளையாட்டுக்கள், படங்கள் மூலமான கற்பித்தலே இடம்பெறுகின்றது. அதிலே

> மூன்று வயது முடிந்தவுடன் முன்பள்ளிக்கல்வி வாழ்க்கை ஆரம்பிக்கின்றது. இக்காலத்தில் முன்பள்ளி முடிந்து வீடுவந்து சேரும் பிள்ளைக்கு முதலில் தகுந்த ஆறுதல் அளிக்கவேண்டும். அங்கே என்ன நடந்தது என்பது பற்றி மாலையில் பெற்றோர் கேட்டறிந்து கொள்ள வேண்டும். முன்பள்ளிக் கல்வி முடிந்து வந்ததும் பிள்ளைகளை உடனடியாக பிரத்தியேக வகுப்புக் களுக்கு அனுப்புவதை பெற்றோர் தவிர்க்க வேண்டும்.

அவர்களுக்கு ஆர்வமும் அதிகரிக்கிறது. அங்கே ஒவ்வொரு தவணை முடிவிலும் இரண்டு மணித்தியாலங்கள் தனித்தனியாகப் பெற்றோருடனான கலந்துரையாடல் இடம்பெறுகிறது. அது போன்ற தனித்தனி பெற்றோருடனான கலந்துரையாடலை இங்குள்ள முன்பள்ளிகளிலும், பாடசாலைகளிலும் தொடர வேண்டும். இதனால் பெற்றோர், ஆசிரியர், மாணவர் தொடர்பு மேலும் மேம்படுகிறது.
அடுத்ததாக இங்கே நடைபெறுகின்ற பிரத்தியேக வகுப்புக்களை எடுத்துக்கொண்டால் எல்லா நாடுகளிலும் பாடசாலைக் கல்விக்குப் பின்னூட்டலாகத்தான் பிரத்தியேக வகுப்புக்கள் இடம்பெறு கின்றன. ஆனால் இங்கோ பிரத்தியேக வகுப்புக்களுக்குப் பின்னூட்டலாகத்தான் பாடசாலைக் கல்வி இடம்பெறுகிறது.
எப்படியெனில் இந்த ஆண்டுக்கான வகுப்புக்களை கடந்த ஆண்டு மூன்றாம் தவணை முடிந்தவுடன் கற்பிக்கஆரம்பிக்கின்றனர். காலை 6 மணிக்கே வகுப்புக்கள் ஆரம்பித்து மாலை வரை தொடர்ந்து இடம்பெறுகின்றன. இதனால் மாணவர்களுக்கு ஓய்வு இருப்பதே இல்லை. தொடர்ந்து ஒரே கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதால், ஏனைய நுண்கலைச் செயற்பாடுகளிலும், விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதற்கும் விடுமுறைகளில் ஏனைய சொந்தங்களின் வீடுகளுக்குச் செல்லவும் முடியாதவர்களாக பல்வேறு மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். எமது பாரம்பரிய விளையாட்டுக்களான கிட்டிப்புள், கிளித்தட்டு போன்ற விளையாட்டுக்கள் அருகிச் செல்லவும் இவையே காரணங்களாகும்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக தரம் 3 முதல் பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்ல ஆரம்பிக்கின்றனர். வயதிலும் பார்க்க கூடுதலான கல்வியைத் திணிப்பதால் அவர்களின் தேகாரோக்கியம் பாதிக்கப்படுகிறது. இறுதியில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறாதவிடத்து அவர்கள் இதுவரை கற்ற கல்வி பயனற்றது என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது.
எனவே பெற்றோர்கள் இவற்றை மிகவும் கவனத்தில் எடுத்து பிள்ளைகளுக்கான ஓய்வு நேரத்தை ஏற்படுத்தி அந்த நேரங்களில் ஆலயங்கள், விழாக்கள், சமய நிகழ்வுகளுக்குக் கூட்டிச் சென்று அவர்களை கல்விமான்களாக மட்டுமல்லாது நமது சமயப்பற்றும் தேசப்பற்றும் மிக்க பிரஜைகளாக நாளை உருவாக அவர்களைச் செதுக்க வேண்டிய சிற்பிகளாகப் பெற்றோர் உள்ளதை அறிந்து செயற்படுவோமாக.



# ஆர்ப்பிக்கோவில் உலகைவெல்லுங்கள் வெற்றிவாகை சூடிய 25 வாடிக்கையாளர்





உலகை வலம் வரும் கனவு விடுமுறை பொதியோடு நிறைவடைந்த மாபெரும் வாடிக்கையாளர் ஊக்குவிப்பு அமெரிக்கா முதல் பிறேஸில், பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, சீனா என உலகின் பலபாகங்களை சுற்றிவரும் வாய்ப்பு ஆர்ப்பிக்கோ வாடிக்கையாளர்களுள் 25 அதிர்ஷ்டசாலி குடும்பங்களுக்கு கிடைத்துள்ளது.
ஆர்ப்பிக்கோ சில்லறைபொருள் கொள்வனவு நிலையங்கள் மூலம் பொருளகளை கொள்வனவு செய்தமைக்காக உலகின் பிரபலமான பதினைந்து இடங்களைச் சுற்றிவரும் மகத்தான வாய்ப்பு இந்தக் குடும்பங்களுக்கு கிட்டியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட 200[illegible]0 கூப்பன்களில் இருந்து 2014 டிசம்பரில் விதிக்கப்பட்டிருந்த உரிய வகைப்படுத்தலின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்கள் தமக்கான உலகை வெல்லுங்கள் பரிசுகளை அண்மையில் பெற்றுக் கொண்டனர். அவர்கள் வென்றுள்ள இடங்களுக்கான பயணங்களை 2015 ஜூன் இறுதிவரை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.
ஐந்து கண்டங்களை உள்ளடக்கியதாக வடக்கு மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா என இந்த விடுமுறை பொதி விஸா செலவு, உணவு, தங்குமிடவசதி, கைச்செலவுக்கான பணம், விமான டிக்கட்டுக்கள் என எல்லாவற்றையும் உள்ளடக்கியது.
இதுவரை மேற்கொள்ளப்பட்ட வாடிக்கையாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் பரிசின் வகை மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த ஆதரவு என்பனவற்றை பொறுத்தமட்டில் இது மிகவும் வெற்றிகரமானது என்று கூறினார் றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு தலைவர் மினோத் டி சில்வா. 2014 டிசம்பரில் நாம் விற்பனையில் எமது இலக்குகளை அடைவதில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளோம். குறிப்பிட்ட பருவகாலப்பகுதியில் ஏனைய பல சில்லறை விற்பனையாளர்கள் எட்டிய இலக்குகளோடு ஒப்பிடுகையில் இது மிகவும் மெச்சத்தக்கதாகும் என்று அவர் மேலும் கூறினார்.
டிசம்பர் 2014ல் ஆர்ப்பிக்கோ சுபர்சென்டர்கள் அல்லது தினசரி விற்பனை நிலையங்களில் 3000 முதல் 7500 ரூபாவரை பொருள்களை கொள்வனவு செய்தவர்கள் தமது கொள்வனவில் குறிப்பிட்ட மூன்று வகை வர்த்தக இலச்சினை பொருள்களை உள்ளடக்கியிருந்தால் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேஷியா, இந்தியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் அல்லது துபாய் செல்வதற்கான விடுமுறை வாய்ப்பை வெல்லும் தகுதியைப் பெற்றனர்.
அதேபோல் குறிப்பிட்ட வர்த்தகச் சின்னங்களின் பொருள்கள் உள்ளடங்கலாக 7500 முதல் 15000 வரை பொருள்களை கொள்வனவு செய்தவர்கள் தென் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, சீனா அல்லது ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு செல்லும் வெற்றிவாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதேபோல் குறிப்பிட்ட மூன்று வர்த்தக முத்திரையுடனான 15000 ரூபாவுக்கும் அதிகமாக பொருள்களை கொள்வனவு செய்தவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் அல்லது பிரேஸில் ஆகிய நாடுகளுக்கு செல்லும் வெற்றி வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.
வெற்றியீட்டுவதற்கான வர்த்தக சின்னங்களாக அங்கர். கொகாகோலா, டெல்மிஜ், டோமெக்ஸ், டவ், கெலொக்ஸ், கொஹம்பபேபி, நோர், மரினா, மன்சி, ரெவல்லோ, சென்கிளாயர்ஸ், சேர்ப்எக்ஸல், டொட்லோ மற்றும் பிரிமாடிரிட்ஸ் என்பன அமைந்திருந்தன.
ஆர்ப்பிக்கோ சங்கிலித் தொடர் வர்த்தக நிலையமானது தற்போது 17 சுப்பர்சென்டர்கள் மற்றும் சுப்பர் ஸ்டோர்கள், 29 காட்சியறைகள், மற்றும் 16 தினசரி மினி சுப்பர்மார்க்கெட்கள் என்பனவற்றைக் கொண்டதாகும். போதிய வாகனதரிப்பிடவசதி, பட்டியல்கள் கொடுப்பனவு, வங்கி வசதிகள், வாழ்வியல் தேவைகள், வீட்டுபாவனைப் பொருள்கள், இலத்திரனியல் உபகரணங்கள், சமையலறை பொருள்கள், தளபாடங்கள் என்பன உட்பட விரிவான பல்வேறு வகை உற்பத்திகளை ஆர்ப்பிக்கோ நிலையங்களில் மிகவும் சௌகரியமான முறையில் பெற்றுக் கொள்ளலாம். (த)

# அப்பிள் தடை நீக்கம்

அமெரிக்க அப்பிள்களை விற்பனை செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது.
அமெரிக்காவிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற நான்கு வகை அப்பிள்களைத் தவிர, ஏனைய ரக அப்பிள்களை விற்பனை செய்வதற்கு சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
எனினும், அமெரிக்க கலிபோர்னியா பிராந்தியத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற அப்பிள், அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகின்ற கெரமல் அப்பிள், கிரேன் ஸ்மித் அப்பிள் மற்றும் காலாவதியான அப்பிள்களை விற்பனைசெய்வதற்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (த)

# வாசகர் திருமுகம்



## வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்ட மைத்திரியின் புதிய அரசு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015 ஜனவரி 9ஆம் திகதி ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு, தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, ஆட்சி அமைத்தால் முக்கியமான சில விடயங்களை நூறு நாள்களுக்குள் நிறைவேற்றுவதாக ஒரு சிறிய விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தார். அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட விடய்ங்கள் மிகவும் வரவேற்கக்கூடியதாகவும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் அமைந்திருந்தன.
அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று 2015 ஜனவரி 9ஆம் திகதி ஜனாதிபதியாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும், நாட்டுமக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். குறிப்பாக அவர் தமது விஞ்ஞாபனத்தில் கூறிய மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவார் என ஓர் ஓய்வூதியர் என்ற ரீதியில் திடமான நம்பிக்கையும் மட்டற்ற மகிழ்ச்சியும் கொண்டிருந்தேன். ஜனவரி 29ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவாரணங்களும் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு முதலான வாக்குறுதிகளும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டுள்ளன. இது அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது.
அரச ஊழியர்களுக்கான 10,000 ரூபா சம்பள உயர்வு வழங்கப் பட்டுள்ளது. அதுவும் இந்த மாதம் தொடக்கம் வழங்கப்படுகிறது. ஆனால் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் 3,500 ரூபா அதிகரிப்பு என்னும் வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது. யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டது போல் ஓய்வூதியர்களின் வயிற்றில் அடித்துவிட்டது புதிய அரசு. வெறும் 1,000 ரூபாவை மட்டும், அதுவும் ஏப்ரல் மாதம் தொடக்கம் அதிகரித்து வழங்குவதாகக்கூறி ஓய்வூதியர்களை ஏமாற்றி விட்டது. எமக்கு ஏன் இந்த அநீதி? ஏன் இந்த பாரபட்சம்? ஏன் இந்தப் புறக்கணிப்பு?.
என்னதான் குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு தனது 2015ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 3,000 ரூபாவையும் ஓய்வூதியர்களுக்கு 2,500 ரூபாவையும் அதிகரித்து நீதியாக நடந்துள்ளது. அதேவேளை, தற்போதைய புதிய அரசு ஓய்வூதியர்களை முற்றுமுழுதாகப் புறக்கணித்தது மட்டுமல்லாது அவர்களை மறந்து கைவிட்டுள்ளது. ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட 3,500 ரூபா அதிகரிப்பை 2,500 ரூபாவால் குறைத்து 1,000 ரூபா மட்டும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.
புதிய ஜனாதிபதி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த ஓய்வூதியர்களுக்கு 3,500 ரூபா அதிகரிப்பு வழங்கப்படும் என்றும் வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் எனவும், மேற்படி அதிகரிப்பை எமக்கும் விரைவாக வழங்கி உதவ வேண்டும் எனவும், ஓய்வூதியர்களும் அரச ஊழியர்களாகக் கடமை புரிந்தவர்கள்தான் என்பதையும் கருத்தில்கொண்டு இரு சாராரையும் சமமாக மதிக்க வேண்டும் எனவும் மிக மிகத் தாழ்மையுடன் வேண்டுகிறேன். தவறும் பட்சத்தில் மிக விரைவில் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஓய்வூதியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி.

*மு.பொன்னம்பலம்*
*பாதிக்கப்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்.*

## ஏன் இந்த அலறல் சத்தம்?

நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை கந்தரோடையில் இருந்து மினிபஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்தேன். அந்த பஸ்சில் சன நெரிசல் அதிகமாக இருந்தது.
அத்துடன் மினிபஸ்ஸின் சாரதி உரத்த தொனியில் பாடலை ஒலிபரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார். முன் வரிசையில் அமர்ந்திருந்த பயணிகளின் காலடியில் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்கள் அலறிக் கொண்டிருந்தன. இதனால் தாம் இறங்கும் இடத்தைத் தெரிவிப்பதில் பயணிகள் சிரமங்களை எதிர் கொண்டதை அவதானிக்க முடிந்தது.
அளவான ஒலியுடன் பாடலை ஒலிபரப்பினால் பயணிகளுக்கு உதவியாக இருக்கும்.

*மு.சுந்தரலிங்கம், கந்தரோடை*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## நனவாகுமா அரசியல் கைதிகள் விடுதலை?

வழக்கு விசாரணைகள் இன்றி பல ஆண்டு காலமாக தென்னிலங்கைச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் தமிழ் அப்பாவி இளைஞர்கள். இவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் பல நீண்ட காலமாக இவர்களின் வாழ்வு சிறைக் கூண்டுகளில் கழிகிறது. குற்றம் எதுவும் நிரூபிக்கப் படாமலேயே அவர்கள் குற்றக் கூட்டில் அடைபட்டுள்ளார்கள்.
பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் என்ற போர்வைக்குள்ளேஇவர்கள் புகுத்தப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள். சிறைகளிலும் அவர்கள் சந்திக்கும் சோதனை, வேதனை, இழப்புக்கள் கொஞ்சநஞ்சமல்ல. பேரினவாதத்தின் இரும்புக்கரங்கள் சிறைகளில் இருக்கும் தமிழர்களையும் விட்டுவைக்கவில்லை. அவர்கள்மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட மோசமான தாக்குதல் சம்பவங்களின்போது உயிரைக்கூட விட்டிருக்கிறார்கள் தமிழ் இளைஞர்கள். இவ்வாறு அவர்களது சிறை வாழ்வு பெரும் அவலம் நிறைந்ததாகவே அழிந்து கொண்டிருக்கிறது. அவர் களுக்கு விதிக்கப்படக்கூடிய தண்டனைகளை விட மிக மோசமான தண்டனைகளை அவர்கள் பேரின வாதத்தின் இந்த இரும்புக் கரங்களுக்குள் இருந்துகொண்டு அனுபவித்து விட்டார்கள்.
இந்த தமிழ்ச் சிறைக் கைதிகளின் விடுதலைக்காக காலம் காலமாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் எதுவும் அவர்களின் விடுதலையில் தாக்கத்தை செலுத்தவே இல்லை. அவர்களின் விடுதலையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுக்கள் வெறும் காகித வேலைகளுடன் மட்டும் தமது பணியை முடித்துக்கொண்டன. அதற்கு அப்பால், செல்வதற்கான அதிகாரம் அந்தக் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. அதனால் அரசு எதைச் சொல்கிறதோ அதனையே சிரமேற்கொண்டு ஒப்புவிக்க வேண்டிய நிலைமை அந்தக் குழுக்களுக்கு ஏற்பட்டிருந்தது.
காலம்காலமாக ஆட்சிபீடம் ஏறிய அரசுகள் அரசியல் கைதிகளின் விடுதலையை ஒரு தேர்தல் கோஷமாக எடுத்துக்கொண்டனவே தவிர அவர்களின் விடுதலையில் உண்மையான–காத்திரமான–வெளிப்படைத்தன்மையை, அக்கறையைக் காட்டவில்லை. மாறாக அவர்களைத் தொடர்ந்தும் சிறைகளில் அடைத்துவைப்பதற்கு மறைமுக ஆதரவையே அளித்துவந்தன.
இம்முறையும் இந்த தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் மீண்டும் பேச்சுக்கள் எழுந்துள்ளன. மாற்றம் என்பதற்காக மைத்திரியை ஆதரித்தனர் தமிழர்கள். அந்த தமிழ்மக்களின் வாக்குகளினால் பத்தாண்டுகளாக ஆட்சிக் கதிரையில் கோலோச்சியிருந்த மஹிந்தவை கவிழ்த்து வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றினார் மைத்திரி. அதற்குப் பிரதிபயனாக அவர் தமிழ்மக்களுக்கு பெரிதாக ஏதேனும் செய்தாக வேண்டிய கடமை உள்ளது. அதனை அவர் நன்கு உணர்ந்துகொள்வார் என்பதில் ஐயமில்லை.
அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் விசேடமாக ஆராய்வதற்கென மூவர்கொண்ட குழுவொன்றை நியமித்திருப்பதாக பிரதமர் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடம் தெரிவித்திருக்கிறார். அந்தக் குழுவினர் விரைவில் அறிக்கை இடுவார்கள் என்றும் அதன் அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு உடனடி நடவடிக்கைகள் 'எடுக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார். பிரதமரின் இந்தக் கூற்று அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் மத்தியில் ஒரு மனத்திடத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அதனை எவ்வாறு முழுமையாக நம்புவது என்ற சந்தேகமும் உண்டு.
ஆகவே தொடர்ந்தும் அறிக்கைகள், வாய்ப்பேச்சுக்களை கைவிட்டு அதனை செயலில் காட்டுவதே சாலப்பொருத்தமானது. அவ்வாறானதொன்றையே இனிமேல் தமிழர்கள் சிங்கள அரசிடமிருந்து எதிர்பார்க் கிறார்கள்.
கடந்தகால அரசுகளைப் போலல்லாது கைதிகள் விடு தலை தொடர்பில் மைத்திரி அரசு இதயசுத்தியுடன் செயற்படவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களின் நிலை மாற்றம்; வெறும் 'கூத்து' மட்டும்தானா...?

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான புதிய அரசாங்கம், நிலையான, உறுதியான சமாதானத்தை எய்துவதற்கு முன்னோக்கிச் செல்ல வேண்டும் -

மேற்கண்ட அறிவுரையை, தேவையை, அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலாளர் அன்ரனி பிளிங்கன், இலங்கையின் இப்போதைய அரசிடம் எடுத்துக் கூறியுள்ளார். அமெரிக்காவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்ற எமது நாட்டின் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிளிங்கன் இதனைச் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலி வரை வாழும் இலங்கையர்கள், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் ஊடாகத் தெளிவான செய்தி ஒன்றை வழங்கி உள்ளனர். தமது நாடு இறுதியான - உறுதியான - சமாதானத்தை அடைவதற்கு முன் னோக்கிச் செல்ல வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது -

மைத்திரிபால பதவி ஏற்று நான்கு வாரங்கள் முடியும் முன்னர், ஊடகங்கள் மீதான கட்டுப் பாடுகள் நீக்கப்பட்டன. அத்துடன் இலங்கைப் பிரசைகள் அனைவரினதும் மனித உரிமைகளுக்கு மதிப்பு அளிக்கும் நிலைமையும் தோற்றுவிக்கப்பட் டுள்ளது -- என்றும் அவர் சிலாகித்துப் பேசியுள்ளார்.

போரால் உண்டான காயங்களைக் குணப்படுத்தும் முயற்சிகளை இலங்கை அரசு நிறுத்திவிடக்கூடாது என்பதனையும் அவர் அழுத்தித் தெரிவித்திருக்கிறார்; இடித்துக் கூறினார் என்றும் கொள்ளலாம்.

அமெரிக்க அரசின் அதிஉயர் அதிகாரி ஒருவர் தமது நாட்டிலிருந்து மேற்கண்ட கருத்துக்களை வெளிப்படுத்தினார் என்பதனைப் புறந்தள்ளவோ, அன்றி பத்தோடு பதினொன்றாக இத்தகைய அறிவுரைகள் தம்மை நோக்கிப் பாய்ந்து உள்ளதாகவோ, மைத்திரிபால சிறிசேன அரசு கணக்குப் போடக்கூடாது.

நல்லது. அநுராதபுரத்துக்கும் அதற்கு அப்பாலும் ஊன்றிப் பதிந்திருந்த பல பிரச்சினைகளைக் கையாள்வதில் புதிய அரசு வேகவேகமாக செயற்பட்டுள்ளது; கரிசனை காட்டுகிறது. தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

-- முன்னாள் (போர்க்காலத்தின்) இராணுவத் தளபதி மீதான தடைகள் நீக்கப்பட்டு விட்டன.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க மீது முந்திய அரசு விதித்திருந்த தடை நீக்கப்பட்டு விட்டது.

ஆனால் --

புதிய ஜனாதிபதி பதவி ஏறியதற்கு, மிகப் பெரிய அளவில் தமது வாக்குப் பலத்தைக் குவித்த, வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கும் போக்கும் மிக நலிவுற்றே காணப்படுகின்றன.

அதாவது, போரால் உண்டான காயங்களை ஆற்றுவதற்கான ஆரம்பப் புள்ளிதானும் துலக்கமாகத் தென்படவில்லை! முன்னர் தத்தமது வீடுகளில் முடங்கி அடங்கிக் கிடந்த தமிழ் மக்கள், நடுவீதிகளில் கூடி அழும்நிலையே தெரிகிறது; உருவாகி உள்ளது.

இது குறித்த சில உதாரணங்களை இங்கே தொட்டுக்காட்டுவது அவசியம்; பொருத்தம்.

◆ முதல்நாள் இரவில் திறக்கப்பட்ட ஓமந்தைச் சோதனைச் சாவடி, மறுநாள் இரவில் முந்திய சோதனைகளுடன் தொடரும் என்ற அறிவிப்பு உயர்ந்தது.

◆ வடக்கில் இருந்து படைகள் குறைக்கப்பட மாட்டா.

◆ இங்குள்ள இராணுவமுகாம்கள் அகற்றப்பட மாட்டா

◆ நல்லூர் பிரதேசசபைத் தலைவருக்கு, இரகசியப் பொலிஸார் பேசுவதாகக் கூறி, தொலைபேசி மூலம் பயமுறுத்தல்.

◆ வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஒருவரது முல்லைத்தீவு வீட்டில், இராணுவத் தளபாடம் உள்ளதாகக் கூறிப் படையினர் தேடுதல் முயற்சி.

◆ முன்னாள் போராளி ஒருவர் மன்னார் பஸ் நிலையத்தில் தாக்கப்பட்டமை.

இத்தகைய ஒரு சூழமைவில், புதிய அரசின் "நல்லாட்சி" என்பது நாடு முழுவதற்குமா, அல்லது சிங்கள மக்களின் பிரதேசங்களுக்கு மட்டும் தானா என்ற பென்னம்பெரிய வினா உயர்ந்து எழுந்து நிற்கிறது!

மொத்தத்தில், --

தமிழ் மக்களின் நல்லெண்ணத்தையும், ஆட்சிபீடம் ஏறுவதற்கு அவர்கள் அளித்த அதீத (வாக்கு) ஆதரவையும் அரசு ஒரு பொருட்டாக மதித்துச் செயற்படுவதற்கான சிறு நம்பிக்கை தானும் எமது மக்களிடம் பிறப்பதற்கு, சிறு ஏதுதானும் தென்படவில்லை!

தமது இளமையைத் தனிமையில் சிறைகளில் தொலைத்துக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு விடிவு காலம் தருமா அரசு?

தமது சொந்த வளவில் வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பும் மக்களின் ஏக்கம் தீர்க்கப்படுமா?

- என்ற வகைகள் சார்ந்த பல விடயங்களில் புதிய அரசு வெறுமனே கூத்தை மட்டுமா தொடர்ந்து அரங்கேற்றப்போகிறது என்ற சந்தேகமே எமது மக்களிடம் மேல் எழுந்து நிற்கிறது...........

# சீனாவின் துறைமுகநகர் திட்டம் இன்னமும் பரிசீலனையில்

## அமைச்சரவை முடிவெடுக்கவில்லை

■ சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்

வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கைக்கு வந்திருந்த சீன அதிபர் ஸி ஜின்பிங்கின் விசேட பிரதிநிதி லியு ஜியான்சாவோவுடன் கலந்துரையாடியபோது ராஜதந்திர நியமங்களை ஓரங்கட்டிவிட்டு, எமது அரசு சீன ஆதரவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் கொழும்புத் துறைமுகநகரத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு முடிவு எதுவும் செய்யவில்லை என்று நேரடியாகவே கூறிவிட்டார். இந்த பல கோடி ரூபா செலவிலான திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க இலங்கை அரசு முடிவு செய்திருப்பதற்கு, சீனா நன்றி பாராட்டுகிறது என்று சீன பிரதிநிதி கூறியபோது தான் அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு பதிலளித்திருந்தார்.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருந்த கருத்தைச் சீன பிரதிநிதி லியு முழுமையாக நம்பியிருக்கிறார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீன அரசு தவறாகப் புரிந்துகொள்ளாத விதத்தில் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர்களின் கூட்டத்தில் கூறியிருந்ததாக சேனாரத்ன குறிப்பிட்டிருந்தார்.

சீனாவுடனான உறவுகளைக் கருத்தில் கொண்டு அந்த நாட்டின் புரிந்துணர்வுடன் திட்டத்தில் நாங்கள் மாற்றங்களைச் செய்து கொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்திருந்தார். இந்த விடயத்தை ஆராய்ந்துள்ள அமைச்சரவை உபகுழுவொன்றும், திட்டம் முன்னெடுக்கப்படலாம் என்று தெரிவித்திருப்பதாக அமைச்சர் மேலும் கூறியிருந்தார்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் வெளியிட்டதொரு அறிக்கையில் அமைச்சர் சேனாரத்ன வெளியிட்டிருப்பது போன்றதொரு தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். இந்த அரசு பதவிக்கு வந்தவுடனே இந்தத் திட்டம் தொடர்பிலான அனைத்து ஆவணங்களும் வேண்டும் என்று கேட்டிருந்தேன். கிடைத்தவற்றை ஆராய்ந்த போது, முக்கியமான எல்லா ஆவணங்களும் காணப்படவில்லை யென்பது தெரிய வந்தது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையிலும் குறைபாடுகள் காணப்பட்டன. இதைப்பற்றி ஆராய்வதற்காக சிறப்புக் குழுவொன்றை நாங்கள் நிறுவியுள்ளோம். அத்துடன் எனது தலைமையிலும் அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் எல்லாம் கிடைத்தபின்பே ஒரு முடிவு எடுக்கப்படும். சில சுற்றுச்சூழல் குழுக்கள் இந்தத் திட்டத்தை முழுமையாகக் கைவிடும்படி ஆலோசனை கூறியுள்ளன. நாம் அப்படிச் செய்யவில்லை. இந்தத் திட்டம் முழுமையாக கைவிடப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாம் கொண்டிருக்கவில்லை என்று பிரதமர் கூறினார்.

அறிக்கைகளை முழுமையாக ஆராய்ந்த பின்னர் நாம் ஒரு முடிவு எடுப்போம். அவசியமானால் வர்த்தமானி அறிவித்தலினும் மாற்றம் செய்வோம். இது ஒரு மிகப்பெரிய திட்டம். சீன அரசின் அனுசரணை இருக்கிறது. இப்படியான ஒரு திட்டத்தை நாம் அதிரடியாக நிறுத்தி விடமுடியாது. அதே சமயம் நாட்டின் சுற்றுச்சூழலை நாம் பாதுகாக்க வேண்டும். அத்துடன் சட்டங்கள் விதிகளையும் கடைப்பிடித்தாக வேண்டும். குழுவின் அறிக்கை கிடைத்ததும், உபகுழு அதனை ஆராயும், அதன் பின்னர் அமைச்சரவை ஒரு தீர்மானம் எடுக்கும். இவை பற்றிச் சீன பிரதிநிதியிடம் கூறியுள்ளேன். அறிக்கை தயாராவதற்கு இரண்டு வாரங்களாவது எடுக்'கும் என்று விளக்கினார் பிரதமர்.

சேனாரத்ன வாரந்தோறும் ஏதாவது கூறி முன்னர் கெஹெலிய ரம்புக்வெலவைப் போல தவறிழைத்து வருவதுபோல் தெரிகிறது. ஒரு தடவை 44ஆவது பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பதவி விலகும் கடிதம் சமர்ப்பித்து விட்டார் என்று கூறியிருந்தார். அது நடக்கவில்லை. பின்னர் அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். இப்போதைய அரசில் பல்வேறு தரப்புகள் இணைந்திருப்பதால் முக்கியமானவர்கள் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்போல் தெரிகின்றது. சில சமயங்களில் அமைச்சர்கள் கூறுவதை பிரதி அமைச்சர்கள் மறுப்பதும் பிரதி அமைச்சர்கள் கூறுவதை அமைச்சர்கள் மறுப்பதும், நடந்துள்ளது.

இலங்கையில் சீனா மேற்கொண்டுள்ள அனைத்து முதலீடுகளும் மீள் பரிசீலனையில் இருப்பதாக மங்கள சமரவீர சீன பிரதிநிதியிடம் எடுத்துக் கூறியுள்ளார். கொழும்பு துறைமுக நகரத் திட்டம் கூட மர்மங்கள் சூழ்ந்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் திட்டம் பற்றி அமைச்சர்கள் தீர்மானித்த போது அதன் முழு விவரங்களும் ஆவண ரீதியாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று அப்போதைய எதிர்க்கட்சியினர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிடம் கேட்டிருந்தனர். ஆனால் அப்போதைய அரசு அவ்வாறு செய்யவில்லை. அதனால் பலத்த சந்தேகங்கள் ஏற்பட்டிருந்தன என்று கூறிய மங்கள சமரவீர மேலும் கூறுகையில், சீனாவில் அதிபர் ஸி ஜின்பிங் அங்கு ஊழல்களுக்கு எதிராகத் தீவிர செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார். அதே உணர்வுடன் இந்தப் புதிய அரசு எடுக்கும் ஊழல்களுக்கெதிரான நடவடிக்கையிலும் சீனா முழுமையாக ஒத்துழைக்கும் என்று எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார். அதன் மூலம் இங்கு ஊழல்களில் ஈடுபட்டிருந்தவர்களை நீதியின் முன்நிறுத்துவது சாத்தியமாகும் என்றார்.

பத்திரிகையாளர்களிடம் பேசிய போது குறித்த திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்ற செய்திகளை ஊடகங்களில் பார்த்தபோது அவ்வாறு ஒரு தீர்மானம் அமைச்சரவையால் எடுக்கப்படாத நிலையில் தமக்கு அது பெரும் அதிர்ச்சியாகவிருந்தது என்றார்.


### இந்திய தரப்புக்கு ஏற்பட்ட கவலை

அமைச்சர் சேனாரத்னவின் அறிவிப்பு கொழும்பிலுள்ள ராஜதந்திர வட்டாரங்களில் கணிசமான அளவு குழப்பகரமான கருத்துக்களை உருவாக்கியிருந்தது. குறிப்பாக இந்திய ஸ்தானிகரக அதிகாரிகள் இப்படியான ஒரு நிலைப்பாடு உருவானதற்கான அடிப்படைகளை அறிய முயற்சித்திருந்தார்கள்.

கொழும்பு துறைமுக நகர் திட்டம் முழுமையடைந்ததன் பின்னர், கொழும்பு துறைமுகத்தில் சீனா நிர்மாணித்துள்ள சர்வதேச கொள்கலன் முனையை அடுத்தாற்போல் இலவசமாக அரசினால் வழங்கப்படவிருக்கும் நிலப்பகுதியைச் சீனா தனக்குரியதாக வைத்திருக்கப் போகின்றது என்பதே இந்திய தரப்பினருக்கு கவலையை ஏற்படுத்தியிருக்கும் விடயமாகும். அந்தப் பகுதிக்கு அருகில் தான் சீனாவிலிருந்து வந்திருந்த சீன நீர்மூழ்கிகளும், போர்க்கப்பல்களும் கொழும்புக்கு வந்தபோது தரித்து நின்றுவிட்டுச் சென்றிருந்தன. இலங்கையால் முன் கோரிக்கை வைக்கப்படாமலே சீன நிறுவனம் ஒன்றினால் முன்வைக்கப்பட்ட யோசனையின் பிரகாரமான இந்தத்திட்டமானது எவ்வாறு உருவானது? யார் இதற்கு பொறுப்பாய் இருந்துள்ளனர்? தரகுப் பணம் செலுத்தப்பட்டதா? மற்றும் பெரிய திட்டங்களின்போது மேற்கொள்ளப்படும் சகல நடைமுறைகளும் பின்பற்றப்பட்டனவா? போன்ற விடயங்கள் முழுமையாக அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிய வருகிறது. மேற்கு மாகாணத்தில் கிழக்குப் பகுதியாக திறந்த வெளிநிலம் கட்டடங்கள் இன்றி அபிவிருத்தி வேலைகளுக்கென பயன்படுத்தக் கூடியதாய் தாராளமாக இருக்கும்போது பெரும் பணச் செலவில் கடல் பகுதியில் நிலம் மீட்டெடுக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்று, அரசின் உயர்நிலை அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

கடந்த சனிக்கிழமை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு பல தரப்பினரைச் சந்தித்துப் பேசவிருக்கும் அமைச்சர் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோன் ஹெரியை நாளை (12 ஆம் திகதி) சந்திக்கவிருக்கின்றார். இலங்கை ஜனாதிபதியின் சார்பில் ஹெரியை இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பொன்றையும் விடுக்கவுள்ளார். அடுத்தமாதம் ஐ.நா.மனித உரிமைகள் சபை கூடவிருக்கும் நிலையில் இந்தச் சந்திப்பு அதிகம் முக்கியத்துவமானதாக இருக்கும். மனித உரிமைகள் சபையின் 28வது மாநாடு மார்ச் 2ஆம் திகதி கூடுகின்றது. இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான மனித உரிமைகள் சபை விசாரணைக் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

முன்னைய அரசைப் போல நாங்கள் எதையும் மறுப்பவர்களாய் இல்லை. எமக்கு முன்னால் உள்ள கவலைகளை முதலில் தீர்த்துக் கொள்ள விரும்புகிறோம். நீதியும் நல்லிணக்கமும் எமக்கு அவசியம்; சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதல்ல. எமது மக்களுக்கு அது தேவைப்படுகின்றது என்று கூறியுள்ளார் மங்கள சமரவீர. இந்த விடயம் எமது 100நாள் வேலைத் திட்டத்தில் அடங்கியிருக்கிறது. போர்க்குற்றங்கள் தொடர்பான ரோம் நகர சர்வதேச உடன்படிக்கையில், இலங்கை கையெழுத் திடாதிருக்கும் நிலையில் அவ்வாறான குற்றங்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதற்குத் தேசிய மட்டத்தில் சுயாதீனமான நீதிவழங்கும் பொறிமுறை அவசியம் என்று அவர் கூட்டிக்காட்டினார்.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் ஓர் அணியை உருவாக்கி எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவரது தலைமையில் அரசு ஒன்றை அமைக்க இனவாத சக்திகள் முயற்சித்து வருகின்றன. ஊழல் மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்கள் இந்த அணியை ஏற்படுத்த முயற்சிப்பதாக குற்றச்சாட்டுக்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன. தமது மோசடிகளை மறைப்பதற்கு பதவி அவர்களுக்குத் தேவையாக உள்ளது.

# மோசடிகளை மறைப்பதற்கு

## மஹிந்த தலைமையில் அரசு அமைக்க முயற்சிகள்

வந்தியத்தேவர்

எந்த அரசு பதவிக்கு வந்தாலும் தமிழர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விரும்பாத நிலையே இலங்கை அரசியல் வரலாற்றில் இதுவரை காணப்பட்டு வந்துள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதுகூட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனவாதத்தை வாக்குச் சேகரிப்பதற்கான முதலீடாக மாற்றியிருந்தார். எவ்வாறாயினும் சிறுபான்மை இனத்தின் வாக்குகள்தான் தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கப் போகின்றன என்ற உண்மையைப் புரிந்து கொண்டதால் மைத்திரிபால சிறிசேன இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி எதுவும் குறிப்பிடாது நழுவல் போக்கிலேயே தனது பரப்புரையை முன்னெடுத்தார். யாழ். நகரில்கூடத் தமது நிலைப்பாடு குறித்து அவரால் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

முன்னைய அரசினால் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழர்களே என்பது தெரிந்த விடயம்தான். மஹிந்த மீண்டும் ஜனாதிபதியானால் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டு ஆட்சிமாற்றம் தேவை என்பதால் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமது ஆதரவைத் தமிழ் மக்கள் வழங்கினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நீண்ட ஆலோசனைக்குப் பின்னர் மைத்திரிக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டது. ஜனாதிபதி மைத்திரிபால சில பொதுவிடயங்களுக்குத் தீர்வு காண்பதில் நாட்டம் கொண்டுள்ளதாகவும் புதிய அரசின் செயற்பாடுகள் தமிழர்களுக்கு நன்மை அளிப்பதாக உள்ளதெனவும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அண்மையில் பேட்டி ஒன்றில் கூறியிருந்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலை குறித்துச் சொந்தக் காணிகளில் மீள்குடியமர்வு போன்ற சில முக்கிய விடயங்களில் தீர்வுகாண வேண்டியுள்ளது. ஆனால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது என்பதில் அரசு இன்னமும் மௌனமாகவே உள்ளது. சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன வடக்கில் நிலை கொண்டுள்ள பாதுகாப்புப் படையினரின் தொகை குறைக்கப் பட மாட்டாது என்று குறிப்பிட்டுள்ளார். அவரது இந்த அறிவிப்பு தமிழ் மக்களுக்கு அரசின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது. சமீபத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வடபகுதியில் உள்ள படைகளைக் குறைக்க முடியும் என்று தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் விடயத்தில் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துக்களைக் கூறிக்கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் பிரச்சினையில் ஒரே மாதிரியான கருத்துக்களையே கொண்டுள்ளன. தற்சமயம் இந்தக் கட்சிகள் இரண்டும் கூட்டணி ஏற்படுத்தி ஜனாதிபதித் தேர்தலைச் சந்தித்தன. இவை பிரதான கட்சிகள் என்பதால் தமிழர்கள் விடயத்தில் தமது முரண் பாடுகளைக் கைவிட்டு நாட்டின் நலனுக்காக ஒன்றுபட்டு சிறந்த தீர்வுக்கு உதவுவார்களா? என்பது கேள்விக்குரியது. ஏனெனில் இதுவரை தத்தமது பதவி நலன்களுக்காகவே இவர்களது முடிவுகள் இருந்து வந்துள்ளன. குழப்பம் விளைவிக்கும் அடிப்படைவாதம் தவிர்க்கப்பட்டு இவர்களிடத்தில் உண்மையான நல்லெண்ணம் உருவாகவேண்டும். ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி என்றவாறு தேர்தல்வரை மட்டுமே இந்த உறவு என்றால் அது அர்த்தமற்றதாகிவிடும்.

ஆளுநர், பிரதம செயலாளர்களை இடமாற்றுவதும், இராணுவம் அபகரித்த காணிகளை மீளளிப்பது பற்றிய நடவடிக்கைகள் மட்டும் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளல்ல. தமிழ் மக்கள் தமது மண்ணில் சகல வசதிகளையும் கொண்ட சுதந்திரம் மிக்கவர்களாக உரிமையுடையவர்களாக வாழவேண்டும். அதற்காக அவர்கள் கொடுத்த விலையின் பெறுமானத்தை சிங்கள மக்களுக்கு அங்குள்ள தலைவர்கள் எடுத்துக் கூறித் தங்களால் ஏற்படுத்தப்பட்ட பிரிவினைவாதக் கோட்பாட்டை அந்த மக்கள் மத்தியில் இருந்து களைவதற்கு முன்வர வேண்டும். அதற்கு முன்னர் தென்பகுதி அரசியல்வாதிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் தலைமையில் ஓர் அணியை உருவாக்கி எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவரது தலைமையில் அரசு ஒன்றை அமைக்க இனவாதச் சக்திகள் முயற்சித்து வருகின்றன. ஊழல் மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்கள் இந்த அணியை ஏற்படுத்த முயற்சிப்பதாக குற்றச்சாட்டுக்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன. தமது மோசடிகளை மறைப்பதற்கு அதிகாரப் பதவி அவர்களுக்குத் தேவையாக உள்ளது.

இன்றைய மாற்றம் இலங்கைக்கு ஒரு நல்ல சூழலை ஏற்படுத்தியுள்ளதாக உலக நாடுகள் கருதுகின்றன. அரசியல் மாற்றம் இலங்கைக்குப் பயனுள்ளதாக அமைய வேண்டுமானால் நேர்மையான அணுகுமுறையின் கீழ் தமிழர்களின் பிரச்சினைக்கு உறுதியான நிரந்தரத் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதை அனைத்து அரசியல் வாதிகளும் ஏற்றுக் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுக்க வேண்டும். மீண்டும் இனவாதம் தலையெடுத்தால் ஊழல் மோசடி அரசியல் வாதிகளின் அதிகாரத்தினுள் இலங்கை மீண்டும் அமிழ்ந்து விடும். இதற்கு மைத்திரிபால சிறிசேன காரணமாகிவிடக் கூடாது.



# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | 8 | 1 | | | | 7 |
| | 5 | | | 7 | | 4 | | 8 |
| | | | 2 | | 6 | | 5 | |
| | | | 9 | | | | 6 | 2 |
| 2 | 8 | | 6 | 3 | 1 | | 4 | 9 |
| 6 | 4 | | | | 8 | | | |
| | 1 | | 4 | | 3 | | | |
| 9 | | 4 | | 6 | | | 8 | |
| 7 | | | | 8 | 2 | 5 | | |

# எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 4 | 5 | 2 | 1 | 3 | 9 | 7 |
| 7 | 9 | 5 | 8 | 3 | 4 | 6 | 1 | 2 |
| 2 | 3 | 1 | 7 | 6 | 9 | 5 | 4 | 8 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 3 | 1 | 7 | 5 |
| 1 | 7 | 3 | 9 | 5 | 2 | 4 | 8 | 6 |
| 5 | 6 | 8 | 1 | 4 | 7 | 2 | 3 | 9 |
| 4 | 5 | 6 | 3 | 7 | 8 | 9 | 2 | 1 |
| 8 | 2 | 9 | 4 | 1 | 6 | 7 | 5 | 3 |
| 3 | 1 | 7 | 2 | 9 | 5 | 8 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### அமைதியைத் தேடு

சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் விரட்டியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பு என்பது பொருள். சகல தீமைகளையும் எதிர்த்துப் போரிடு. எண்ணத்தில் ஏற்படும் தீமைகள் செயலில் ஏற்படும் தீமைகள் முதலிய சகல தீமைகளோடும் போரிட்டுக் கொண்டேயிரு. இவ்வாறு இருப்பதில் நீ வெற்றி பெற்ற பின்னர் தான் அமைதி உன்னைத் தேடி வரும்.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 30 | 80 | 20 | 40 | 40 |
| கத்தரி | 60 | 50 | 60 | 60 | 40 | 40 | 60 |
| கரட் | 130 | 140 | 120 | 120 | 120 | 160 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 40 | 60 | 45 |
| டமிற்றை | 130 | 90 | 80 | 120 | 120 | 160 | 100 |
| பாகல் | 100 | 80 | 80 | 120 | 120 | 200 | 120 |
| கருணைக்கிழங்கு | 60 | 60 | 50 | 80 | 40 | 80 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 80 | 80 | 100 | 70 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 40 | 100 | 120 | 80 | 120 | 160 | 120 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 | 80 | 120 | 100 |
| தக்காளி | 180 | 180 | 180 | 180 | 180 | 200 | 250 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 70 | 80 | 120 | 80 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 30 | 20 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 160 | 150 | 130 | 160 | 160 | 200 | 250 |
| புடோல் | 80 | 60 | 70 | 60 | 80 | 120 | 80 |
| கோவா | 120 | 90 | 80 | 70 | 80 | 160 | 80 |
| வெண்டி | 120 | 100 | 80 | 60 | 70 | 100 | 120 |
| போஞ்சி | 160 | 130 | 100 | 180 | 120 | 200 | 140 |
| லீக்ஸ் | 160 | 240 | 180 | 200 | 220 | 200 | 180 |
| தேங்காய் | 50 | 60 | 60 | 70 | 40 | 50 | 45 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 60 | 80 | 65 |
| தேசிக்காய் | 30 | 50 | 30 | 20 | 40 | 50 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 10 | 30 | 10 | 20 |
| கறிமிளகாய் | 200 | 180 | 140 | 180 | 200 | 200 | 160 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 |
| பனங்கிழங்கு | 04 | 02 | 05 | 02 | 06 | 05 | 03 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 650 | 700 | 600 | 450 |
| நண்டு | 300 | 350 | 300 | 200 | 350 |
| கணவாய் | 450 | 600 | 500 | – | – |
| பாரை | 550 | 450 | 500 | 500. | – |
| சுறா | 550 | 500 | 550 | 1000 | – |
| சீலா | 300 | 400 | 500 | 400 | 300 |
| விளை | 600 | 450 | 450 | 400 | 350 |
| முரல் | 250 | 350 | 350 | – | – |
| கும்பிளா | 450 | 350 | 450 | 300 | 300 |
| கிழாக்கன் | 300 | 500 | 400 | – | – |
| ஓரா | 400 | 350 | 350 | – | – |
| திரளி | 150 | 250 | 250 | 200 | – |
| நகரை | 150 | 250 | 300 | – | 250 |
| சூடை | 150 | 150 | 160 | 150 | 60 |
| ஒட்டி | 200 | 250 | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 230 | 100 | 140 |
| பாலை | 400 | 250 | 400 | 300 | – |
| வாளை | 100 | 150 | 300 | 300 | 250 |
| கொய் | 80 | 250 | 80 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 250 | – | 250 |

## நாளை

**தை-29**
**வியாழக்கிழமை**
**12.02.2015**

திதி: அட்டமி: பி.ப.04.59 வரை
நட்சத்திரம்: விசாகம் பி.ப.01.17
சுபநேரம்: 08.04-09.34 வரை
இராகுகாலம்:02.04-03.34 வரை

# முருங்கைக் கீரையின் மருத்துவப் பயன்கள்

பச்சைக் கீரைகளில் எவ்வளவோ எண்ணிலடங்காப் பயன்கள் இருக்கின்றன. நாம் தான் அதனை முறையாகப் பயன்படுத்துவதில்லை. கீரை வகைகளில் இரும்புச் சத்து கணிசமாக உள்ளது. முருங்கை கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணியும்.



வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மந்தம், உட்சூடு, கண்நோய், பித்தமூர்ச்சை இவற்றை நீக்கும் குணம் படைத்தது முருங்கைக் கீரை. முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றன. இந்த இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் இரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல இரத்தம் ஊறும். பல் கெட்டிப் படும். தோல் வியாதிகள் நீங்கும். முருங்கைப் பட்டை, உலோகச் சத்துக்கள் நிறைந்தது. உணவில் கலந்த விஷத்துக்கும் நரம்புக் கோளாறுக்கும் இது நல்ல மருந்து. முருங்கை இலை சாறுடன் பால் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால் இரத்த சுத்திகரிப்புடன்,எலும்புகளையும் வலுப்படுத்தும். இதில் கர்ப்பிணிகளுக்கு தேவையான கல்சியம், அயன், விற்றமின் உள்ளன.

# நோய் நீக்கும் வாழைப்பழம்



வாழைப்பழங்கள் சாப்பிடுவதால் உடலுக்கு பல்வேறு பயன்கள் ஏற்படுகின்றன. வாழைப்பழத்தில் உடலுக்கு நன்மை தர கூடிய முக்கியமான விற்றமின்கள் காணப்படுகின்றன. விற்றமின் எ, பி1, பி2, பி6 மற்றும் விற்றமின் சி போன்றவை காணப்படுகின்றன. இது தவிர பொட்டாசியம், நார்ச்சத்துகள் மக்னீசியம் போன்றவையும் காணப்படுகின்றன. அதிக அளவில் காபோவைதரேட் காணப்படுகிறது. வாழைப் பழத்தில் பொட்டாசியம் அதிக அளவில் இருப்பதால் அது மூளையின் திறனை அதிகரிக்கிறது. மூளையை நல்ல மனநிலையில் வைத்து கொள்ள துணை புரிகிறது. நரம்புகளை சீராக வைத்துக் கொள்கிறது. பொட்டாசியம் இரத்த அழுத்தத்தையும் இதயத்தையும் சீராக இயங்க வைக்கிறது. வாழைப்பழம் சாப்பிடுவதால் அது எமது உடம்பில் நோய் நீக்கும் மருந்தாகச் செயல்படுகிறது.

வாழைப்பழத்துடன் பால் கலந்து சாப்பிட்டாலோ அல்லது தேன் கலந்து சாப்பிட்டாலோ அவை வயிறு சம்பந்தமான நோய்களைக் குறைக்கிறது. இரத்தத்தில் உள்ள சீனியின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைக்கிறது. இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவை அதிகரிக் கிறது. வாழைப் பழத்தை எம்முடைய உணவின் ஒரு பகுதியாக சாப்பிட்டு வந்தால் பக்கவாதத்தால் ஏற்படும் இறப்பு 40 சதவீதம் குறையும் என்று ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது.

# நட்சத்திரங்களின் பொதுப் பலன்கள்



## அச்சுவினி



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், நல்ல புத்திசாலியாகவும், பலராலும் விரும்பி நேசிக்கப்படுவராகவும், செல்வந்தராகவும் நன்கு வளர்க்கப்பட்டவராகவும் விளங்குவீர்கள். அத்துடன் பிறருக்கு மரியாதை காட்டும் பண்பாடும் உண்மைபேசும் குணமும், எப்போதும் மகிழ்ச்சி யுடன் இருப்பதான சுபாவமும் உங்களிடம் காணப்படும். நீங்கள் உங்கள் தொழிலில், பயிற்சி பெற்றவராக விளங்குவீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன், நீங்கள் நல்ல உறவுகளைப் பராமரித்து வருவீர்கள். நீங்கள் நல்ல உடை அணிவதிலும் ஆபரணங்களிலும் ஆசை கொண்டவர்.

## பரணி



பரணி நட்சத்திரம் தரணி கட்டி ஆள்வார்கள் என்பது ஜோதிட வாக்காகும். நல்ல முயற்சியான உழைப்பு இருந்தால் இது சாத்தியமாகும். நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், உங்களைப் பற்றி தவறாக யார் சொன்னாலும் அதைப் பொருட்படுத்தாமல் வாழ்வில் வெற்றி பெறப் போராடுவீர்கள். சில நேரங்களில் உங்களது போராட்டங்களில் பின்னடைவு ஏற்பட்டாலும் இறுதியில் வெற்றி கிடைக்கும்.

## கார்த்திகை



இந்த நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்தவராதலால், இள வயதிலேயே கஷ்டங்களையும்,போராட்டங்களையும் சந்திக்கவேண்டி வரும். எவருடைய வழிகாட்டுதலும் இல்லாமல் முன்னேறக்கூடியவர்கள். உங்கள் பண நிலைமை, சிறப்பாக இருக்காது. உங்களுக்கு பளிச்சென்ற நல்ல தோற்றமிருக்கும். நீங்கள் பரவலாகப் புகழ்பெற்று விளங்குவீர்கள். நேர்மையும்,நாணயமும் கொண்டவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்படும் வேலைகளை முடித்துக் கொடுக்கும் திறமை, உங்களுக்கு இருக்கிறது.

## ரோகினி



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், நீங்கள் தெய்வ ஈடுபாடு கொண்டிருப்பீர்கள். உங்களுக்கு விவசாயம் மூலமாகத் தான் முக்கியமாக வருமானம் கிடைக்கும். நீங்கள், நல்ல அழகிய தோற்றமுடையவராகவும், புத்திசாலியாகவும், புதிர்களுக்கு விடை கண்டுபிடிப்பதில் மிகுந்த சாமர்த்தியசாலியாகவும் விளங்குவீர்கள்

## மிருகசீரிடம்



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், போரிலும், போர் சார்ந்த உத்திகளிலும், தந்திரங்களிலும் வெற்றி காண்பீர்கள். மற்றவர்களிடம் மரியாதையோடும் பண்போடும் பழகுவீர்கள். உணர்ச்சி வெறியுடைய உங்களுக்கு, அரசு உயர் அதிகாரிகள் நல்ல மதிப்பும் மரியாதையும் அளிப்பார்கள். நேர்த்தியானவற்றை நன்கு உணர்ந்து பாராட்டக்கூடிய நீங்கள் எப்போதுமே, சரியான பாதையைத்தான் தெரிந்தெடுப்பீர்கள்.

## திருவாதிரை



இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் உண்மைக்கு மாறாக எதையும் செய்ய மாட்டார்கள். அறிவுத் திறன்பெற்ற புத்திசாலியாக இருப்பீர்கள். பிறருக்கு தர்மம் செய்து அதில் மகிழ்ச்சி காண முயலும் நீங்கள், பல சமயங்களில், முன் கோபம் கொண்டவராகவும், வருங்காலத்தில் நல்ல நம்பிக்கை கொண்ட தைரியசாலியாகவும் விளங்குவீர்கள். உங்கள் வாழ்க்கையில், சாதாரணமாக பல வசதிகளும் சுகபோகங்களும் இராது. நீங்கள் கடினமான வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கலாம். நீங்கள் செலவாளியாக இருப்பதுடன், துன்பங்கள் நேரிடும் போதும், மனம் கலங்காமல் இருப்பவர்.

## புனர்பூசம்



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், நீங்கள் பொறுமை சாலியாகவும், அமைதியான சுபாவமுடையவராகவும் இருப்பீர்கள். நல்ல குணத்துடன், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் அன்புக்கும், பிரியத்துக்கும் பாத்திரமானவராக விளங்குவீர்கள். உங்களுக்கு மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். நீங்கள் தாராள சிந்தையுடையவராக இருப்பீர்கள். குழந்தைகள் மூலம் மன நிறைவு பெற்று, நல்ல செல்வந்தராக விளங்குவீர்கள். மதிப்பு வாய்ந்த இரத்தினக் கற்களில் உங்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருக்கும். சொந்தத்தில் சொத்துக்களும் இருக்கும். நீங்கள் விரிவாக, பல இடங்களில் பயணம் செய்வீர்கள்.

## பூசம்



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், உங்கள் விருப்பங்கள்மீது, உங்களுக்குக் கட்டுப்பாடு இருக்கும். பொதுவாக பலரும் உங்களை விரும்பி நேசிப்பார்கள். சமய ஈடுபாடும், தாராள சிந்தையும், மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையும், உங்களிடம் காணப்படும். நீங்கள், நன்கு படித்த புத்திசாலியாகவும், தெய்வ நம்பிக்கையுடன், உண்மையில் உறுதி கொண்டவராகவும் இருந்து, வசதியான வாழ்க்கை நடத்துவீர்கள்.

# ஆணிடம் இல்லாத பெண்ணின் குணங்கள்




அரவணைப்பு என்பது வாழ்க்கைக்கு ஆதாரமானது, ஆதரவளிப்பது. எல்லாவற்றையும் அரவணைத்து ஆலோசனை கூறி, வாழ்வதற்கும், வளர்வதற்கும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் தயங்காமல் செய்யக் கூடியவள் பெண்.

இப்படிப் பிறருக்கு உதவி செய்து கொண்டு, அந்த உதவி செய்யும் குணத்தையே தான் வாழ்வதற்கும், பயன்படுத்திக் கொள்வது தான் பெண்ணின் அடிப்படையான சிறப்புக் குணம். உலகில் நிலைத்து வாழ்வதற்கு, தனது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என ஆணுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளதைப் போலவே, பெண்ணுக்கும் பிறருக்கு உதவும் நிலையிலும் இருக்க வேண்டும் என போதிக்கப்பட்டிருக்கிறது. திருமணத்துக்கு முன்பு வரை யாரென்றே தெரியாத ஒருவனுடன் திருமணமாகிப் புகுந்த வீடு செல்லும்போதே, புதிய சூழ்நிலையில், புதிய மனிதர்களோடு தான் இணைந்து போக வேண்டும் என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டுதான் தற்காலத்துப் பெண்ணும் செல்கிறாள். புதிய கணவனுக்காக எதையும் விட்டுக் கொடுக்கும் நிலையையும், கணவனின் கருத்துகளோடு ஒத்துப்போகும் பண்பையும் வளர்த்துக் கொள்கிறாள். தான் வேறு, தனது கணவன் வேறு என்ற எண்ணம் அகன்று, தனது கணவனின் விருப்பமே தனது விருப்பம், அவனது நோக்கமே தனது நோக்கம், அவனது இலட்சியமே தனது இலட்சியம் எனக் கருதி, அவனோடு தன்னை இரண்டற இணைத்துக் கொள்கிறாள். தனது கணவன் ஆறுதலாக, சுகமாக, மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஒரு சூழலைப் பெண் உருவாக்கி தனது நிலைப்பாட்டை உறுதிசெய்து கொள்கிறாள். இதன்மூலம் கணவன் தன்னை மீண்டும் மீண்டும் நாடி வரும் நிலையை உண்டாக்குகிறாள். தனது மென்மையான எண்ணங்களை வெளிப்படுத்த இயலாதவனாக ஆண் இருந்த போதிலும், குறிப்பால் அவனது எண்ணங்களை அறிந்து கொள்கிறாள். தன்னோடு இருப்பவர்களின் எண்ணங்களையும் குறிப்பால் அறியக் கற்றுக் கொள்கிறாள். ஆண் எதைச் செய்தாலும் அதை அன்புடன், காதலுடன் செய்ய வேண்டும் என்று பெண் எதிர்பார்ப்பாள். வாழ்க்கையில் அரவணைப்புக்கு அடுத்து அவள் விரும்புவது காதலிப்பதையும், காதலிக் கப்படுவதையும் தான். உடல் ரீதியாகத் தொடுவது, பற்றுவது, தழுவுவது, மன ரீதியாக உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது, செயல்படுவது ஆகிய ஒவ்வொன்றையும் தனது தாயின் உணர்வின்மூலம் ஒவ்வொரு பெண்ணும் இயல்பாகப் பெறுகிறாள். ஆண் குழந்தை தனது தாயிடம் இருந்து விலகிச் செல்வதைப் போல், பெண் குழந்தை செல்வ தில்லை. ஒவ்வொரு செயலையும் தாயிடம் இருந்து கற்றுக் கொள்கிறது. வாழ்நாள் முழுவதும் அவளது இந்த இயல்பு ஆணைக் காட் டிலும் பெண்ணுக்கு அதிக பாதுகாப்பை அளிக்கிறது. ஆணின் இதயத்தில் மூடப்பட்ட மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தி காதலுக்கும் நெருக்கத்துக்கும் அவள் காலங்காலமாக ஓர் இணைப்புப் பாலமாக இருந்து வருகிறாள். இதனால் உணர்வு ரீதியாக அனைவரையும்கவரும்வகையில்ஆணைவிடபெண் ஒரு படி மேலே போய்விடுகிறாள். ஆண்களிடம் இல்லாத பெண்களின் சிறப்புக்குணம் இது.



# இராமாயணத்தில்
## இவர்கள் யார்?

அகல்யை - இராமரின் அருளால் சாபம் நீங்கப்பெற்றவள்.
அகத்தியர் - இராமனுக்கு போர்க்களத்தில் உபதேசித்த மாமுனிவர்.
கும்பகர்ணன் - இராவணனின் தம்பி
கும்பன் - கும்பகர்ணனின் மகன்
கவுசல்யா, கைகேயி, சுமித்திரை - தசரதரின் பட்டத்தரசியர்
சீதா - இராமனின் மனைவி
சுக்ரீவன் - வாலியின் தம்பி
சூர்ப்பனகை - இராவணனின் தங்கை
தசரதர் - இராமனின் தந்தை
தாடகை - காட்டில் வசித்த அரக்கி
திரிசடை - அரக்கிகளுள் நல்லவள்
நாரதர் - பிரம்மாவின் மனத்தில் பிறந்தவர்
பரதன் - கைகேயியின் மகன்
மண்டோதரி - இராவணனின் பட்டத்தரசி
இராவணன் - குபேரனின் தம்பி
இராமன் - இராமாயண கதாநாயகன்
இலங்காதேவி - இலங்கையின் காவல் தெய்வம்
வால்மீகி - இராமாயணத்தை எழுதியவர்.
வாலி - இந்திரனின் அருளால் பிறந்த வானர வேந்தன்.
விஸ்வாமித்ரர் - இராமனுக்கு அஸ்திரவித்தை போதித்தவர்
விபீஷணன் - இராவணனின் தம்பி
அனுமான் - அஞ்சனை, கேசரி ஆகியோருக்கு வாயுபகவானின் அருளால் பிறந்தவன்





# நன்றி மறந்த சிங்கம்

முல்லை மலர் என்ற காட்டில் விறகு வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்தான் மனிதன் ஒருவன்.

அப்போது காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. பயத்துடன் ஓடத் தொடங்கினான் மனிதன்.

'மனிதனே பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்," என்ற குரல் கேட்டது.

வேட்டைக்காரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட சிங்கம் கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது. மனிதனைப் பார்த்த சிங்கம், "மனிதனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு... நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்," என்றது.

சிங்கத்தின் வார்த்தையை உண்மையென்று நம்பிவிட்டான் மனிதன். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்! நன்றி கெட்ட சிங்கம் மனிதன் மேல் பாய்வதற்கு தயாராயிற்று. இதனைக் கண்ட மனிதன், "சிங்கமே, நீ செய்வது உனக்கே நியாயமா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்தேனே... அதற்கு இதுதானா நீ காட்டும் நன்றி," என்றான்.


'என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன். முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?" என்றது சிங்கம். அவ்வேளை அவ் வழியாக ஒரு நரி வந்தது.

'இதனிடம் நியாயம் கேட்போம்," என்று கூறிய மனிதன் நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான். சிங்கம் முந்திக் கொண்டு "நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்'. 'எந்தக் கூண்டிற்குள்?' என்றது நரி.

'அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள்," என்றது சிங்கம் 'எப்படி அடைந்து கிடந்தீர்கள்?" என்றது நரி.

சிங்கம் விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடியது. 'நரியாரே! இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்துவிட்டீரே! " என்று கத்தியது சிங்கம். நன்றி மறந்த சிங்கம் தன் நிலையை நினைத்து நொந்து போனது.

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





## பொது அறி !

நெல் விளைச்சல் தரும் நிலத்தில் இருந்து அதிகப்படியாக வெளிவரும் வாயு?
ஈத்தேன்.

அவுஸ்ரேலியாவின் முதல் பெண் பிரதமர் யார்?
ஜூலியா கில்போர்ட்.

கோவாவின் பிராந்திய மொழி எது?
கொன்கனி.

தேசிய மனித உரிமை ஆணையம் இந்தியாவில் அமைக்கப்பட்ட ஆண்டு?
1993.

ஈராக் போர் தொடர்பான அமெரிக்க ராணுவத்தின் ரகசிய விவரங்களை வெளியிட்ட இணையத்தளம்?
விக்கிலீக்ஸ்.



# நான் யார்
## எப்போதாவது நீங்கள் நினைத்ததுண்டா?



நம் அனைவரின் மனங்களிலும் நம்மைப் பற்றிய ஒரு சித்திரம் இருக்கிறது. அந்தச் சித்திரம் பெருமளவுக்கு நாம் வாழும் சமூகத்தால் உருவாக்கப்பட்டது. உலகத்தைப் பொறுத்தவரை அந்தச் சித்திரம்தான் நாம். அது வெறும் சித்திரம்தான் என்பதுகூட யாருடைய நினைவிலும் இல்லை என்பதுதான் உண்மை. இந்தச் சித்திரத்தையே 'நான்' என்று நினைத்துக்கொள்வதால் நம் உண்மையான சுயம் பற்றிய கேள்விகூட யாருக்கும் எழுவதில்லை.உண்மையில் யார் அதை நமக்குள் உருவாக்குகிறார்கள்? சிறு வயதில் நமக்கு நிகழும் அனுபவங்கள்தான் அந்தச் சித்திரத்தை உருவாக்குகின்றன. அதில் பெரும் பங்கு நம் பெற்றோருடையதுதான். நம் பெற்றோர் ஏன் இவ்வாறு செய்ய வேண்டும்? அவர்கள் வேண்டுமென்று இதைச் செய்வதில்லை. சமூக நியதிகளின்படி இதைத்தான் தாம் செய்ய வேண்டும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதனால்தான் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள். அதன்படி பார்த்தால் நம் பெற்றோர்களின் வழியாகச் சமூகம்தான் இதைச் செய்கிறது. அவர்களையும் அவர்களுடைய பெற்றோர்கள் இவ்வாறுதான் வளர்த்தார்கள். அவர்களும் சமூகத்தின் கைப்பாவைகள்தான். இந்த மனச் சித்திரத்தின்படி நாம் ஒவ்வொருவரும் நம்மை ஒவ்வொரு கணமும் மற்றவர்களுடனும் சமூகம் ஸ்தாபித்துள்ள மாதிரி மனிதனுடனும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்கிறோம். நம்மைத் தொடர்ந்து உள்ளுக்குள்ளே குறைவாகவே, இழிவாகவே மதிப்பிட்டுக்கொள்கிறோம். 'நான் சரியில்லை' என்ற எண்ணம் நம் எல்லோரின் மனத்திலும் இருக்கிறது. ஆனால் இந்த எண்ணம் நமக்குப் பிடிப்பதில்லை. அதனால் இதை ஈடுகட்டும் வண்ணமாக நம்மைப் பற்றி வெளியில் மிகவும் பெருமையாகப் பேசிக்கொள்கிறோம். அதை நிரூபிக்கும் நோக்கத்துடன் எதையாவது செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் தாழ்வு மனப்பான்மை நம்மை உள்ளே வாட்டிக்கொண்டுதான் இருக்கிறது. இந்த மாதிரியான வாழ்க்கை நமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. இதுதான் நம் ஆழ்மனத்தில் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கை. இதன் காரணத்தால்தான் உண்மையான, நிலையான சந்தோஷத்துடன் வாழும் யாரையும் நம்மால் பார்க்க முடிவதில்லை. நாம் வேறு, நம் மனச் சித்திரம் வேறு என்னும் உண்மை நமக்குத் தெரியவரும்போதுதான் நம்மால் இந்த நிலையிலிருந்து விடுபட முடியும். உண்மை சார்ந்த மனச் சித்திரம்தான் நமக்கு சந்தோஷத்தைத் தர முடியும்.

# சர்ச்சையைக் கிளப்பியுள்ள நாமலின் கைக்கடிகாரங்கள்

## சுமார் 7 கோடி ரூபா பெறுமதியானவையாம்

கொழும்பு, பெப். 11
மஹிந்தவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, 13 விதமான கைக்கடிகாரங்களைப் பயன்படுத்தியதாகவும், அவற்றின் பெறுமதி 7 கோடியே 67 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் இணையத் தளத்தில் இந்தத் தகவல்கள் பகிரப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில், பல்வேறு ஊழல்கள் நடைபெற்றதாக தினமும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் மஹிந்த மற்றும் அவரது குடும்பத்தினர் ஆடம்பரமாக வாழ்ந்தமை தொடர்பிலான ஆதாரங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதனடிப்படையில், மஹிந்தவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, தனது கைக் கடிகாரங்களுக்கு மட்டும் கோடிக் கணக்கான ரூபாவை செலவு செய்துள்ளார். நாமல் பங்கேற்ற நிகழ்ச்சிகள் தொடர்பான ஒளிப்படங்களின் அடிப்படையில், அவர் கையிலிருந்த கடிகாரங்களையும் அவற்றின் சந்தைப் பெறுமதி என்னவென்பதையும் வைத்தே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாமல் ராஜபக்ஷ, பாவித்த ஒரு கைக்கடிகாரத்தின் விலை மட்டும் 59 இலட்சம் ரூபா எனத் தெரிவித்திருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகம், நாமல் இது போன்ற 13 கைக்கடிகாரங்களைப் பாவித்ததாகவும், இவற்றின் மொத்தப் பெறுமதி 7 கோடியே 67 லட்சம் ரூபா எனவும் தெரிவித்துள்ளது.

50 ஆயிரம் ரூபா சம்பளம் பெறும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் இதுபோல வீண்விரயம் செய்ய எவ்வாறு முடிகிறது? இதற்கான பணம் எங்கிருந்து வந்தது? எனவும் அவ்வூடகம் மேலும் கேள்வி எழுப்பியுள்ளது.

"அதேவேளை, என்னிடம் 2, 3 கடிகாரங்களே உள்ளன. அதில் சில கடிகாரங்கள் பரிசாக வழங்கப்பட்டவை. இணையத்தளத்தில் வெளியிட்டிருக்கும் புகைப்படங்கள் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் என் மீது சுமத்துகின்றன. எனினும் மக்கள் இவற்றை நம்புவார்கள் என்று எனக்கு தோன்றவில்லை."– என்று கூறியுள்ளார் நாமல் ராஜபக்ஷ.

"ஒரே கடிகாரத்தை வித்தியாசமான முறையில் புகைப்படங்கள் எடுத்து என் மீது சேறு பூசுவதற்கு நினைக்கிறார்கள்"– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற–5)

## துமிந்த பொலிஸாரால் விசாரணை

கொழும்பு, பெப்.11
கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரபல போதைப் பொருள் வர்த்தகர் வெலே சுதாவுடன் வைத்திருக்கும் தொடர்பு குறித்தே அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற)

## பஸிலுக்கு பதில் சுசில்

### சுதந்திரக் கட்சியினர் கோருகின்றனர்

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வகித்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டாக இணைந்து இவ்வாறு கோரியுள்ளனர். பஸில் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பதவி விலகியுள்ளார் என்று கூறப்படுகின்றது. மேல் மாகாண சபை உறுப்பினரான அரசியலில் களமிறங்கிய சுசில், மேல் மாகாணசபையின் முதலமைச்சராகவும் பின்னர் பல்வேறு அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளார். (ற)

## சிறை சென்று சந்தித்தார் திஸ்ஸவின் மகள்

கொழும்பு, பெப்.11
போலி ஆவணம் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவை அவரது மகள் சிறைக்குச் சென்று சந்தித்தார்.

தந்தைக்கான மதிய உணவுடன் சென்ற துல்மினி அத்தநாயக்க, அவரைச் சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையில்; "தந்தை நலமாக உள்ளார். அவரை விரைவில் பிணையில் எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன"– என்று கூறினார்.

துல்மினி அத்தநாயக்க பிரிட்டன் நிவ் காசல் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியாவார். (ற)

## மரண அறிவித்தல்கள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 | | 10 |
| 12 |  | 02 |
| 1944 | | 2015 |


### துரையர் இராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்-அச்சுவேலி மத்திய கல்லூரி)

தம்பாலை அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையர் இராசா நேற்று (10.02.2015) காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான துரையர்- பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னபூரணத்தின் அன்புக்கணவரும், கேதீஸ்வரன்(கிளை முகாமையாளர்-அச்சுவேலி பல நோ.கூ.சங்கம்), ரமேஸ்குமாரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் -கோப்பாய்) காயத்திரி(அபிவிருத்தி உத்தியோகத்தர்-மாவட்ட செயலகம்,யாழ்) ஆகியோரின் அன்பு தந்தையும், நிரோஜாவின் அன்பு மாமனாரும், நல்லையா (இந்தியா), மார்க்கண்டு ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2015) பி.பகல் 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தம்பாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
-குடும்பத்தினர்-

### குருமூர்த்தி கணேசமூர்த்தி (புங்குடுதீவு-5)



புங்குதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட குருமூர்த்தி கணேசமூர்த்தி நேற்று (10.02.2015) செவ்வாயக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான குருமூர்த்தி-இராமாசிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும், சர்வலோகசிந்தாமணி சதாசிவ மூர்த்தி, காலஞ்சென்ற புஸ்பமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஸ்வலிங்கம் (நயினாதீவு), சிவபாக்கியம் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், சிவகாமிப் பிள்ளை, ஏரம்பமூர்த்தி, விநாயகமூர்த்தி, பராசக்தி, இராசையா, அன்ன பூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் மைத்துனரும், கேதீஸ் வரன், சத்தியமூர்த்தி, சசிகலா, கிருஷ்ணகலா, சுசிகலா, சர்வானந்தி, சபிலா, ஜெகனி, சாளினி, தர்ஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2015) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. விஸ்வலிங்கம் (நயினாதீவு)
(மருமகன்)
D.Sam (பேரன்)

இல. 237,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (56677) (10)

### சுப்பிரமணியம் புனிதவதியார்



அராலி தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் புனிதவதியார் நேற்று (10.02.2015) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம் அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் ஆகியவற்றின் தர்மகர்த்தாவுமான காலஞ்சென்ற சுப்பிரமணியம்–முத்துநாயகி தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற சிவஞானரத்தினம், செந்தில்நாதன் (ஓய்வுபெற்ற அதிபர், தொழிநுட்ப கல்லூரி ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தையல்நாயகி, ஞானசௌந்தரி ஆகியோரின் மைத்துனியும், சிவகாந்தன், கஜநேசன், மயூரேசன், யதுர்சன், கல்பனா, தயாழினி, மதனா ஆகியோரின் அன்பு மாமியும் அபிஷ்னாவின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2015) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு, பூணாவடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு.செந்தில்நாதன்
(சகோதரன்)

(56678) (10)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி யக்கோவா (கிளி) யேக்கப்

யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யக்கோவா யேக்கப் 06.02.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி-சுவக்கீனம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுவாணி- மர்கிரேட் தம்பதியரின் அன்பு மருமகளும், யேக்கப்பின் (சிங் கன்) பாசமிகு மனைவியும், யான்சனின் (பிரான்ஸ்) பாசமிகு தாயும், மரியம்மா (கனடா), இராஜேந்திரம் (பிரான்ஸ்), ஆபிரகாம் (கனடா), கீதபொன்கலன் (பிரான்ஸ்), எலிசபெத், மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யாழினியின் (பிரான்ஸ்) அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா, சலமோன் மற்றும் புலோமினா, நீற்றா, மாசில்லா, எலிசபெத் (பிரான்ஸ்), யோசேப் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெறினா (பிரான்ஸ்), யதுஷா (பிரான்ஸ்), ஜிம்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (12.02.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து இளவாலை புனித யூதாததேயு ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இளவாலை மேற்கு, இளவாலை. குடும்பத்தினர்.

### சந்திரசேகரலிங்கம் சிறிகரன் (அசோக்)

பிறப்பு: 20.03.1982 இறப்பு: 07.02.2015



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட சந்திரசேகரலிங்கம் சிறிகரன் கடந்த 07.02.2015 சுவிஸர்லாந்தில் அகால மரணமடைந்தார்.
அன்னார் தம்பிப்பிள்ளை சந்திரசேகரலிங்கம் (ஓய்வு பெற்ற C.T.B நடத்துநர் சுந்தரலிங்கம்)- சந்திரசேகரலிங்கம் தவமணிதேவி தம்பதியரின் அன்புப் புதல்வனும், சுகந்தியின் அன்புக் கணவரும், ராகுல், ஐஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறீதரன், உமா, ஜோதிகா, கிரிகரன் ஆகியோரின் சகோதரனும், சிவானந்தராசா, சுதன், ராதிகா ஆகியோரின் மைத்துனரும், கமிலா, காருனி, பிரித்திகா, சுயித், றெபேக்கா ஆகியோரின் மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2015) முற்பகல் 11 மணியளவில் சுவிஸர்லாந்தில் நடைபெறும். நீர்வேலி வடக்கு, மீனாட்சியம்மன் கோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுந்தரலிங்கம் (தந்தை)
(ஓய்வுபெற்ற C.T.B நடத்துநர் )

தொ.பே.இல. 0041417105905
0041779554461
0774146284

### கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை



அத்தியடியைப் பிறப்பிடமாகவும், 264, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை நேற்று (10.02.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தையல்நாயகி தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் மருமகனும், நாகம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கணேசலிங்கம், ராசலிங்கம், கனகேஸ்வரி (கனடா), சியாமளா (ஆசிரியை, யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), சுதர்ஷன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி, டேவிற் தயாளன் (கனடா), முத்துக்கிட்டினர், ரௌத்திரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனும், கஜந்தன், சுசில்ராஜ், சுதாசினி, கோகிலராஜ், புவிதராஜ், அருந்தினி, கேசினி, கவின் (கனடா), ஹரினி, கிஷோர் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மிகு பேரனும், விஷாலி, அக்ஷயன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும், மங்கயர்க்கரசியின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
264, நாவலர் வீதி, யாழ். (56675) (10) குடும்பத்தினர்.

# ஹக்கீமையும் அல்-குவைதாவையும் தொடர்புபடுத்துகிறது பொதுபல சேனா

## விசாரணைக்கும் வலியுறுத்து; சூறா சபைக்கும் கடும் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.11

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும், அல்–குவைதா அமைப்புக்குமிடையில் தொடர்பு இருக்கின்றது என நேற்று சந்தேகம் வெளியிட்டுள்ள பொதுபலசேனா அமைப்பு, இதுபற்றி உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

சூறா சபை என்ற அமைப்பே பில்லேடனுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. எனவே, அந்தப் பெயரில் இலங்கையில் இயங்கும் தேசிய சூறா சபை பற்றியும் ஆராயப்பட வேண்டும் என்றும், முகத்தை மூடிமறைக்கும் ஆடைகளுக்குத் தடைவிதிக்கவேண்டும் என்றும் அவ்வமைப்பு கூறியுள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அல்–குவைதா, தலிபான் போன்ற அமைப்புகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்றும், அவ்வாறான அமைப்புகளுடன் தொடர்பை வைத்திருப்பவர்கள் கைதுசெய்யப்படவேண்டும் என்றும், அவர்களின் சொத்துகள் முடக்கப்பட வேண்டும் என்றும் நிறைவேற்றப்பட்டுள்ள சரத்துகளை நாம் வரவேற்கின்றோம். இலங்கையின் மேற்படி பயங்கரவாத அமைப்புகளின் தொடர்பு இருப்பதாக நாம் பல தடவைகள் கூறியுள்ளோம். காலம் கடந்தாவது இந்த உண்மை இன்று ஏற்கப்பட்டுள்ளதாலேயே இவ்வாறான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

அதேவேளை, சிங்கள – பௌத்த அமைப்புகளுக்கு எதிராக அமைச்சர் ஹக்கீம் ஐ.நாவுக்கு 50 பக்கங்களில் அறிக்கை வழங்கினார். அதில், அல்–குவைதா அமைப்புக்கு எதிராக எழுதப்பட்டிருந்த புத்தகம் குறித்தும் அவர் குறிப்பிட்டிருந்தார். இவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கையில், அல்–குவைதா அமைப்புடன் ஹக்கீமுக்கு தொடர்பிருக்கலாம் என சந்தேகம் எழுகின்றது. ஆகவே, இதுபற்றி விசாரிக்கப்பட வேண்டும்.

அத்துடன், கனடாவில் ஹலால் சான்றிதழ் வழங்கும் நிறுவனமொன்று, அல்–குவைதா அமைப்புக்கு, நிதி உதவி வழங்கியுள்ளது எனத் தெரியவந்துள்ளது. எனவே, இங்கு ஹலால் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள் பற்றியும் கண்காணிப்பு நடத்தவேண்டும். அது மட்டுமல்ல, தேசிய சூறா சபை பற்றியும் விசாரணை தேவை. மதரஸாக்கள் குறித்தும் விழிப்பாகவே இருக்கவேண்டும். – என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ற–சி)

# பெப்ரவரி 28 முதல் மார்ச் 3 வரை திருமலையில் உள்ளக விசாரணை

## ஆணைக்குழுவின் பதவிக்காலம் ஓகஸ்ட் வரை நீடிப்பு

கொழும்பு, பெப்.11

காணாமற்போனோர் தொடர்பிலும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த கட்ட அமர்வுகள் பெப்ரவரி 28ஆம் திகதி முதல் மார்ச் 3ஆம் திகதிவரை திருகோணமலையில் நடைபெறவுள் ளன.

இந்த அமர்வு முடிவடைந்த பின்னர் மேற்படி குழு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை சந்தித்துப் பேச்சு நடத்தும் என்றும், ஜெனிவாத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அதன் இடைக் கால விசாரணை அறிக்கை வெளியாகும் என்றும் அறியமுடிகின்றது.

இந்தத் தகவலை ஆணைக்குழு வின் பேச்சாளர் ஒருவர் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதேவேளை, உள்ளக விசாரணைகளை முன்னெடுக்கும் இந்தக் குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரும் நிலையில், அதன் பதவிக்காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட் டுள்ளது. இதற்கான ஒப்புதலை ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன வழங்கி யுள்ளார்.

அத்துடன், பரணகம குழுவின் செயற்பாடுகளை புதிய அரசு பலப்படுத் தும் என்றும், அதற்கு மேலும் சில உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம் என்றும் அறியமுடிகின்றது.

போர்க்காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப் பட்டிருந்த இந்த விசாரணை ஆணைக் குழுவின் விடயப்பரப்பை உள்ளக போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விஸ்தரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பரணகம குழுவின் கடைசி அமர்வு வவுனியாவில் நடைபெற்றது. இக்குழு வினருக்கு இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ள 21 ஆயிரம் முறைப்பாடுகளுள் படையினருக்கு எதிராகவே அதிக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள் ளன.

(ற–சி)

# தமிழக அரசே படகுகளை மீட்டு வந்து தரவேண்டும்

## இராமேஸ்வரம் மீனவர் விடாப்பிடி

இலங்கை அரசினால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்டுச் செல்வதற்கு தாம் தயாராக இல்லை. தமிழக அரசே படகை மீட்டுத் தர வேண்டும் என இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை– இந்தியாவின் ஏனைய மாவட்டங்களின் மீனவர்கள் படகுகளை எடுத்துச் செல்வதற்கு நாளை மறுதினம் கொழும்புக்கு வருதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த படகு உரிமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த கால அரசினால் பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் 87 படகுகள் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் இராமேஸ்வரம், புதுக்கோட்டை, காரைக்கால், நாகபட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், இராமேஸ்வரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களின் 40 இற் கும் மேற்பட்ட படகுகள் இதில் உள் ளடங்குகின்றன.

மீனவர்களின் படகுகளை விடுவிக்கப் புதிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், அவற்றை எப்போது விடுவிப்பது என்பது தொடர்பில் உத்தியோக பூர்வ அறிவிப்பைக் கடற்றொழில் அமைச்சு இன்னும் வெளியிடவில்லை.

இந்த நிலையில் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கு செல்ல இருப்பதால் படகுகளை நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சினால் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 87 இந்தியப் படகுகளின் உரிமையாளர்களும் அவருடன் இன்னொரு உதவியாளரும் இலங்கைக்குச் செல்ல முடியும் என மீன் வளத் துறை அதிகாரிகள் படகு உரிமையாளர்களுக்கு மாவட்ட ரீதியாக அறிவித்துள்ளனர்.

இதற்கமைவாகப் படகுகளின் உரிமையாளர்களும், உதவியாளர்களும் சென்னையில் உள்ள மீன்வளத்துறை அலுவலகத்துக்குச் சென்று விசா மற்றும் கடவுச்சீட்டுக்களுக்கான அனுமதிகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டு வருகின்றனர்.

கடந்த வாரம் படகு விடுக்கப்படும் என மீன்வளத்துறை மாவட்ட ஆட்சி அலுவலகத்தினர் மீனவர்களுக்குத் தெரியப்படுத்தியதால் மீனவர்கள் ஏற்கனவே விசா ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆயினும் இராமேஸ்வரம் மீனவர் படகு விடுவிப்பில் நம்பிக்கை இழந்துள்ளதால் மீண்டும் விசா ஒழுங்குகளை மேற்கொள்ளப் பின்னடித்துள்ளதுடன் தமிழக அரசே படகை மீட்டுக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரியுள் ள னர். எனினும் ஏனைய மாவட்ட மீனவர்கள் படகுகளை எடுத்துச் செல்வதற்கு கொழும்புக்கு வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை– இந்தியாவில் தடுத்த வைக்கபட்டுள்ள 18 இலங்கை மீனவர்களின் படகுகளையும் மீட்டு வருதற்குக் கடற்றொழில் அமைச்சு சார்ந்த அதிகாரிகள் இந்தியாவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

(த–14)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளராகக் கடமையாற்றும் துரைசிங்கம் சிறில் தனராஜன் அவர்களின் அன்புத் தந்தை

**அப்பாத்துரை சிறில் துரைசிங்கம்**

அவர்கள் 05.02.2015 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்ட திட்டமிடல் செயலக உத்தியோகத்தர்கள்,
மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.

(C19869)
(12.3.7)

**வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



மண்ணுலகம் 15.02.1995

விண்ணுலகம் 28.12.2014

செல்வி

**மஞ்சுஷா தவராசா**

(கொக்குவில் இந்துக் கல்லூரி A/L 2014 மாணவி)

எமது மகளின் பிரிவுத்துயரில் பங்குபற்றிய கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் பாடசாலைச் சமுகத்திற்கும், மாணவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு எமது இல்லத்தில் நாளை (12.02.2015) வியாழக்கிழமை நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எம்மால் அழைக்கத் தவறியவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

முதலிகோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்

**கந்தையா திருஞானம்**

தோற்றம் 07.09.1948

மறைவு 02.02.2013

திதி: ஸப்தமி

சிறுமையில் இருந்து சிந்தனை கொடுத்து
சீர்பெறும் வாழ்வை சிறப்பாகக் காட்டினீர்
சிறந்த உங்கள் வாழ்வால் சிறந்தது எம் வாழ்வு
பெற்றவர் உற்றவர் மற்றவர் யாவரும்
கொற்றவர் என்று குவலயம் போற்ற
வெற்றுடல் தனைவிட்டு வேந்தனடி சேர்ந்தீரோ.....
வேறெதுவும் சொல்லவில்லை
"வேண்டும் அப்பா உங்கள் அன்பு"

கொக்குவில். குடும்பத்தினர்.

**7ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னை மடியில் 17 ★ 05 ★ 1939



ஆண்டவன் அடியில் 13 ★ 02 ★ 2008

**அமரர் மாதன் தம்பித்துரை**

நேசத்துடனும் அன்புப் பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர்வழியில் வாழவைத்த
எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகின்றோம்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு. மனைவி, பிள்ளைகள்.

# விஞ்ஞான ஆசிரியர் சங்கம் கடும் விசனம்

## யாழ். பல்கலை. பீடாதிபதிகளின் செயற்பாட்டுக்கு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி உட்பட பல பீடாதிபதிகளாலும் இரகசியமான முறையில் கையெழுத்திடப்பட்டு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் கடிதம் தொடர்பாக தாம் கடும் விசனமடைந்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கப் பொதுக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து தாம் வெளியிட்டு வரும் அறிக்கைகள் பல்கலைக்கழக கல்வி சார் மற்றும் கல்விசாரா நியமன முறைகேடுகளை ஆவணப்படுத்தியுள்ளது. ஒரு தொகுதி பீடாதிபதிகளின் அந்தக் கடிதமானது மேற்குறித்த எமது முறைப்பாடுகளை மூடி மறைப்பதற்கானதொரு முயற்சி என அறிகிறோம். கலைப்பீடாதிபதியின் வீடு தேடிச் சென்ற பீடாதிபதிகள் சிலர் குறித்த கடிதத்தில் இரகசியமானதொரு சதி முயற்சி போன்ற பாணியில் கையெழுத்திட அவசரப்படுத்தியதாக கடந்த 6 ஆம் திகதி விவாதிக்கப்பட்டபோது தெரியவந்தது. குறித்த பீடாதிபதிகள் வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையுடனும் நடந்து கொள்ள வேண்டிய தலைமைத்துவப் பதவிக்கான தகுதிகளை இழந்துவிட்டனர்.

எமது அறிக்கைகள் பல இடங்களிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அவை பேரவை உறுப்பினர்கள் பலருக்கும் அனுப்பப்பட்டிருந்தன என்பதனை நாம் பீடாதிபதிகளுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். எமது குற்றச்சாட்டுக்கள் எவராலும் மறுக்கப்படவுமில்லை. அவற்றுக்கான பதில்களும் எவராலும் தரப்படவில்லை. பல்கலைக்கழகத்துக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு ஒன்று முக்கியமான குற்றச்சாட்டாக மேன்முறையீட்டு நீதிமன்றால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த வழக்கானது எமது அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களில் ஒன்று.

அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்ட பீடாதிபதிகள் அனைவரும் தத்தமது பீட அங்கத்தவர்களுக்கு தமது செயற்பாடு குறித்து இதற்கென் விஷேடமாகக் கூட்டப்படும் பீடச் சபையில் விளக்கமளிக்க வேண்டியது அவசியம் எனக் கருதுகிறோம். எமது விஞ்ஞான பீடாதிபதியிடம் இதனை வேண்டி நிற்கிறோம்.

பீடாதிபதிகள் கல்வி மற்றும் நிர்வாகம் சார் விடயங்களில் தமது பீடச் சபைகளைக் கலந்தாலோசித்துத் தான் நிலைப்பாடுகளை எடுக்க வேண்டும் என்பதனை அவர்களுக்கு நினைவூட்டுகிறோம். இந்த விடயங்களில் பீடாதிபதிகளாக அவர்கள் தனிப்பட்ட முடிவுகளை எடுக்க முடியாது. ஆனாலும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள பீடாதிபதிகள் ஒரு வருடத்துக்கும் மேலாக தமது பீடச் சபைகளுடன் அவை குறித்து ஆராயவில்லை என்பது கவலையான உண்மையாகும். ஊழல்களைக் கூட்டாகப் புரிந்த பீடாதிபதிகள் அதனை மறைப்பதற்கான முயற்சிகளிலும் கூட்டாக ஈடுபட்டிருப்பது பல்கலைக்கழகத்தில் ஊழல்கள் திட்டமிட்ட வகையில் கூட்டாகப் புரியப்பட்டன என்பதனைத் தெளிவுபடுத்துகிறது. என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

# தொடர்ச்சி

### தமிழர்கள்

1974ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டின் போது 9 தமிழர்கள் கொல்லப்படக் காரணமான வன்முறைகள் பற்றியும் தீர்மானம் குறிப்பிடுகின்றது. அதே ஆண்டு செப்டெம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த தலைவர்களுக்கு, இந்தச் சம்பவம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஒரு மனுவைக் கொடுத்தார், அதிலே தீவு சுதந்திரம் அடைந்ததில் இருந்து தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிட்டிருந்தார் என்றும் தீர்மானம் கூறுகின்றது.

1977 ஓகஸ்ட் 12 முதல் 20 வரையான நாள்களில் யாழ்ப்பாணம் – கொழும்பு ரயில்களில் தமிழர்கள் தாக்கிக் கொல்லப்படுவதற்கும், சிங்களவர்களைத் தமிழர்கள் தாக்கினார்கள் என்று பரப்பப்பட்ட வதந்தியே காரணம் என்றும் தீர்மானம் தெரிவிக்கிறது. 300 தமிழர்கள் கொல்லப்படவும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் 25000 பேர் இடம்பெயரவும் காரணமான இந்தக் கலவரம், ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரதமராகி ஒரு மாத காலத்திற்குள் நடந்தது என்று சுட்டிக்காட்டுகிறது. இது பற்றி, வருத்தப்படவேண்டிய சாவுகள் என்று குறிப்பிட்ட ஜே.ஆர், "ஆனால் பிரிவினை வாதத்தை ஆதரிப்பதற்கு எதிராகக் கிளர்ந்த இயல்பான எதிர்ப்பு" என்று அதனை வர்ணித்ததையும் தீர்மானம் குறிப்பாகச் சுட்டுகின்றது. அதேயாண்டில் நாடாளுமன்றத்தில் பேசிய ஜே.ஆர், "சண்டை என்றால் சண்டை சமாதானம் என்றால் சமாதானம்" என்று பேசியிருந்ததையும் சுட்டிக்காட்டும் தீர்மானம், இனப்படுகொலை செய்யும் உள்நோக்கம் அரசுக்கு இருந்ததையே ஜே.ஆரின் வார்த்தைகள் சுட்டுகின்றன என்றும் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

கறுப்பு ஜூலை என்று வர்ணிக்கப்படும் 1983 ஜூலை 23 முதல் 30 வரையான நாள்கள் நிகழ்த்தப்பட்ட தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளும் கலவரங்களும், கொழும்புக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவிட்டார்கள் என்று பரப்பப்பட்ட வதந்தியின் மூலம் ஏற்படுத்தப்பட்டது என்று சுட்டிக்காட்டுகின்றது தீர்மானம். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படவும் 500 பெண்கள் வன்புணரப்படவும் 8 ஆயிரம் வீடுகள் நாசமாக்கப்படவும் 5 ஆயிரம் வர்த்தக நிலையங்கள் அழிக்கப்படவும் 37 தமிழ் அரசியல் கைதிகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்படவும் இந்தக் கலவரம் காரணமாகியது என்று தீர்மானம் சுட்டிக்காட்டுகிறது.

அதற்கு சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் டெய்லி டெலிகிராவ் என்ற பத்திரிகைக்கு கருத்துத் தெரிவித்த ஜே.ஆர். "தமிழர்களின் கருத்துக்கள் குறித்து நான் கவலைப்பட மாட்டேன். இப்போதும் நாம் அவர்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை.... அவர்களின் உயிர்கள் அல்லது கருத்துக்கள் குறித்து கவலைப்படுவதில்லை... உண்மையில், நான் தமிழர்களை வெளியே துரத்தினால் சிங்களவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்" என்று கூறியிருப்பதையும் தீர்மானம் சுட்டிக்காட்டுகிறது.

இவையெல்லாவற்றையும் பார்க்கும் போது, இனப்படுகொலை செய்வதற்கு ஒரு குழுவைத் தூண்டிவிடுவதற்கு வதந்திகள் பரப்பப்பட்டு வந்திருக்கின்றன என்பதை முழு வரலாற்றிலும் பார்க்கக்கூடியதாக இருப்பதை சபை கவனித்துள்ளதாகவும் தீர்மானம் கூறுகின்றது. நாஸி ஜேர்மனி, ருவாண்டா, முன்னாள் யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் இடம்பெற்றதைப் போலவே இங்கும் இடம்பெற்றுள்ளது என்றும் தீர்மானம் குறிப்பாகச் சுட்டுகின்றது. தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்கள் இனப்படுகொலையில் ஈடுபடுவதைத் தூண்டுவதற்கான கருவியாக வதந்திகளை இலங்கை அரசு பயன்படுத்தி வந்திருக்கிறது என்று தீர்மானம் அறுதியிட்டுச் சொல்கிறது.

சிறிலங்காவில் போரின் ஆரம்பமாக கறுப்பு ஜூலை குறிப்பிடப்பட்டாலும் இனக்குழும மோதல் அதற்கு முன்னரே ஆரம்பித்து விட்டது என்பதை வடக்கு மாகாண சபை வலியுறுத்துவதாகவும் தீர்மானம் கூறுகின்றது.

நீதிக்குப் புறம்பாகத் தமிழர்களைக் கொல்வதற்கு அதிகாரமளித்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு மாறி மாறி வந்த அரசுகள் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டதுடன், 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் 50க்கும் மேற்பட்ட கூட்டுக் கொலைகள் இடம்பெற்றுள்ளன என்றும் தீர்மானம் தெரிவிக்கின்றது.

அரசியல், சிவில் மற்றும் சமூகத் தலைவர்களின் படுகொலைகள், பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுதல், சித்திரவதை, பாலியல் வன்முறையை ஆயுதமாகப் பயன்படுத்தல் என்பன போர் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டதுடன், அடிப்படை உணவு மற்றும் மருந்துகளுக்கான தடை, வடக்கு கிழக்கு கரையோர சமூகங்கள் உள்ளிட்டவற்றின் கட்டாய இடம்பெயர்வுகள் என்பனவும் தமிழர்களுக்கு எதிராகப் புரியப்பட்ட அட்டூழியங்கள் என்று தீர்மானம் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

2008–09 ஆண்டுகளில் வன்னியில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை அதற்கு முன்பாக கிழக்கு மாகாணத்தில் ஒத்திகை பார்க்கப்பட்டது என்று தீர்மானம் கூறுகின்றது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சம்பூர் முதல் வாகரை வரையான பகுதிகளில் 2006 ஓகஸ்ட் இறுதியில் வலிந்த தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டு, ஷெல் தாக்குதல்கள் மூலம் மக்கள் வாகரை நோக்கி இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்று கூறும் தீர்மானம், ஐ.நா. அறிக்கைகளின்படி – உணவு மற்றும் மருந்துகள் முழுமையாகத் தடைசெய்யப்பட்டன என்றும் பாடசாலைகள், மருத்துவமனை கள் போன்ற பாதுகாப்பான இடங்கள் கூட கடுமையான ஷெல் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளமையையும் சுட்டிக்காட்டுகிறது. தொண்டு நிறுவனங்களும் பத்திரிகையாளர்களும் அந்தப் பகுதிக்குச் செல்வதை முதலில் தடுத்துவிட்டே அரசு இந்தக் கைங்கரியத்தைச் செய்ததாகவும் தீர்மானம் சுட்டுகின்றது.

இதன்போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஷெல் தாக்குதலாலும் துப்பாக்கிச் சூடுகளாலும் சிகிச்சையளிக்கப்படாத காயங்களாலும் பட்டினியாலும் உயிரிழந்தனர் என்று கூறும் தீர்மானம், 19 ஜனவரி 2007 இல் வாகரைக்குள் இராணுவம் புகுந்தது முதற்கொண்டு அந்தப் பகுதியை குடியேற்றமாக்கும் பணிகளை ஆரம்பித்து விட்டது என்றும் சுட்டிக்காட்டுகிறது.

போரின் போது அரச படைகள் வான்வழியாகவும் ஆட்லறிகள் மூலமாகவும் கடல் கலன்களில் இருந்தும் பொதுமக்களின் பகுதிகள் மீது திட்டமிட்டே குண்டுகளை வீசி வந்திருக்கின்றன என்றும் தீர்மானம் குற்றஞ்சாட்டுகிறது. கிளாஸ்டர் குண்டுகள் போன்ற தடைசெய்யப்பட்ட குண்டுகள் பயன்படுத்தப்பட்டமையையும் தீர்மானம் குறிப்பிடத் தவறவில்லை. 27 வருடப் போரில் 60ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையான தமிழர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள் என்று ஐ.நா. மதிப்பிட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டும் தீர்மானம், இவ்வாறான பெரும் எடுப்பிலான இனப்படு கொலை நிலைமை வடக்கு கிழக்கைச் சேர்ந்த பல தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேறி வேறு நாடுகளில் அகதிகளாகும்படி நிர்ப்பந்தித்து என்றும் கூறுகின்றது.

# மூன்றாம் கட்டப் பேச்சை சென்னையில் நடத்துங்கள்

### மீனவர்கள் பேச்சுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கோரிக்கை

இராமநாதபுரம்,பெப்.11

இலங்கை – இந்திய மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக மூன்றாம் கட்டப் பேச்சைச் சென்னையில் நடத்துவதற்கு மத்திய மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு இந்திய – இலங்கை மீனவர்கள் பேச்சுக் குழு ஒருங்கிணைப்பாளர் தேவதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கச்சதீவுப் பகுதியில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதாக இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து வருகின்றனர். அத்துடன் இந்திய மீனவர்கள் ட்ரோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதால் தமது கடல்வளம் அழிக்கப்படுவதாக இலங்கை மீனவர்கள் தொடர்ச்சியான குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது மாற்றுத் தொழில் முறைகளை மேற்கொள்ள கால அவகாசம் தருமாறு இலங்கை மீனவர்களிடம் இந்திய மீனவர்கள் கேட்டபோது, இலங்கை மீனவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழகத்தில் மீன்பிடித்தொழிலில் வருமானத்தை நம்பி இருப்போர் அதிகம். இந்த நிலையில் திடீரெனத் தொழில் முறைகளை மாற்றும் வகையில் மீனவர்களிடம் வசதி கிடையாது. இதற்கு மாற்றுத் திட்டத்தைத் தமிழக அரசு தான் பெற்றுத்தர வேண்டும். இரு நாட்டு மீனவர்களுக்கிடையிலும் சுமுகமான உறவை ஏற்படுத்து வதற்கு அரச மட்டத்திலோ, அதிகாரிகள் மட்டத்திலோ பேச்சு நடத்தித் தீர்வு காண முடியாது. இது மீனவர்கள் மட்டத்தில் நடத்தப்பட வேண்டிய பேச்சு. எனவே மீண்டும் ஒரு பேச்சை நடத்த இரு நாட்டு அரசும் ஏற்பாடு செய்ய வேண்டும். இலங்கை மீனவர்கள் சென்னைக்கு வருகை தந்து பேச்சை நடத்த வேண்டும்.

இந்திய மீனவர்களின் நிலைப்பாடுகளை இலங்கை மீனவர்களும் நேரடியாக பார்வையிடக்கூடிய ஏற்பாடுகளையும் மேற்கொள்ள முடியும் – என்றார். (த–14)

# அமைச்சு பதவிகள் தற்காலிகமே

### அர்ஜுன ரணதுங்க

அமைச்சுப் பதவிகள் தற்காலிகமானவை. நிறுவனங்களின் அதிகாரிகள் பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட வேண்டும் – இவ்வாறு அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். "அரசியல் முறைகள் எதுவாயினும் கடந்த அரசில் இடம்பெற்ற நன்மையானவை இடைநிறுத்தாமல் முன்னெடுத்துச் செல்லப்படும்"– என்றும் அவர் கூறியுள்ளார்.


**ஜேர்மன், சுவிஸ் (DEUTSCH) புதிய பிரிவுகள் ஆரம்பம்**

மேற்படி நாடுகளுக்கு செல்லவுள்ளோருக்கான Deutsch மொழி வகுப்புக்கள் ஜேர்மன் தூதரகத்தால் கோரப்படும் A1 பரீட்சைக்கு ஏற்ற வகையில் ஆசிரியர் Mr.R. மயூரதன் (மயூரன்) அவர்களால் கற்பிக்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:

215, கண்டி வீதி, சாவகச்சேரி. 181,1ஆம் மாடி, நெல்லியடி.

077 6454 998

**விற்பனைக்கு**

அலங்கார மீன்கள், கினிசறீன் (சீமைக்கிளுவை) கதியால்கள், றொட்வைலர் வகை ஒரு மாத நாய்க்குட்டி என்பன பளை பிரதேசத்தில் விற்பனைக்கு உள்ளன.

Kay Farm (Pvt) Ltd.

தொடர்பு:

077 2351028, 021 320 4233

(C/19065) (10)

**வாடகைக்கு**

கூலர் ரக வாகனம், வடி வாகனம் என்பன பளை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

Kay Farm (Pvt) Ltd.

தொடர்பு:

077 2351028, 021 320 4233, 077 160 4059

(C/19064) (10)

**விற்பனைக்கு**

பசுப்பால், முட்டை என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குள்ளன.

தொடர்பு: Kay Farm (Pvt) Ltd

077 235 1028 / 0213204233 / 077 160 4059

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய பிரதேசத்தில் சகலவசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 756 3781

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1982இல் பிறந்த கேட்டை நட்சத்திரம் 2இல் செவ்வாய் மொத்த கிரக பாவம் 56 உடைய Accountant (B.Sc, ACCA) ஆக பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான அழகிய மணமகள் தேவை.

தொடர்பு: 077 0360 555 (56670)

# கல்வி முறைப்பாடுகளை விசாரிக்க 50 அதிகாரிகள்

மத்திய கல்வி அமைச்சின் விசாரணை நடவடிக்கைகளை மிகவும் செயற்றிறனுடையதாக நடத்திச் செல்வதற்காக அமைச்சின் விசாரணை அலுவலர்களின் எண்ணிக்கையை 50 வரை உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை இந்த விசாரணைப் பிரிவுக்கு அறிவிக்க முடியும் என்று மத்திய கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அலுலர்களிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் விசாரணை அதிகாரிகளின் எண்ணிக்கையை 50 ஆக உயர்த்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை அலகு இனிமேல் மேலதிக செயலாளரின் முழுக் கண்காணிப்பின் கீழ் செயற்றிறனுடையதாக இயங்கும். விசாரணை நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத சகல வசதிகளையும் இந்த அலகுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசாரணைகளில் தேசிய பாடசாலைகள் மற்றும் ஏனைய பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் முறைப்பாடுகள் போன்று கல்வித்துறை தொடர்பாகப் பொது மக்களிடம் காணப்படும் சகல முறைப்பாடுகளையும் இந்த விசாரணை அலகில் முன்வைக்கலாம். அதன் பொருட்டு எந்தவொரு தொலைபேசி ஊடாகவும் 1988 என்ற எண்ணுடன் தொடர்பு கொண்டு அல்லது விசாரணை அலகின் 011-2785070 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு குறித்த முறைப்பாட்டைச் செய்யலாம். அத்துடன் மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி), விசாரணை அலகு, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அஞ்சல் மூலம் குறித்த முறைப்பாடுகளை அனுப்பிவைக்கமுடியும் என்றுமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

---

## சிறிலங்கா

1948 டிசெம்பர் 9ஆம் நாள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட, இனப்படுகொலைப் பிரகடனத்தின் அடிப்படையில் "சிறிலங்கா மேற்கொண்ட இனப்படுகொலையை" நிறுவியுள்ளது இந்தத் தீர்மானம். ஐ.நாவின் இந்தப் பிரகடனம் 1950ஆம் ஆண்டு சிறிலங்காவாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இனப்படுகொலை என்று ஐ.நா. வரையறுக்கும் 5 பிரிவுகளில் 4 பிரிவுகளின் கீழ் தமிழர்களுக்கு எதிராக சிறிலங்கா இனப்படுகொலை புரிந்தது என்று நிறுவுகின்றது வடக்கு மாகாண சபையின் தீர்மானம். இவற்றில் எந்த ஒன்றாவது ஒரு இனத்தை முழுமையாகவோ பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டால் அது இனப்படுகொலை தான் என்கிறது ஐ.நா. பிரகடனம்.

வடக்கு மாகாண சபையின் ஏகோபித்த ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்தார். சபையின் இரண்டு சிங்கள உறுப்பினர்களும்கூட தீர்மானத்தை ஆதரித்திருந்தனர்.

சபையின் 38 உறுப்பினர்களில் 31 பேர் நேற்று வருகை தந்திருந்தனர். கூட்டமைப்பின் ஆர்னோல்ட், அஸ்மின், மருத்துவர் சிவமோகன், பசுபதிப்பிள்ளை, கனகசுந்தரசுவாமி ஆகியோர் முன்கூட்டியே அறிவித்து விடுப்பு எடுத்திருந்தனர். அதனால் வருகை தரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் தவராசா மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அங்கஜன் ஆகியோர் வருகை தரவில்லை. அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ரிப்கான் பதியுதீன் வருகை தந்திருந்தபோதும் பிரேரணை நிறைவேற்றப்பட்ட போது சபையில் இருக்கவில்லை.

முதலமைச்சர் பிரேரணையை முன்வைத்தார். சபைக்கு வந்திருந்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அதனை வழிமொழிந்தனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஜனோபர், ஈபிடிபியின் தவநாதன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தர்மபால ஆகியோரும் எழுந்து நின்று தீர்மானத்தை வழிமொழிந்தனர். எதிர்க்கட்சியைச் சேர்ந்த வேறு இரு உறுப்பினர்கள் எழுந்து நின்று ஆதரவு தெரிவிக்காதபோதும் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் பெப்ரவரி 2002 முதல் நவம்பர் 2011 வரையான காலப் பகுதிக்குள் நடந்தவற்றின் மீது கவனம் செலுத்துகின்ற போதும், தமிழர்களுக்கு எதிரான சிறிலங்காவின் இனப்படுகொலை, தீவு சுதந்திரம் அடைந்தது முதலே ஆரம்பித்துவிட்டது என்று தீர்மானம் தெளிவுபடுத்துகிறது.

அது முதல் திட்டமிடப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு தமிழர்கள் குறிப்பாக வடக்கு கிழக்குத் தமிழர்கள் உட்பட்டு வந்திருக்கிறார்கள் என்றும் அது 2009இல் உச்சம் பெற்றது என்றும் கூடக் கூறுகின்றது தீர்மானம். சிறிலங்காவின் 60 வருடகால வரலாற்று வன்முறைகள், அரச ஆதரவில் நடந்த திட்டமிடப்பட்ட படுகொலைகள், மனிதாபிமானமற்ற கூட்டுக்கொலைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் கலாசார, மொழி அழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியது என்றும் தீர்மானம் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழ் மக்களை அழித்தொழிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடனேயே இவை அனைத்தும் செய்யப்பட்டன. எனவேதான் அதனை இனப்படுகொலை என்று கொள்ளவேண்டும் என்றும் வாதிடுகிறது தீர்மானம்.

ஒரு பகுதி தமிழ்ச் சமூகத்தின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கிய 1948இல் குடியுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டதில் இருந்து இன்று வரையில் இனப்படுகொலை சிறிலங்காவில் தொடர்ந்து வந்த ஒவ்வொரு அரசுகளாலும் மாறி மாறி மேற்கொள்ளப்பட்டதாக வடக்கு மாகாண சபை கருதுகின்றது என்றும் தீர்மானம் கூறுகின்றது. (உ)

## உண்மையை

### தமிழர் நிலை கேள்விக்குறி

"தமிழ் மக்களின் உரித்துக்களின் நிலை, அவர்களின் எதிர்பார்ப்புக்கள், அவர்களின் வருங்காலம் யாவும் இன்று ஒரு மயக்கமுற்ற நிலையை அடைந்துள்ளன. விளையாட்டுத் திடல் பந்து போன்று உலக அரங்கில் பலரின் உதைக்கும் எதிர் உதைக்கும் ஆளாகி வருகின்றது எமது நிலை.

எமது எதிர்பார்ப்புக்களை எங்கள் சிங்கள சகோதர சகோதரிகள் சந்தேகக் கண்கொண்டே நோக்கி வந்துள்ளார்கள். அது மட்டுமல்ல. சந்தேகக் கண்கொண்டே எமது சகோதர இனம் எம்மைப் பார்க்க வேண்டும், அதன் பொருட்டுத் தாம் அரசியல் குளிர்காய்தலில் ஈடுபட வேண்டும் என்ற சிங்கள மக்களின் அரசியல்வாதிகளின் குறுகியகால சிந்தனைக்கு நாம் இதுகாறும் பலியாகி வந்துள்ளோம்.

'உரித்தைக் கேட்டால் உதையடி தருவோம்;. நாம் உவந்தளிப்பதை உறுதியாகப் பற்றிக்கொள்; இல்லையேல் அதுவும் கிடைக்காது" என்ற உன்மத்த உளப்பாங்குக்கு நாம் உள்ளாக்கப்பட்டு வந்துள்ளோம்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

### வரலாற்று முக்கியமான நாள்

"தமிழ் பேசும் மக்கள் நீதியைத் தேடும் போராட்டத்தில் இன்றைய நாள் முக்கியமான ஒரு நாள். வரலாற்று ரீதியாக இன அழிப்பை எதிர்கொண்டுவந்த நாங்கள், எமது மக்களின் இதுவரையான உள்ளக் குமுறல்களை உலக அரங்கிலே கொட்டித் தீர்த்து நீதியைச் சர்வதேச விசாரணை மூலம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என்று கட்டியங் கூறும் நன்நாள். அரச கட்சி, எதிர்க் கட்சி என்ற பாகுபாடில்லாமல், இதுவரை காலமும் எம்மிடையே பலவிதமுரண்பாடுகளையும், மூர்க்கமான முடிவுகளையும் நாம் எம்முள் வெளிக்காட்டிவந்தாலும் நாம் யாவரும் பாதிக்கப்பட்ட மக்களே என்ற விதத்தில் ஒன்று சேர்ந்து எமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தும் ஒரு உயர்ந்த நன்நாள்."– என்றும் முதலமைச்சர் கூறினார்.

### முகத்திரை கிழியும்

"இன்றைய பிரேரணையை, முக்கியமாக எமது சிங்கள சகோதர சகோதரிகளுக்கு நாம் உண்மையை எடுத்துக் கூறும் ஒரு கருவியாகவே நான் பார்க்கின்றேன். "எமது இலங்கை வாழ் மக்களைப் பிரித்து வைத்து அரசியல் இலாபம் பெற முயன்ற எமது அரசியல்வாதிகளின் முகத்திரையைக் கிழிக்கும் ஒரு சாதனமாகவே இந்தப் பிரேரணையை நான் பார்க்கின்றேன்.

எமக்கு நேர்ந்த அவலங்கள் – அல்லல்கள் – அடிபிடிகள் – அனர்த்தங்கள் பற்றி வெளிநாட்டு மக்கள் உணர்ந்துள்ள அளவுக்கு, எமது உள்நாட்டு பெரும்பான்மையினத்தினர் அறிந்து கொள்ள நாம் இடமளிக்கவில்லை. ஆகவே எமது நாட்டு மக்கள் யாவரும் எமக்கு இதுவரை நேர்ந்த கதியை கரிசனையோடு கருத்துக் கெடுக்க வேண்டும் என்ற விதத்திலேயே இந்த பிரேரணை கொண்டு வரப்படுகின்றது."– என்றும் அவர் கூறினார்.

### சமாதானத்துக்கான வழி

"தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த இலங்கை அரசால் தமிழ்ப் பேசும் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கு நீதி தேடுவோருக்கு இந்தத் தீர்மானம் உறுதியாக இருக்கும் என்று நம்புகின்றேன். இது இலங்கைத் தீவில் நிலையான அமைதியையும் – மீள் நல்லிணக்கத்தையும் உருவாக்க வழி அமைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அடக்கு முறையும் – உரிமைப் புறக்கணிப்பும்; – நீதி மறுப்பும் – பக்கச் சார்பும் நிலையான சமாதானத்துக்கும் மீள் நல்லிணக்கத்துக்குமான சூழலை உருவாக்க இடமளிக்கமாட்டா. எனவேதான் உண்மையை எதிர்கொள்ள முன்வருவோர், நிலையான சமாதானத்தையும் இதய சுத்தியுடன் கூடிய மீள் நல்லிணக்கத்தையும் விரும்புவோர், மனிதாபிமானிகள் போன்ற யாவரும் இந்தத் தீர்மானத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த துணைபுரிய வேண்டும்."– என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

### நீதியைத் தேடும் பயணம்

"இது யாரையும் பழிவாங்கும் நோக்கத்துடன் எடுக்கப்படும் முயற்சியல்ல. மாறாக யாவருக்கும் நீதி மறுக்கப்படக் கூடாது என்பதற்கான முன்னெடுப்பே இது. பல்லாயிரக்கணக்கான உயிர்களைத்தான் எங்களால் படுகொலைகளில் இருந்து காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. குறைந்த பட்சம் அவர்களுக்கான நீதியைத் தானும் நிலைநாட்ட வேண்டும் என்ற நியாயமான வேட்கையின் வெளிப்பாடே இந்தப் பிரேரணை.

இரண்டாம் உலகப் போரில் இன அழிப்பைச் செய்தவர்கள் தற்போதும் தேடிக்கண்டு பிடிக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுவது, எந்தக் காலகட்டத்திலும் நீதி மறுக்கப்படக்கூடாது என்ற உலக மக்களின் சிந்தனைச் சிறப்பின் எதிரொலியே என்பதை நாம் மறந்து விடலாகாது. எனவே நீதியைத்தேடும் பெரும் பயணத்தில் எம்முடைய இந்தப் பிரேரணையானது அதனுடைய வகிபாகமானது முக்கியத்துவம் வாய்ந்தது."– என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

### இனஅழிப்புத்தான்

"இதுவரை காலமும் இலங்கையில் நடந்த சதிக் காரியங்கள் பல எவ்வாறு சர்வதேசச் சட்டத்தின் சரத்துக்களின் கீழ் சந்தேகமில்லாமல் இன அழிப்பு என்று ஏற்றுக் கொள்ளப் படலாம் என்பதை இந்தப் பிரேரணையானது எடுத்தியம்புவதாய் அமைந்துள்ளது.

பலர் இதனை இந்தத் தருணத்தில் கொண்டு வரவேண்டுமா என்று கேட்பார்கள். நாங்களே உவந்து ஒரு அரசை உருவாக்கி விட்டு அதனை உரசிப் பார்ப்பது போல் இந்த உபாயம் அமையாதா என்று கேட்பார்கள். உண்மையை உரைப்பதற்கு நேர காலங்கள் தேவையில்லை. நீதியைப் பெறுவதற்கு நீண்ட நேரம் நிற்க வேண்டும் என்ற கடப்பாடொன்றில்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டிய நிச்சயமான நல்ல நேரம் இதுதான் என்பதே என் கருத்து."– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

### சதிராட்ட அரசியல்

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புரிந்திருக்கும் அளவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புரிந்து கொள்ளாமல் இருப்பதே எனக்கு வருத்தத்தைத் தருகிறது. இவ்வளவு நடந்தேறியும் அரசியல் சதிராட்டத்தில் குளிர்காயவே அரசியல்வாதிகள் எத்தனிக்கின்றார்கள்.

புதிய அரசிடம் கேட்கின்றேன், "இன்றைய நிலையை, இதுவரை தமிழ் மக்கள் அனுபவித்த நிலையை, இன்னல்களை, இடர்களைச் சிங்கள மக்களிடம் எடுத்துக் கூறி நாம் இந் நாட்டில் புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்க எண்ணியுள்ளோம். நாம் வட – கிழக்கில் இராணுவ முகாம்களை ஒரு சில கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மட்டும் நிலை நிறுத்தவுள்ளோம். மற்றைய இடங்கள் எல்லாவற்றிலும் இருந்து மீளப் பெற்று மேலதிகமாயுள்ள இராணுவத்தினரை குடியியல் வாழ்க்கைக்குத் திரும்ப, நடவடிக்கை எடுக்கப் போகின்றோம். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சேர்ந்து சகோதரத்துவத்துடன் எமக்கு வாக்களிக்க வேண்டும்" என்ற ஒரு புதிய கலாசாரத்தை ஏன் உருவாக்க முன்வருகின்றீர்கள் இல்லை? வடக்கையும் – தெற்கையும் ஒன்று சேர விட வேண்டும். அவர்களின் மனங்களை இணைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். ஜனநாயகவாதி என்று பெயர் பெற்ற நீங்கள் ஏன் பத்தாம் பசலிப் பழைய அரசியல் தந்திரோபாயங்களுள் அமிழ்ந்து இருக்கின்றீர்கள் ? என்று இதைத் தான் பிரதம மந்திரியிடம் நான் கேட்கின்றேன். ஏமாற்றுதலை அரசியல் கலாசாரமாக வளர்க்காமல் உண்மையையும் உரிய உள்ளன்பையும் உலகத்திற்கு எடுத்துக் காட்டும் ஒரு உயர்ந்த கலாசாரமாக அரசியலை நாங்கள் மாற்றி அமைக்க முடியாதா? இதனால்தான் அவசரப்பட்டு, அல்லல்பட்டு, அசதியான உடல் நிலையிலும் இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளேன். இந்தப் பிரேரணை உண்மையை உலகிற்கு உணர்த்தும் பிரேரணை. உள்நாட்டு மக்களின் உன்மத்தங்களால் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை உலகத்துக்கு எடுத்துரைக்கும் பிரேரணை. "– என்று தெரிவித்தார் முதலமைச்சர்.

### எதிர்காலம் என்ன?

"வெள்ளையன் விட்டுச் சென்ற போது அவன் தந்த யாப்பில் 29 ஆவது சரத்தைத் தந்து சென்றான். அதனை அப்புறப்படுத்தினார்கள். 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பால் தமிழ் மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கினார்கள் சிங்கள அரசியல் வாதிகள். இதனை சிங்கள மக்களுக்கு எடுத்துரைக்கும் ஆவணமாகவே இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளேன்.

இன்றைய சூழ்நிலையில் இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப்படாவிடில், ஜெனிவாத் தீர்மானம் உரிய காலத்தில் உண்மையை உரைக்காவிடில் எமது தமிழ் மக்களின் பாடு எவ்வாறு அமையப் போகின்றது என்பதைக் கட்டியம் கூறும் கருத்து மிகுந்த ஆவணமாகவே இந்தப் பிரேரணையை இந்த மதிப்பு சால் சபை முன்னே பிரேரிக்கின்றேன்."– என்று அவர் குறிப்பிட்டார்.

### பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சி

"நடந்தது பிழையென்ற மனப்பக்குவத்தை எமது சகோதர சிங்கள அரசியல் வாதிகளின் மனதில் விதைக்கவே இதைக் கொண்டுவந்துள்ளேன். தொடர்ந்து வந்த தமிழர் அழிப்புச் செயல்கள் இனியும் தொடர வேண்டுமா என்ற கேள்வியை உலக அரங்கில் கேட்டுவைக்கத் தயாரித்த தமிழ் மக்களின் ஆவணம் இந்த ஆங்கில மொழியிலுள்ள ஆவணம்.

தொடர்ந்து வந்துள்ள சிங்கள அரசியல் வாதிகளின் பேராதிக்கச் செயல்களால் துயருற்ற தமிழ் மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கும் ஆவணம் இது. உலக மக்களின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இலங்கையின் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகள் உடனேயே தீர்க்கப்பட வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தும் நல்லாவணம்.

இதனை தம்மைக் குறை கூறும் ஆவணமாக அரசு எடுக்காமல், அரசியல் இலாபம் பெறலாம் என்று எதிர்க்கட்சியினர் எண்ணாமல், உண்மையை உணர்ந்து உகந்ததைச் செய்ய இந்த உண்மையாவணம் உதவி புரிய வேண்டும், என்று கூறி பிரேரணையை முன்மொழிகின்றேன்"– என்று அவர் தனது நீண்ட உரையில் குறிப்பிட்டார். (ற-5)

## விசாரணையை

"நிஷா பிஸ்வாலுடன், அண்மையில் நான் பேசிய போது அமெரிக்காவுக்கு சகாயமான அரசு என்ற முறையில் இலங்கை அரசுக்கு அனுசரணையான விதத்தில் நடந்து கொள்ள அமெரிக்கா விரும்புகின்றது என்பதைப் புரிந்து கொண்டேன். ஜெனிவா அறிக்கையை காலம் தாழ்த்தி வெளியிடப்பட்டால் சிங்கள மக்களிடையே கொந்தளிப்பைத் தவிர்த்து இதே அரசு மீண்டும் பதவிக்கு வரச் செய்யலாம் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. அப்பொழுது சம்பந்தன், சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளடங்கலாக ஜெனிவாத் தீர்மானம் உரிய காலத்தில் வெளிவருவதே உகந்தது என்ற கருத்தை முன்வைத்தார்கள்."– என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

"எது உரியகாலம்? என்று என்னிடம் கேட்டார் நிஷா அம்மையார். முன்னர் தீர்மானிக்கப்பட்ட மார்ச் மாதத் தினமே உரிய காலம் என்றேன். அதை அவர் ஏற்கவில்லை. அப்போது நான் கூறினேன், தாமதம் சிங்கள வாக்குகளைப் பெற உதவும் என்று நினைக்கின்றீர்கள். ஆனால் தாமதம் தமிழ் வாக்குகளைப் புறக்கணிக்கும் தன்மையது என்பதை மறக்க வேண்டாம் என்றேன். அந்தக் கருத்துப் பரிமாற்றம் பற்றி மேலும் கூற நான்

# வட, கிழக்கில் அதிகளவில் முறைப்பாடுகள்

## அதிக விலையில் பொருள்கள் விற்பனை

யாழ்ப்பாணம், பெப்.11

அதிக விலையில் பொருள்கள் விற்கப்பட்டமை குறித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதுதொடர்பில் நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு மண்ணெண்ணெய் விற்கப்படுகின்றமை தொடர்பிலேயே அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியிலுள்ள உணவகங்களில் தேநீர், அப்பம் என்பன அதிக விலைக்கு விற்கப்படுவது தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை வரவு -செலவுத் திட்ட நிவாரணங்களை நுகர்வோருக்கு வழங்காத வர்த்தகர்களைக் கண்டறியும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாடு முழுவதும் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஏ.எம்.டக்ளஸ் குறிப் பிட்டுள்ளார்.

(வ-4)

## மேலைத்தேய வாத்தியங்களின் மோகத்தைக் கைவிட வேண்டும்

### வட மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



வவுனியா, பெப்.11

மேலைத்தேய வாத்திய மோகத்திலிருந்து விடுபட்டு தமிழரின் பாரம்பரிய வாத்தியங்களை இசைத்து பொது நிகழ்வுகளைச் சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவகலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம்.

அமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு இன்னிய (பாரம்பரிய இசைக் கருவிகள்) உபகரணங்களை அண்மையில் வழங்கினார். இதன்போது பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"எம்மில் பலர் தற்போது எமது பாரம்பரிய கலையை மறந்து ஆங்கிலேய கலாசாரத்தில் மோகம் கொண்டுள்ளோம். இதனால்தான் பாண்ட் வாத்தியங்களில் கவனத்தை செலுத் தியுள்ளோம். எமது மொழி, கலாசாரம் மிகத் தொன்மை வாய்ந்தன. இனிவரும் காலங்களில் இவ்வாறான இன்னிய வாத்தியங்களை இசைத்துப் பொது நிகழ்வுகளை நடத்த வேண்டும்" என்றார்.

தமிழரின் பாரம்பரிய கலையைப் பிரதிபலிக்கும் உடுக்கை, தவில், நாதஸ்வரம், பறை, புல்லாங்குழல், கொம்பு போன்ற உபகரணங்கள் அமைச்சரால் பாடசாலை அதிபரிடம் அண்மையில் வழங்கப்பட்டன.

(வ)




## சாவகச்சேரி நகரசபைக்கு புதிய கப் ரக வாகனம்

தென்மராட்சி, பெப். 11

சாவகச்சேரி நகரசபைக்கு புதிய கப்ரக வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சால் குறித்த வாகனம் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் வைத்து கையளிக்கப்பட்டது.

சீனா அரசால் வழங்கப்பட்ட வாகனங்கள் அந்த அமைச்சால் வட மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டபோதே நகர சபைக்கும் இந்த கப் ரக வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நகரசபைத் தலைவர் மற்றும் உத்தியோகத்தர் பயன்பாட்டுக்கு இந்த வகையான வாகனம் வழங்கப் படாததும் 1999 ஆம் ஆண்டு நகரசபை நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஹைஏஸ் வாகனம் மற்றும் முச்சக்கரவண்டி ஆகியவையே பயன்பாட்டில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(வ-9)

## தென்மராட்சி சந்தைகளில் மரக்கறி விலை வீழ்ச்சி

தென்மராட்சி, பெப். 11

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளுக்கு உள்ளூர் உற்பத்தி மரக்கறிகளின் வருகை அதிகரித்துள்ளதை அடுத்து மரக்கறிகளின் விலைகள் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளன.

இதேவேளை தேங்காயின் விலைகள் என்றுமில்லாத அளவுக்கு, தேங்காய் ஒன்று 75 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. தைப் பொங்கலின் போது கிலோ 300 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்ட மரக்கறிகள் நேற்று முன்தினம் 100 ரூபாவுக்கு கீழ் விற்பனைசெய்யப்பட்டன. தைப்பொங்கலின்போது 15 ரூபா தொடக்கம் 30 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தேங்காய் நேற்று முன்தினம் 50 ரூபா தொடக்கம் 75 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களிலிருந்து வரும் வியாபாரிகள் தென்னந் தோட்டங்களிலும் குடியிருப்புப் பகுதியிலும் அளவு வேறுபாடின்றி ஒரே விலையில் கொள்வனவு செய்வதால் சந்தைகளுக்குக் கொண்டு வரப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதும் உள்ளூர் தேங்காய்களின் விலைஅதிகரிப்புக்குகாரணம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

(வ-9)

## 200 பாடசாலை அதிபர்கள் லஞ்ச ஊழல் வலைக்குள்

கொழும்பு, பெப்.11

பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு இவ்வருடம் மாணவர்களை சேர்த்துக்கொள்ள பெற்றோர்களிடமிருந்து லஞ்சமாக லட்சக் கணக்கில் நிதி கோரி நிற்கும் 200 பேர் வரையிலான பாடசாலை அதிபர்கள் தொடர்பாக ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக லஞ்ச, ஊழல் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த முறைப்பாடுகள் தொடர்பாக தனியான விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டுள்ள பாடசாலை அதிபர்களைக் கைது செய்வது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக ஆணைக் குழுவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது இவ்விதம் லஞ்சம் கோருவதாக முறைப்பாடு செய்யப்படும் பாடசாலை அதிபர்கள் தொடர்பான பல விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதிபர்கள் லஞ்சம் கேட்பதாக அநாமதேய முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள பாடசாலை அதிபர்களிடையே நாட்டின் பிரபல பாடசாலைகளின் அதிபர்களும் அடங்கி இருப்பதாக ஆணைக் குழுவின் அந்த உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும், மாணவர் ஒருவரை ஆரம்ப வகுப்பில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக முதலில் 50 ஆயிரத்தைக் கோரி, பின்னர் 35 ஆயிரத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டுள்ளதாகக் கூறப்படும் கல்கிஸை லலித் அத்துலத்முதலி மகாவித்தி யாலய அதிபர் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டி ருந்தார்.

(வ-22)

## மாயமான கொடிகாமம் கூ.சங்க பாரவூர்தி மீட்பு

தென்மராட்சி, பெப் .11

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் பரந்தனில் இயங்கிய வட மாகாண பார ஊர்தி உரிமையாளர் சங்கங்களின் சமாசத்தில் ஒப்படைக்கப்பட்ட கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான கொள்கலனுடன் கூடிய பார ஊர்தி கடந்த சுதந்திர தினத்தன்று களுத்துறை நாகொட பகுதியில் உள்ள தனியார் வாகன விற்பனை நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டு களுத்துறை பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

2006.03.11 ஆம் திகதி கொழும்பிலிருந்து சங்கத்துக்கு கொள் கலன் பொருள்கள் ஏற்றிவந்த வாகனம் போர் காரணமாக புளியங்குளத்துக்கு அப்பால் வர அனுமதிக்கப்படவில்லை. இதனால் ஒருமாதகாலமாக புளியங்குளத்தில் தரித்து நிறுத்தப்பட்டிருந்த பின்னர் சங்க நிர்வாகத்தின் பணிப்பின்பேரில் பரந்தனில் இயங்கிய வட மாகாண பார ஊர்தி உரிமையாளர் சங்கங்களின் சமாசத்தில் ஒப்படைத்துவிட்டு சாரதியும் உதவியாளரும் திரும்பியிருந்தனர். பின்னர் அந்தப் பார ஊர்தி சமாசத்தால் பயன்படுத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டு இந்தப் பார ஊர்தி வவுனியாவுக்குச் சென்றபோது மீண்டும் ஏ-9 வீதி மூடப்பட்டதால் அதனைக் கொண்டு சென்றவர்களால் வவுனியா குருமன் காட்டில் இயங்கும் வட பிராந்திய பார ஊர்திகள் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 2010 ஆம் ஆண்டு இந்தப் பார ஊர்தியுடன் சுமார் ஒன்பது பார ஊர்திகள் படையினரால் கொண்டு செல்லப்பட்டதாக சங்கத்துக்கு அறிவிக்கப் பட்டதை அடுத்து சங்க நிர்வாகத்தினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பயன் கிடைக்கவில்லை.


இந்தநிலையில் கடந்த வாரம் தென் பகுதியைச்சேர்ந்த ஒருவர் பார ஊர்தி கொள்வனவு செய்ய களுத்துறை நாகொட பகுதியில் உள்ள வாகன விற்பனை நிலையத்துக்குச் சென்றுள்ளார். அந்தப் பார ஊர்தி அவருக்குப் பிடித்துக் கொண்டதால் விலை விவரங்களைக் கேட்டபோது உரிய ஆவணங்களும் காண்பிக்கப்பட்டன. அவர் வாகனம் தொடர்பான உண்மைத் தன்மையை அறிய அங்கிருந்து கொடிகாமத்துக்கு வந்து சங்க அலுவலகத்தில் விசாரித்துள்ளார்.

அதனையடுத்து களுத்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது. உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் குறித்த வாகன விற்பனை நிலையத்துக்குச் சென்று வாகனத்தைக் கைப்பற்றியதுடன் விற்பனை நிலைய உரிமையாளரையும் கைது செய்தனர். பார ஊர்தியை களுத்துறை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

(வ-9)

# பற்றீசியன் வெற்றி வாகை

யாழ்ப்பாணம், பெப். 11
யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந் தாட்டத்திடலில் இடம்பெற்றுவருகின்றது.



இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் முதல் பாதி ஆட்டத்தின்போது இரண்டு அணியினரும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். முதல் பாதி ஆட்டம் இடைநிறத்தப்பட்டபோது பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 16 புள்ளிகளையும், சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணி 13 புள்ளிகளைப் பெற்றன.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் போதும் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 25 புள்ளிகளையும், சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணி 18 புள்ளிகளையும் பெற்றிருத்தனர். ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 41 புள்ளிகளையும், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 31 புள்ளிகளையும் பெற்றிருந்தன. மூன்றாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியும் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தன. மூன்றாம் பாதி ஆட்டம் நிறைவில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 22 புள்ளிகளையும், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 19 புள்ளிகளையும் பெற்றன. நான்காம் பாதி ஆட்டத்தின் தமது ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்த சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் நான்காம் பாதி ஆட்ட முடிவில் 16 புள்ளிகளையும், பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 15 புள்ளிகளையும் பெற்றனர். ஆட்ட முடிவில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 78:66 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. (த–23)

# யாழ்.கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் ஆட்டங்களில் அசத்திய அணிகள்

யாழ்ப்பாணம், பெப் 11.
யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்று வருகின்றன.

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள்:–

காலை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் மல்லாவி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி மோதிக் கொண்டது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 52:43 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மாலை இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 38:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி 48:37 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(த–23–ரி)

# மாகாண மட்டப் போட்டிகள் ஏப்ரல் 4ஆம் திகதி ஆரம்பம்

கரணவாய், பெப். 11
வட மாகாண கல்வித் திணைக் களத்தால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டப் போட்டிகள் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி முதல் ஆரம்பமாகி இடம் பெறவுள்ளன.

நான்கு கட்டங்களாக நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் கட்டப் போட்டிகள் முல்லைத் தீவிலும் மூன்றாம் கட்டப் போட்டிகள் வவுனியாவிலும் நான்காம் கட்டப் போட்டிகள் யாழ்ப்பாணத்திலும் ஐந்தாம் கட்டப் போட்டிகள் கிளிநொச்சியிலும் இடம்பெறவுள்ளன.

முல்லைத்தீவில் ஏப்ரல் நான்காம் திகதி அரை மரதன் ஓட்டமும், மே மாதம் 20ஆம் 21ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் ஆண், பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டிகளும், மே மாதம் 24ஆம், 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளும்– மே மாதம் 20ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் ஆண், பெண்களுக்கான கபடிச் சுற்றுப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

மே மாதம் 31ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பமாகும் 3ஆம் கட்டப் போட்டிகள் ஜூன் 1ஆம் திகதிகளில் வவுனியா சி.சி.ரி.எம்.எஸ். வித்தியால யத்தில் ஆண், பெண்களுக்கான கராத்தேயும், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும், ஓமந்தை மத்திய கல்லூரியில் பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் –

4ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் ஓமந்தை மத்திய கல்லூரியில் பெண்களுக்கான வலைப் பந்தாட்டமும், 6ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் வவுனியா சிறுவர் பூங்கா மைதானம், முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா நகர சபை மைதானங்களில் ஆண்களுக்கான உதைபந்தாட்டமும், புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் பெண்களுக்கான உதைபந்தாட்டமும் இடம்பெறவுள்ளன.

ஜூன் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ள 4ஆம்கட்டப் போட்டிகளில்10ஆம் திகதி ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரியில் உடற்பயிற்சிப் போட்டிகளும், அதே தினம் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் பெண்களுக்கான [illegible] சுற்றுப் போட்டிகளும்– 11ஆம் 12ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் ஆண், பெண்களுக்கான மேசைப் பந்தாட்டமும், 12ஆம் 13ஆம திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆண், பெண்களுக்கான ஹொக்கி[illegible]றுப் போட்டிகளும் –

13ஆம் 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் ஆண், பெண்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டிகளும், 15ஆம் 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் ஆண், பெண்களுக்கான கரம் சுற்றுப் போட்டிகளும் –

17ஆம் 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரிகளில் ஆண், பெண்களுக்கான பட்மின்ரன் சுற்றுப் போட்டிகளும் –

19ஆம் 20ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் ஆண், பெண்களுக்கான பளு தூக்கல் போட்டிகளும், 20ஆம் 21ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி உயர்தரப் பாடசாலை [illegible]றில்கூடைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டிகளும் –

22ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் ஆண், பெண்களுக்கான காலை உடற்பயிற்சிப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

ஜூலை 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் தடகளப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன. (த–108)

# இமையாணனை வீழ்த்தி சம்பியனானது கலை ஒளி

கரணவாய், பெப். 11
இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகம் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை 2 இலக்குகளால் வீழ்த்தி கழுகுகளின் 5 பந்துப்பரிமாற்றம் கிரிகெட் சுற்றுப் போட்டியின் இந்த வருடத்துக் கிண்ணத்தைக் கைப் பற்றியது.

தெற்கொழு கழுகள் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 6 பேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றக் கிரிகெட் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழாவும் இறுதிப் போட்டிகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெற்றன. இந்த இறுதியாட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இமையாணன் இளைஞர் அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக ரஜீவன் 15 ஓட்டங்களையும், டெஸ்மன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தீபன் 2 இலக்குகளையும் மோகன், சுஜீவன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 43 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம் 4.5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது. அந்த அணி சார்பாக வாமன் 19 ஓட்டங்களையும் மோகன்ராஜ் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக கலைஒளி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மோகன்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். வெற்றி பெற்ற வீரருக்கான வெற்றி கிண்ணங்களையும் பதக்கங்களையும் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வட மாகாண சபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (த–108)

# கிண்ணத்தை தனதாக்கியது மலையாள்புரம் பாரதி வி.க.

யாழ்ப்பாணம், பெப். 11
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதியாட்டத்தில் மலையாள்புரம் பாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மலையாள்புரம் பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விவேகனந்தாநகர் கிருஷ்ண பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. 5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் மலையாள்புரம் பாரதி விளையாட்டுக் கழக அணி 25:18, 25:20, 16:25, 25:21 என்ற செற் கணக்கில் இறுதி செற்றுக்கு வேலைவைக்காமலேயே வெற்றி பெற்றுக் கிண்ணத்தைச் சொந்தமாக்கியது. (த–23–ரி)

# மெய்வன்மைப் போட்டி

கரணவாய், பெப்.11
கரவெட்டி ஸ்ரீநாரத வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன. வித்தியாலய அதிபர் கே.கிரிதரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த–108)

# கூடைப்பந்தாட்ட மோதலில் இன்று

யாழ்ப்பாணம், பெப் 11.
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்று தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பட்டர்பிளை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த–23–ரி)

# உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், பெப் 11.
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் எதிர் வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. குறித்த தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் போட்டிக் குழுத் தலைவர், செயலாளர் ஆகியோரிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த–23–ரி)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நிலத்தடி நீரில் ஒயில் பரிசோதனை ஆரம்பம்

## பணிகளை தொடங்கியது நிபுணர் குழு

யாழ்ப்பாணம், பெப். 11

நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் விவகாரம் வடக்கு மாகாண சபையினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு தண்ணீர் எடுத்துப் பரிசோதனை செய்யும் திட்டத்தை கடந்த இரண்டு நாள்களாக முன்னெடுத்து வருவதாக மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அங்கு சென்ற குழுவினர் நிலைமையை ஆராய்ந்து நீர் மாதிரிகளை எடுத்திருந்தனர். நேற்றும் தெல்லிப்பழைப் பகுதியில் 35 கிணறுகளில் மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்திருப்பது தொடர்பாகப் பூரணமான ஆய்வு ஒன்றை நடத்துவதற்கு வடக்கு மாகாண முதல்வரின் பணிப்பின் பேரில் நிபுணர் குழு ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்டிருந்தது. யாழ். பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், மற்றும் பேராதனை பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த துறைசார் வல்லுநர்கள் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

நிலத்தடி நீரில் கலந்துள்ள எண்ணெய் மாசுக்கான சரியான மூலத்தை அடையாளம் காண்பது, நீரில் கலந்துள்ள மாசுக்களின் வகைகளையும் அளவுகளையும் கண்டறிவது, எண்ணெய் மேலும் பரவுவதைத் தடை செய்வது, நீரைத் தூய்மைப்படுத்துவதற்கான பொருத்தமான வழிமுறைகளைப் பரிந்துரை செய்வது போன்றவற்றை ஆய்வின் இலக்குகளாகக் கொண்ட நிபுணர் குழு, ஆய்வின் முதற் கட்டமாகத் திட்ட வரைவுகளைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. அது முற்றுப்பெற்ற நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீர்மாதிரிகளைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஆய்வில் துல்லியமான அளவீடுகளைப் பெறுவதற்கும் ஆய்வின் முடிவுகளைச் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு அமைவாக நிபுணர்குழு, கொழும்பில் அமைந்துள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் உதவிகளை நாடியிருந்தது. இதையடுத்து ஆய்வு உபகரணங்கள் சகிதம் வருகைதந்திருந்த கைத்தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வாளர்களின் உதவியோடு இம் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த நீர் மாதிரியைச் சேகரிப்பதில் நிபுணர் குழுவோடு தரவுகளைப் பதிவு செய்யும் உதவியாளர்களாக யாழ். பல்கலைக்கழகப் புவியியல்துறை மாணவர்களும் ஈடுபட்டிருந்தனர். இந்த நீர் மாதிரிகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழு, யாழ். பல்கலைக்கழகத்திலும், தொண்டமானாற்றில் அமைந்துள்ள வடமாகாண நீரியல் ஆய்வு மையத்திலும் இது தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (த-4)

# சம்பந்தனுக்கு எதிராக நேற்று சுவரொட்டிகள்

## யாழ். பல்கலையில்

யாழ்ப்பாணம், பெப் 11

இலங்கையின் சுதந்திர தின விழாவில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு எதிராக யாழ்.பல்கலைக்கழகத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகம் என்று அடையாளப்படுத்தியவர்கள் அதனை ஒட்டியுள்ளனர்.

கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு எதிராக யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

போலித் தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளே! எனத் தலைப்பிட்ட அதில்,

ஜனநாயக சோசலிக் குடியரசு எனப்படும் இலங்கையின் தேசிய சின்னங்கள் அனைத்திலும் சிங்கள மேலாதிக்கத்தைப் பிரதிபலிக்கும் அடையாளங்களே உள்ளன. சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இலங்கையின் அரசியல் சாசனத்தைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்த 43 வருடங்களாக இலங்கையின் அனைத்துத் தேசிய தினங்களையும் தமிழர்கள் புறக்கணித்தே வந்தனர். அரசு என்பது மாறக் கூடியது. ஆனால் சிங்கள மேலாதிக்கவாதிகளின் அடக்கியாளும் ஆக்கிரமிப்புப் போக்கும் தமிழ் மக்களின் கொள்கைப் பற்றும் மாறாதவை என்பதை சம்பந்தனும் பின்கதவால் தமிழ் அரசியலுக்குள் நுழைந்த சுமந்திரனும் அறியாத ஒன்றல்ல.

இருந்தும் தாம் சார்ந்த மக்களினதும் கட்சியினதும் விருப்புக்கு மாறாக இத்தகைய காரியத்தை அவர்கள் எதற்காக நிகழ்த்தினர் என்பதே தமிழரை வேதனையடைய வைத்துள்ளது. இவர்களின் செயல் மக்களின் கொள்கைகளையும், கட்சிக் கொள்கைகளையும் குழி தோண்டிப் புதைக்கும் செயலாகும். அண்மைக் காலமாக தமிழ் அரசியலை ஏகபோகமாக நடத்தி வரும் சம்பந்தரையும் அவருக்குப் பக்க வாத்தியமாக இருந்து தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படாமல் பின் கதவால் அரசியலுக்குள் நுழைந்த சுமந்திரனையும் தமிழ் மக்கள் அரசியலில் இருந்து தூக்கி எறியும் காலம் வெகு தொலைவில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# முல்லைத்தீவு செயலகத்தின் புதிய கட்டடம் நேற்று திறப்பு



முல்லைத்தீவு, பெப். 11

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 220 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கட்டடப் பணிகள் கடந்த 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவடைந்தன. முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், விநோநோதராகலிங்கம், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர், முல்லைத்தீவு நகரை அபிவிருத்தி செய்யும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகக் கட்டடப் பணிகள் 220 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 250 மில்லியன் ரூபா செலவில் மாவட்ட செயலக மிகுதி வேலைகள் இடம்பெறவுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் குறிப்பிட்டார். (த)

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதாரத் தொண்டர் போராட்டம்

## 232 பேரும் அவலப்படுவதாகக் கவலை

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்.மாவட்டத்தில் 10 வருடங்களுக்கும் மேலாகச் சமூக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றி வரும் 232 பேர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ். பண்ணையில் உள்ள சுகாதாரக் கிராமம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி அவர்கள் கடந்த வருடமும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

1998 ஆம் ஆண்டிலிருந்து யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்களாக இருந்த எம்மை 2012 ஆம் ஆண்டிலிருந்து சமூக சுகாதாரப் பணியாளர்கள் என்னும் வகைக்குள் உள்ளடக்கியுள்ளனர். இன்று வரை சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றி வருகின்றோம்.

180 நாள் வேலை செய்திருந்தால் நியமனம் என்பது ஜனாதிபதி மைத்திரி பாலவின் 100 நாள் வேலைத் திட்டத்தில் உள்ளது. எனவே எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். வடமாகாண சுகாதார அமைச்சரை பலமுறை சந்திக்க முற்பட்டும் அது சாத்தியப்படவில்லை. சுகாதார அமைச்சின் செயலாளரைச் சந்தித்து, மத்திய அரசில் வேலை செய்யும் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியும் என்றால் 10 வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றும் தமக்கு ஏன் நிரந்தர நிய மனம் வழங்கவில்லை? என்று கேட்டோம். எமது விபரங்க்ள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த வருடமும் நாம் போராட்டம் நடத்தியபோது எமது போராட்டம் அரசியல் ரீதியானது என்று கூறி அதிகாரிகள் நியமனம் வழங்கவில்லை. ஆனால் நாம் எந்த அரசியல் பின்புலத்தையும் கொண்டிருக்கவில்லை.

எமக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வரை போராட்டம் நடத்துவோம் - என்று கூறினர். (த-4)

### கத்தரிக்காய் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 11

யா ?. குடாநாட்டில் கத்தரிக்காய் [illegible]லை திடீரெனச் சரிந்துள்ளது.


[illegible]ந்த வாரத்தில் கிலோ 120 ரூபாவாக விற்கப்பட்ட கத்தரிக்காய் தற்போது கிலோ 30 ரூபாவாக வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

வன்னி மற்றும் தென்பகுதியில் இருந்து பெருமளவிலான கத்தரிக்காய் குடாநாட்டுக்கு எடுத்துவரப்படுவதாலேயே அதன் விலை திடீரெனச் சரிந்துள்ளது.

கடந்த வாரத்துக்கு முன்னர் கத்தரிக்காயின் விலை அதிகரிப்பால் நுகர்வோர் பாதிக்கப்பட்டனர். (த-17)

# மடுக்கரை மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு

## வீதியைப் புனரமைக்குமாறு கோரி



மன்னார், பெப். 11

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று பாடசாலைக்குச் செல்லாமல் பாடசாலைச் சீருடையுடன் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற் கொண்டனர்.

வீதியைப் புனரமைக்குமாறு கோரியே அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

மடுக்கரைக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர்.

நானாட்டானில் இருந்து மடுக்கரைக் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி சேதமடைந்துள்ளதால் அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகள் பல மாதமாக தடைப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சேவைகள் இல்லாமையினால் மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் குறித்த வீதி புனரமைக்கப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த வீதியை புனரமைத்துப் போக்குவரத்து வசதிகளை உடன் ஏற்படுத்தித்தருமாறு கோரி மடுக்கரை கிராமத்தில் இருந்து செல்லும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் நேற்றுக் காலை 10 மணியளவில் நானாட்டான் [illegible] பகுதியில் ஒன்று கூடிய மாண[illegible]களும் அவர்களது பெற்றோ[illegible] நானாட்டான் பிரதேச செய[illegible] நோக்கி ஊர்வலமாகச் சென்ற[illegible] நானாட்டான் பிரதேச செய[illegible] அங்கு இல்லாததால் தமது [illegible]சினைகளைக் கூறி அதி[illegible]களிடம் மனுக் கையளித்தனர். [illegible]-56)

# கழிவு ஒயில் மூலம் சுயலாபம் தேட முயற்சி

## மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 11

ஜனநாயக வாய்ப்பைப் பயன்படுத்தி சுன்னாகம் குடிதண்ணீர் பிரச்சினையின் பரிமாணத்தை மிகப் பன்மடங்காக உருப்பெருப்பித்துச் சுய இலாபம் பெறப் பல்வேறு சக்திகளும் களம் இறங்கியுள்ளன. இவற்றில் சில குடிதண்ணீர் வணிக நிறுவனங்களும் அடங்குகின்றன. இரணைமடுத் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்று எப்பாடுபட்டாவது யாழ்ப்பாண மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும் என்று படாத பாடுபட்டவர்களும், வடமாகாண சபைக்கு எதிராக மக்களைத் திசை திருப்பவேண்டும் என்று காத்துக் கிடப்பவர்களும் அடங்குகின்றனர். இவர்களது பரப்புரையால் மக்கள் பதற்ற நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டுக் கிணற்றில் மிதக்கும் தூசிப் படலத்தையும் கூட எண்ணெய் என்று நம்பிக் குடிதண்ணீருக்கு அலையும் பரிதாப சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய சுற்றுச் சூழல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார். அத்துடன் அதனை வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் பட்டியல்படுத்தினார்.

சுன்னாகம் நிலத்தடித் தண்ணீரில் கழிவு எண்ணெய் கலந்து குடிதண்ணீர் மாசடைந்தமை குறித்த விசேட விளக்க அறிக்கையை நேற்றையை அமர்வில் முன்வைத்தார் அமைச்சர். அவர் அங்கு தெரிவித்ததாவது:–

சுன்னாகம் அனல் மின்நிலையத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள கிணறுகளில், இலங்கை தரநிர்ணய நிறுவகத்தால் குடி தண்ணீரில் இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்ட எண்ணெய் மாசின் அளவைவிட அதிக அளவில் எண்ணெய் மாசாக உள்ளது என்று 2012 ஆம் ஆண்டே தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் நீர்ப்பகுப்பு ஆய்வுகளில் இருந்து அறிய முடிகிறது.

**மாசுக்கான காரணம்**

நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு கலந்திருப்பதற்கு சுன்னாகத்தில் உள்ள அனல்மின்நிலையமே காரணமாகக் கருதப்படுகிறது. 1958 ஆம் ஆண்டுமுதல் சுன்னாகத்தில் அனல் மின்நிலையம் இயங்கி வருகிறது. போர்க் காலத்தில் விமானக்குண்டு வீச்சால் சேதமடைந்த எரிபொருள் தாங்கியில் இருந்து ஆயிரத்து 500 கன மீற்றருக்கும் அதிகமான டீசல் வெளியேறியுள்ளது. ஒருபகுதி டீசல் எரிந்துபோக, பெரும்பகுதி அருகாமையில் உள்ள தாழ்வான குளத்தை நோக்கி வடிந்தோடியுள்ளது. இது ஊர் மக்களால் எண்ணெய்க் குளம் என அழைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் அனல்மின் நிலைய வளாகத்தில் 2009ஆம் ஆண்டுவரை அக்றிக்கோ என்னும் நிறுவனத்தால் டீசல் மின்பிறப்பாக்கி மூலம் மின் சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. போர்க் காலம் என்பதால் இந்தப் பகுதியினுள் வேறு யாரும் சென்று வரமுடியாத நிலையால் சுற்றாடல் அதிகாரிகளால் எவ்வித கண்காணிப்பும் மேற்கொள்ளப்படவில்லை என்றே கருதுகிறேன். நிலத்தடி நீரை மாசுறுத்தியதில் அக்றிக்கோ நிறுவனத்துக்கும் பங்கு இருப்பதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 12.11.2014 திகதியிட்ட அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அக்றிக்கோ நிறுவனத்தின் பின்னர் நொதேண் பவர் என்ற நிறுவனம் நீதிமன்றால் அண்மையில் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை டீசல் மின் பிறப்பாக்கிகளின் மூலம் மின் பிறப்பித்து வந்துள்ளது.

2013 ஆம் ஆண்டே இந்நிறுவனத்துக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி இலங்கை முதலீட்டுச் சபையால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒப்புதலுடன் வழங்கப்பட்டுள்ளது. அதுவரையில் இந்த நிறுவனமும் சுற்றாடல் தொடர்பான அக்கறையின்றியே இயங்கியிருக்கின்றது.

அக்றிக்கோ நிறுவனம் எண்ணெய்க் கழிவுகளை வெளியேற்றிய இடத்திலேயே இந்த நிறுவனமும் தொடர்ந்து வெளியேற்றி வந்திருக்கிறது. அத்தோடு இந்த நிறுவனத்தின் மின் பிறப்பாக்கி, புதியது அல்ல. வெளிநாட்டில் இருந்து பாவித்த நிலையிலேயே தருவிக்கப்பட்டுள்ளது.

**வடக்கு மாகாண சபையின் நடவடிக்கை**

நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு கலந்திருக்கும் இவ்விவகாரத்தை உரிய முறையில் எதிர் கொண்டு மக்களுக்குப் பாதுகாப்பான குடிதண்ணீரைக் கிடைக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு, இலங்கை மத்திய அரசுக்கு மாத்திரம் அல்லாமல் வடக்கு மாகாண சபையினராகிய எங்களுக்கும் உண்டு.

குடிதண்ணீர் விநியோகம் – பாதிக்கப்பட்ட வலி.தெற்கு, வலி.வடக்குப் பிரதேச சபைகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றன. இந்தப் பிரதேச சபைகளுடன் இணைந்து எனது அமைச்சுக்கு உட்பட்ட நீர் வழங்கல் பிரிவின் நீர்த்தாங்கி வாகனங்களின் மூலமும் நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் இடர் முகாமைத்துவப் பிரிவும் நீர்வழங்கல் வடிகால் சபையும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மருதங்கேணியில் அமையவுள்ள கடல்நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளுக்குக் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழு – விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் பெறப்படும் துல்லியமான முடிவுகளே சரியான தீர்வுக்கும், சட்ட நடவடிக்கைகளுக்கும் அவசியம். அதற்காக நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு தொடர்பாக ஆராய்வதற்காக நிபுணர்குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துறைசார் வல்லுநர்களைக் கொண்டுள்ள இந்த நிபுணர்குழு எண்ணெய் மாசின் மூலம், அது பரவும் திசை, குடிதண்ணீரில் உள்ள மாசுக்களின் வகைகள் மற்றும் அளவுகள், எண்ணெய் மாசு இப்போதும் பரவுமாயின் அதனைத் தடுப்பதற்கான பொறிமுறைகள், எண்ணெய் மாசை இல்லாமற் செய்வதற்கான வழிமுறைகள் போன்றவற்றைக் கண்டறியும் நோக்கில் ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

றேடார் உபகரணத்தைப் பயன்படுத்தி நிலத்தின்கீழ் உள்ள எண்ணெயின் இருப்பிடத்தைக் கண்டறிவதற்காக நேற்றைய (நேற்று முன்தினம்) வட மாகாண அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.



நீரில் எண்ணெய் கலந்துள்ளதா என்பதை கண்டறிவதற்கான ஆய்வுக்குத் தற்போது 5 மணித்தியாலம் செலவாகிறது. இதைக் கருத்திற் கொண்டு எண்ணெய் கலந்துள்ளதா இல்லையா என்பதை உடனடியாகவே தெரிந்து கொள்ளக்கூடிய 1.3 மில்லியன் ரூபா பெறுமதியான கருவி ஒன்று அமெரிக்காவில் இருந்து உடனடியாகத் தருவிப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. புலம் பெயர்ந்து வாழும் எமது தமிழ் உறவுகள் அன்பளிப்பாக இதனை வழங்க உள்ளனர்.

சுன்னாகம் அனல் மின்நிலையம் தவிர்ந்த வேறு காரணிகளும் எண்ணெய் மாசுக்குக் காரணமாக அமைந்துள்ளனவா என்பது தொடர்பிலும் நிபுணர்குழு கவனம் செலுத்தும். ஆய்வுகள் யாவும் விரைந்து மேற்கொள்ளப்பட்டு ஆய்வறிக்கை ஒரு மாதக்காலத்தினுள் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தூய குடிதண்ணீருக்கான செயலணி அமைப்பு**

மாகாணசபை தனித்து இயங்காமல் மத்திய அரசின் துறைகளும் இணைந்து செயற்பட்டாலே தீர்வை விரைந்து எட்டமுடியும் என்பதால் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மற்றும் விவசாய அமைச்சரின் இணைத் தலைமையின் கீழும் யாழ். மாவட்ட அரச அதிபரின் துணைத் தலைமையின் கீழும் தூய குடிதண்ணீருக்கான செயலணியொன்று உருவாக்கப் பட்டுள்ளது.

**வடக்கு மாகாண சபை எதிர்கொள்ளும் சவால்கள்**

நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு என்பது வடக்குக்கு மாத்திரம் அல்ல, இலங்கைக்கே இதுவரையில் முன்னுதாரணம் அற்ற ஒரு இடர் என்பதால் இதனை எதிர் கொள்வதில் சில தடங்கல்களும் தயக்கங்களும் நிலவுகின்றன். இதனால் பொருத்தமான நடவடிக்கைகளை அடையாளம் கண்டு செயற்படுத்துவதில் கால தாமதம் ஏற்படுகிறது.

குடிதண்ணீரில் எண்ணெய் மாசு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் விரைந்து நடவடிக்கைகளை எடுக்கக் கோரியும் கவனவீர்ப்பு நிகழ்ச்சிகளை தூய நோக்கோடு ஏற்பாடு செய்து வந்துள்ளனர். இது அவசியமானதும் கூட.

ஆனால், இந்த ஜனநாயக வாய்ப்பைப் பயன்படுத்திப் பிரச்சினையின் பரிமாணத்தை மிகப் பன்மடங்காக உருப்பெருப்பித்துச் சுய இலாபம் பெறப் பல்வேறு சக்திகளும் களம் இறங்கியுள்ளன. இது ஆய்வின் செல்திசையைக் குழப்புவதாக அமைவதோடு, உண்மையாக எண்ணெய் மாசினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எங்களால் போதிய கவனம் செலுத்த முடியாத நிலையை ஏற்படுத்துகிறது என்பதையும் வருத்தத்துடன் இங்கு பதிவு செய்து, எல்லாத் தடங்கல்களையும் தாண்டி இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு விரைவில் எட்டப்படும் என்று கூறுகின்றேன் – என்றார் அமைச்சர்.

(க–5)

# மக்களையும் எங்களையும் பிரிப்பதற்குச் சிலர் தந்திரம்

## முல்லைத்தீவு செயலக திறப்புக் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் சாடல்

யாழ்ப்பாணம், பெப். 11

அரசியல் ரீதியாக மக்களையும் எங்களையும் பிரித்து வைப்பதற்கான தந்திர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்ட செயலகத் திறப்பு விழா மற்றும் யாழ்ப்பாணத்தில் இரண்டு பிரதேச செயலாளர் அலுவலகத் திறப்பு விழாக்களுக்கு, எம்மைக் கேட்காமலேயே எமது பெயர்களை அழைப்பிதழை பிரசுரித்து மக்களை ஏமாற்றியுள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போது, மாகாணசபை விதிமுறைகளில் தளர்த்தி – சமர்ப்பிக்கவிருந்த 15 பிரேரணைகள் – கேள்விகளை அடுத்த அமர்வுக்கு ஒத்தி வைத்து இரண்டு முக்கியமான விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆரம்பத்தில் தெரிவித்தார். அதன் பின்னர், முல்லைத்தீவு மாவட்டத்தின் மிக முக்கிய பிரச்சினை தொடர்பில், து.ரவிகரன் அவசர கூற்றொன்றை அவையில் முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

'முல்லைத்தீவு மாவட்ட செயலக திறப்பு விழா 6 ஆம் திகதி நடத்தப்படுவதாக இருந்தது. அது திடீரென, வடக்கு மாகாணசபை அமர்வு இடம்பெறும் – இன்றைய தினத்துக்கு – மாற்றப்பட்டது. மாகாணசபை திகதி முன்னரே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இன்றைய தினம் திறப்பு விழா செய்யப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்ட ரவிகரன் இது திட்டமிட்ட நடவடிக்கை என்றும் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு நிகழ்வுகள் தொடர்பில் கடந்த 6 ஆம் திகதி தொலைநகல் கிடைத்தது. அதில் நான் கலந்து கொண்டு பேசுவதாக இருந்தது. ஆனால் அது தொடர்பில் என்னிடம் முன்னர் கேட்கவில்லை. மேலும் குறித்த இரு தினங்களில் என்னால் கலந்து கொள்ள முடியாது என்று மின்னஞ்சல் அனுப்பினேன்.

எங்களிடம் அனுமதி பெறாமல் பெயரைப் பாவித்துள்ளார்கள். மக்கள் எங்களைப் பற்றி வித்தியாசமாக நினைப்பார்கள். எமது செயலாளர் ஊடாக, ஏன் இவ்வாறு செய்தீர்கள் என்று முல்லைத்தீவு அரச அதிபரிடம் கேட்டபோது; கொழும்பிலிருந்து தரப்பட்ட பெயர்ப் பட்டியலையே அழைப்பிதழில் பிரசுரித்தோம். தனக்கு எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டார்.

அழைப்பிதழில் பெயரைப் போட்டுவிட்டு, மக்கள் அந்த நிகழ்வு வந்த பின்னர், பார்த்தீர்களாக வடக்கு மாகாண சபையினர் வரவில்லை என்று சொல்லி எங்களை பிரித்து வைக்கத் துடிக்கின்றனர் – என்றார்.

(த–5)

# கழிவு ஒயில் பதற்றத்தை நீக்க நடவடிக்கை வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர்கள் வலியுறுத்தல்

கழிவு ஒயில் குடிதண்ணீருடன் கலந்தமை தொடர்பான விடயத்தில், வலி.வடக்கு மற்றும் வலி.தெற்கு மக்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள பயம் – பதற்றத்தை நீக்க வடக்கு மாகாணசபை உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாகாண சபை உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இந்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் மீது சேறு பூச முயல்பவர்கள், துர்நோக்கத்தில் ஈடுபடுவர்களை எவ்வாறு சரிக்கட்டுவது என்று தெரியும் என்றும் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய கூட்டத்தில், சுன்னாகம் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

**த.சித்தார்த்தன்**

குடிதண்ணீருடன் கழிவு ஒயில் கலந்துள்ளமை தொடர்பில் மக்கள் மத்தியில் மிகப் பெரிய பயம் ஏற்பட்டுள்ளது. இது பல பகுதிகளுக்குப் பரவிச் செல்வதாகவும் மக்கள் சொல்கின்றனர். மக்கள் சொல்வதில் உண்மையில்லாமலும் இல்லை. பலருக்கு இதனை எங்கு கொண்டு சென்று பரிசோதிப்பது என்று தெரியாது. இதற்கான செலவை யார் பொறுப்பெடுப்பார்கள் என்று தெரியாது.

இந்த விடயத்தை அரசியல் மயப்படுத்தி மக்கள் மத்தியில் இனம்புரியாத பதற்றம் – பயத்தை உருவாக்குகின்றனர். மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பயத்தை போக்க வேண்டும். நிலத்தடி நீரை மாத்திரம் நம்பி வாழ்வதால் மக்கள் இந்தளவு தூரம் பயப்படுகின்றனர். முதலமைச்சர் இனப்படுகொலை தொடர்பில் சமர்ப்பித்த பிரேரணையில், இதுவும் ஓர் இன அழிப்பு என்று ஏன் சேர்க்கக் கூடாது என்று நான் கேள்வியெழுப்புகின்றேன் – என்றார்.

**பா. கஜதீபன்**

எதிலும் குறைகண்டு கொள்வது இலகுவானது. அதனை நிவர்த்தி செய்வதுதான் சவாலானது. குடிதண்ணீரில் தூசிப் படலம் இருக்கின்றதா?, எண்ணெய்ப் படலம் இருக்கின்றதா? என்றே மக்களுக்குத் தெரியவில்லை. தூசிப் படலத்தைப் பார்த்துக் கூட பயப்படுகின்றார்கள்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு போதிய தண்ணீர் தாங்கி வைக்க வேண்டும். மேலும் கடல்நீரை நன்னீராக்கும் செயன்முறையை விரைந்து செய்ய வேண்டும் – என்று குறிப்பிட்டார்.

**எம்.கே.சிவாஜிலிங்கம்**

இந்தப் பிரச்சினை 2006 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. 2008 ஆம் ஆண்டு வெளிச்சத்துக்கு வந்தது. ஆனாலும் இதில் அப்போது போதிய கவனம் எடுக்கப்படவில்லை. இதனால் பிரச்சினை இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

முந்திய காலத்தில், சந்திக்கு இராணுவம் வந்திட்டுதாம் என்று இந்தா வந்திடுவார்கள் என்று சொல்வார்கள். ஆனால் உண்மையில் இராணுவம் 5 கிலோமீற்றருக்கு அப்பால் தான் நிற்கும். இதே போன்றுதான் கழிவு ஒயில் கலப்பும். அங்கே வந்து விட்டது, இங்கே வந்து விட்டது, இந்தா வருகின்றது என்று சொல்லி மக்களைப் பதற்றப்படுத்துகின்றார்கள். இதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வடக்கு மாகாணசபை மீது சேறு பூசும் – துர்நடவடிக்கையில் யாராவது ஈடுபட்டால், அவர்களை எப்படிச் சரிக்கட்டுவது என்று தெரியும் – என்றார்.

(த–5)

புதன் பொய்கை

உதயன்

11 பெப்ரவரி 2015 புதன்கிழமை

கற்பனையில் இருந்துதான்
பிறருடைய நெஞ்சில் புகுந்து
இன்ப துன்ப நிகழ்ச்சிகளை
உண்மையாக உணர முடியும்.
கற்பனையால் அனுதாபமும்
பரிவும் வளர்ந்து,
சூழ்நிலையில் சுற்றிச்
சுத்தமான கவிதைகளை எழுத
முடியும்.

*–ஷெல்லி.*

# வாழ்வும் தாழ்வும் எமது கைகளில்

■ ராஜராஜன்

வாழ நினைத்தால் வாழ லாம்– வழியா இல்லை பூமியில்' – இது மறைந்த கவியரசர் கண்ணதாசனின் பாடல் வரிகள். இதைத் தான் 'படைத்தவன் கஞ்சி ஊத்தா மலா போவான்' எனப் பாமரர்கள் தமது மொழியில் கூறுவார்கள். இதிலிருந்து ஒரு உண்மை எமக்குப் புலப்படுகின்றது– இந் தப் பூமியில் அவதரித்த ஒவ்வொரு உயி ருக்கும் இங்கு வாழ்வதற்குரிய வசதிகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. அவற் றைத் தேடிக் கண்டுபிடிப்பதே அவற்றின் வேலை என்பதுதான் அது.

ஆனால் இன்றைய மனிதர்கள் வாழ்க்கை என்னும்போது பணத்தைத் தான் முன்னி லைப்படுத்து. பணம் இல்லாது விட்டால் வாழ்க்கை என்பதே இல்லை என்பது இவர் களது வாதமும் கூட. வாழ்க்கையின் சகல அம்சங்களையும் சுவைபட அனுபவிப்ப தற்குப் பணம் தேவை என்பது உண்மை தான். ஆனால் பணம்தான் வாழ்க்கை என் பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பலரது வாழ்க்கை நிம்மதியின்றிக் கழிவதற்கும், திசைமாறிச் செல்வதற்கும் இந்தப் பணம் தான் காரணமாக அமைந்து விடுகின்றது.

உனக்கு மேலே இருப்பவனை எட்டிப் பார்க் காதே– கீழே உள்ளவனைக் குனிந்து பார் எனப் பெரியவர்கள் கூறுவார்கள். ஆனால் எம்மில் பலர் மேலே எட்டிப் பார்ப்பதில் தான்தமது காலத்தைக்கடத்தி வருகின்றனர். கிழே குனிந்து பார்ப்பதில் இவர்களிடத்தில் ஏனோ ஒரு தயக்கம்.

அதுவொரு மிகவும் பின் தங்கிய கிராமம். ஒரு குறுகிய நிலப்பரப்பில் சிறு, சிறு வீடு களை அமைத்து அந்தக் கிராம மக்கள் வசித்து வருவதைக் காண முடிந்தது. கல்வி யில் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள அந்தக் கிராமத்தில், தற்போது தான் சின்னஞ்சிறுசுகள் கல்வி யில் ஆர்வம் காட்டுவதைக் காண முடிகின்றது. அந்தக் கிராமத்தில் வசிக்கும் மக் களுக்கு வயது வேறுபா டின்றி உழைப்பதற்கு மட் டுமே தெரிந்திருந்தது– காலையில்எழுந்ததும்வளர்ந் தவர்கள்அனைவரும்தொழில் தேடி ஒவ்வொரு திசை நோக்கிச் செல்கின்றனர்.


இதில் ஆண்,பெண் வேறுபாடு கிடையாது. மாலை வரை கடினமாக உழைக்கின்றனர். மாலையானதும் அன்று சம்பாதித்த பணத் துடன் வீடு திரும்பும் இவர்கள் சமையலுக் குத் தேவையான அனைத்துப் பொருள் களையும் கடையில் வாங்குகின்றனர். பின்னர் வீட்டு முற்றங்களில் அடுப்புக்கள் மூட்டப்பட்டு சமையல் வேலைகள் ஆரம்பமாகின்றன. இருளின் மத்தியில் அடுப்புக்கள் செந்நிற ஒளியை வீசிக் கொண்டிருக்கின்றன. சமையல் முடிந்ததும் அனைவரும் ஒன்று சேர்ந்து உணவருந் திய பின்னர் நித்திரைக்குச் செல்கின்றனர். நிம்மதியான தூக்கம் இவர்களின் கண் களைத் தழுவுகின்றது. மறுநாளும் இதே நேர அட்டவணையின் பிரகாரம் அவர் களது செயற்பாடுகள் தொடர்கின்றன.

இந்தக் கிராம மக்கள் அடிப்படை வசதி களை எதிர்பார்த்து நிற்கவில்லை, ஆடம்பர வாழ்வுக்காக ஏங்கவில்லை– ஆனால் கவலையில்லாத நிம்மதியான வாழ்வை அனுபவிக்கின்றனர்.

எமது தகுதிக்கேற்ப வாழ்க்கையை நாம் அமைத்துக் கொண்டால் வாழ்க்கை எமக் குச் சுமையாகத் தெரியாது– எமக்கான வாழ்க்கையை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும். எமக்கு உயர்ந்த நிலையில் உள்ளவர்களைப் பார்த்து அவர்களைப் போன்று வாழ்வதற்கு நாம் எண்ணு வோமானால் அதனால் ஏற்படக்கூடிய பாதக மான விளைவ்கள் எமது நிம்மதியையே குலைத்துவிடும்.

முக்கியமாக எதிலும் மனநிறைவு காணும் மனப்பக்குவத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். போதுமென்ற மனதை நாம் கொண்டிருப்போமானால் ஆசைகளிலி ருந்து எம்மால் விடுபட முடியும்.

புரட்சிக் கவிஞர் பாரதியார் தமது வாழ் நாள் முழுவதும் வறுமையில் வாடியவர். சில வேளைகளில் வீட்டில் உணவு கூடக் கிடைக்காது. ஒருநாள் காலை அவரது மனைவியார் பழைய சோற்றைக் கரைத்து அவருக்கு வழங்கினர். அதை வயிறாரக்



அருந்திய பாரதியார் அமிர்தத்தை உண்ட தைப் போன்றதொரு மனநிறைவை அடைந் தார். தாம் வழக்கமாகப் பயணம் செய்யும் ரிக்ஷா ஓட்டியைப் பார்த்து ஓட்டடா ரதத்தை எனக் கூறினார்.

அந்த வேளையில் தம்மையொரு மன் னனாகவும்,தாம் அமர்ந்திருப்பதை மன்னர் கள் பயணம் செய்யும் ரதமாகவும் அவர் கற்பனை செய்து கொண்டார்.

இந்த ஆத்ம திருப்தி எம்மிடமும் ஏற்படுமா யின் வாழ்க்கை எப்போதுமே எமக்கு இனிப்பானதாகவே தோன்றும். வாழ்வும் தாழ்வும் எமது கைகளில்தான்.

> “ எமது தகுதிக்கேற்ப வாழ்க்கையை நாம் அமைத்துக் கொண்டால் வாழ்க்கை எமக்குச் சுமையாகத் தெரியாது. எமக்கான வாழ்க்கையை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும். எமக்கு உயர்ந்த நிலையில் உள்ளவர்களைப் பார்த்து அவர்களைப் போன்று வாழ்வதற்கு நாம் எண்ணுவோமானால் அதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகள் எமது நிம்மதியையே குலைத்துவிடும்.



# நயினை நாகபூஷணிக்கு பூசை செய்யும் பேறுபெற்ற பாலாமணிக் குருக்கள்

நயினை அம்பாளிடம் தன்னை அர்ப்பணித்துப் பூசை செய்தவர் அமரர் நயினை சுவாமிநாதக்குருக்கள் பாலசுந்தரக்குருக்கள்

இறை தொண்டுக்கு விலை பேசாத குருக்கள். குரு பிரமா குரு விஷ்ணு ஜெர் தேவோ மஹேஸ்வர குரு சாஷாத் பரம் பிரஹாம் தஸ்மை ஸ்ரீ குருவே நம

"குருவே சிவமெனக் கூறினர் நந்தி
குருவே சிவமென்பது குறித்தோரார்
குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்கும்
குருவே உரை உணர்வற்றதோர்கோவே" என்ற திருமூலர் திருமந்திர வாசகத்துக்கு ஒப்ப குருதான் சிவன், சிவன்தான் குரு என்ற தத்துவத்துக்கு அமைய நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் நித்திய பூசைக்குருவாக, ஆதீன குருப்பரம்பரையின் வாரிசாகப் பூசைபுரிந்த சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் பாலசுந்தரக்குருக்கள் (பாலாமணிக் குருக்கள்) 17.12.2014 புதன்கிழமை அம்பாளின் திருப்பாதங்களில் ஒன்றியமை சைவ உலகுக்கு ஒரு பேரிழப் பாகும். பழுத்த வெள்ளரி பற்று விட்டது போன்று குருமணி அவர்களின் ஆன்மா அம்பாளின் பாதக்கமலங்களில் அமைதி அடைந்தது.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆதீன குரு அமரர் சுவாமிநாதக் குருக்கள் செல்லம்மா தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாய் 1936.7.20 ஆம் திகதி நயினாதீவில் பிறந்த குருக்கள், நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும், நயினாதீவு மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து பயின்றதோடு, சமஸ்கிருதம் குருத்துவத்துக்கான கல்வியை இவரின் அண்ணா அமரர் சுவாமிநாதக்குருக்கள் பரமேஸ்வரக் குருக்கள் இவரின் பெரியதந்தையாரின் புதல்வர் அமரர் பிரதிஷ்டா பூஷணம் ஐ. கயிலாசநாதக்குருக்களிடமும் முறையாகக் கல்வி பயின்று குருக்களானார். அம்பிகையைத் திருமணம் செய்து இல்லற வாழ்வில் இணைந்து ஒரு புதல்வனுக்கும் மூன்று புத்திரிகளுக்கும் தந்தையாய் குருவாய், ஆசானாய் திகழ்ந்தார்.

'தந்தது உன் தன்னை கொண்டது என்தன்னை' என்றவாறு நயினை நாகபூஷணி அம்பாளின் நித்தியபூசை வழி வழி அடியாய் அவனியில் பிறந்து இளமை முதல் முதுமைவரை அவளின் பூசைத் தொண்டே தன் தனித் தொண்டாகக் கருதி 'கண்ணியது உன் புகழ், கற்பது உன் நாமம், கசிந்துபற்றி பண்ணியது உன் இரு பாதாம் புயத்தில், பகல் இரவா நண்ணியது உன்னை நயந்தோர். அவையத்து நான் முன்செய்த புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே என்ற அபிராமிப்பட்டரின் ஞான வாக்கின் படி அந்தண குருவாக வாழ்க அந்தணர் என்ற ஞான சம்பந்தப் பெருமானின் கூற்றுக்கு அமைய அரன் நாமமே சூழ்க வையகமும் வெந்துயர் தீரவே' என்ற அந்தணகுலத்தின் பூசை கிரியை உற்சவங்களுக்கு "என்ன புண்ணியம் செய்தனை" என்ற பூசைத் தொண்டுக்கு விலை பேசாது குருதட்சணையை மனநிறைவோடு ஏற்று அற்சதை இட்டு ஆசி வழங்கிய பெருந்தகை.

போர்ச் சூழ்நிலையில் தீவுப் பகுதி துண்டிக்கப்பட்டிருந்த அந்த நாளில் நயினை நாகபூஷணி அம்பாளுக்கு வருடாந்த மஹோற்சவத்தைத் தவிர அனைத்துப் பூசை உற்சவங்களையும் தனித்து நின்று தள்ளாத வயதிலும் செய்த திருத்தொண்டுக்கு, நயினை மக்களின் பாலமணிக் குருக்களுக்கு எம்பெருமாட்டி தந்த குருவடிவாய் வந்த குருவுக்கு, வாயாரப்பாடி அஞ்சலி செலுத்த மனித மொழியில் வார்த்தைகள் இல்லை. 'மாத்தவளே உன்னை அன்றி மற்ற மனிதர்களால் முடியாது தாயே! வெவ்விய காலன் அவர்மேல் வரும் போது அம்பாள் ஆண்ட பொற்பாதத்தில் அவரைச் சேர்த்திருப்பாள்.




**நயினை–நாகமணி–கோபாலகிருஷ்ணன்,**
**தலைவர் சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசம்.**

# சமூகத் தொண்டுக்கு உதாரணமாக விளங்கியவர் எஸ். ஆர். இயேசுபாலன்

சமாதான நீதிவானாகவும் கிராம அலுவலராகவும் சமுதாயத்துக்கு அரும் பணியாற்றிய எஸ்.ஆர்.இயேசுபாலன் கடந்த டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை (10.12.2014) இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவர் சமுதாயத்திலும் திருச்சபையிலும் ஆளுமைமிக்க ஒரு தலைவராக விளங்கினார். இவருடைய வாழ்க்கையிலே காணப்பட்ட மிக முக்கியமான பண்பு, இனப்பற்று ஆகும். தெல்லிப்பழையிலே ஓர் ஆசிரியருக்கு மகனாகப் பிறந்த எஸ்.ஆர்.இயேசுபாலன் தான் சார்ந்திருந்த நிறுவனங்கள் அனைத்திலும் மட்டற்ற ஈடுபாடு கொண்டிருந்தார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, தென்னிந்தியத் திருச்சபை என்பவற்றுக்காக இறுதிவரை அயராது பாடுபட்டார். இவர் கிராம சேவையாளராகப் பதவி ஏற்பதற்கு முன்னர் பல தனியார் நிறுவனங்களில் பணியாற்றி நேர்மையானவர் என்று பெயரெடுத்தவர். கிராம சேவகர் என்ற பதவியில் இருந்து இளைப்பாறிய பின்னர் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையினதும், இணுவில் மக்லியோட் வைத்தியசாலையினதும் பணிப்பாளராகச் சேவை புரிந்தார். பல சனசமூக நிலையங்களுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கும் ஆணிவேராகத் திகழ்ந்தவர் எஸ்.ஆர்.இயேசுபாலன். அவர் மரிப்பதற்கு முன்னர் கலைக் காவேரி மன்றம் இவருக்கு 'சமூக சேவையாளன்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. தனது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் சமூக பணிக்காக அர்ப்பணித்த இந்தப் பெருந்தகை அந்தப் பணிகள் முடிவுற முன்னரேயே மறைந்து விட்டார். இதனாலேயே அவருடைய இறுதிச் சடங்குக்கு பெருந்திரளான மக்கள் வந்து அஞ்சலி செலுத்தினர்.

"நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்கு உட்பிரவேசித்து தமது படுக்கைகளில் இளைப்பாறுகின்றார்கள் என்கிறது கிறிஸ்தவ வேதாகமம்". காலமெல்லாம் உழைத்த எஸ்.ஆர்.இயேசுபாலனுக்கு இப்பொழுது நித்திய இளைப்பாறுதல் கிடைத்துள்ளது. அவருடைய பயனுள்ள வாழ்க்கை நம் எல்லோருக்கும் ஓர் அரிய பாடமாகும்.

**வணபிதா பி.தேவமித்திரன்.**



# விருது பெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு



ஒரு நாட்டின், பிரதேசத்தின் அடையாளங்களை உருவாக்குபவர்கள் அங்குவாழும் கலைஞர்களே. கலைஞர்கள் கௌரவிக்கப்படும் போது கலைகள் வளரும். கலைகளை வளர்க்க வேண்டியது, இன்றைய காலத்தின் மிக முக்கிய தேவையாகும். கலைகளை வளர்க்க வேண்டும் என்பதற்காகவே அரசும் கலைத் துறையில் சாதனைபுரிபவர்களுக்குக் கலாபூஷணம் விருது வழங்கிக் கலைஞர்களைக் கௌரவித்து வருகின்றது.

மேற்கண்டவாறு கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு வழங்கிய அரச உயர் விருதான கலாபூஷணம் விருதைப் பெற்றுக் கொண்ட பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கலைஞர்களைக் கௌரவிக்கும் விழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய பருத்தித்துறை பிரதேச செய லர் கலைஞர் இ.த.ஜெயசீலன் குறிப் பிட்டார்.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக் கௌரவிப்பு விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி செல்வசுகுணா சேனாதிராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து உரையாற்றிய பிரதேச செயலர் ஜெயசீலன் குறிப்பிட்டதாவது:–

நாடு என்பது மண், கல், மரம், கடல் என்று இருக்கும் நிலையில் அதன் பெயரை, பெருமையை, அடையாளங்களை வெளிப்படுத்துவது அங்கு வாழும் கலைஞர்களே. கலைஞர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும். இதில் சமூகம் முக்கிய கவனமெடுக்க வேண்டும். நமது கலைகளை பேணிப் பாதுகாத்து, எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். கலைகள் மனிதவாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்திச் சிறந்த வாழ்வுவாழ வழிவகுக்கின்றன. பருத்தித்துறை பிரதேசம் பல துறைகளில் பிரசித்தி பெற்ற பிரதேசமாகும். கலைத்துறையில் மிக முன்னணியில் திகழும் பிரதேசமுமாகும். பருத்தித்துறைப் பிரதேசத்தில் கலைத்துறையில் சாதனை படைத்த ஆறு கலைஞர்கள் அரச உயர் விருதான "கலாபூஷ ணம்" விருதைப் பெற்றுள்ளமை மிக மகிழ்ச்சிக்குரியதாகும். இந்தப் பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்துள்ள இந்தச் சாதனைக் கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே பிரதேச செயலகம் இந்தக் கலைஞர் பாராட்டு விழாவை ஒழுங்கு செய்தது. கலாபூஷணம் விருது பெற்ற இந்தக் கலைஞர்கள் தொடர்ந்தும் கலைத்துறை யில் சாதனைகளை நிலைநாட்டிக் கலைப் பணியாற்ற வேண்டும். அதன் மூலம் எமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கையை வளப்படுத்த முடியும்.



இந்த விழாவிலே கலாசார உத்தியோகத்தர் பொன். சுகந்தன், ஏற்கனவே அரச கலாபூஷணம் விருது பெற்றுள்ள நாடகச் சக்கரவர்த்தி பரராஜசிங்கம், (பப்பா) நாடகக் கலைஞர் எஸ். உருத்திரேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர்.

கலாபூஷணம் விருது பெற்று பருத் தித் துறை பிரதேசத்துக்குப் பெருமை சேர்த்த ஈ.ஆழ்வாப்பிள்ளை (மேடை நாடகம்), பி.வேத நாயகம் (இலக்கியம்), எஸ்.திருச்செல்வம்(ஊடகத்துறை), ரி.தவராஜா (கிராமியக் கலை), கெ.ஜெயானந்தம் (சிற்பக்கலை), வி.கார்த்திகேசு (நாடகம்) ஆகியோர் பாராட்டப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். கலாபூஷணம் ஆழ்வாப்பிள்ளை, கலாபூஷணம் திருச்செல்வம் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர். பருத்தித்துறை பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் செல்வி எஸ்.சர்மிளா நன்றியுரை வழங்கினார்.

11 FEB 2015

# மது அருந்தினால் மனக் கவலையை மறக்க முடியுமா?



நிலா

மது அருந்தும் எண்ணம் தோன்றும்போதே, மூளையின் ரிவார்ட் சிஸ்டம் மூலமே அந்த எண்ணத்தைத் தடுக்க முடியுமா? இந்த ஆராய்ச்சியின் முதல் கட்டம் வெற்றியடைந் திருக்கிறது. இப்போது 60 நாடுகளில் செய்யப்படுகின்ற (அமெரிக்கா நீங்கலாக) விகாபேட்ரின் என்கிற வலிப்பு நோய் சிகிச்சை கிட்டத்தட்ட இதே போன்றதுதான். Gamma Amino Butyric Acid என்ற நியூரோடிரான்ஸ் மீட்டரானது உணர்ச்சி வசப் படுதலைக் கட்டுப்படுத்தக்கூடிய நரம்பு மண்டல அமைப்பு.

விகாபேட்ரின் சிகிச்சை மூலம் இந்த அமைப்பு பூஸ்ட் செய்யப்படுகிறது. அப்போது வலிப்பைத் தூண்டும் காரணிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதே முறையில் தான் போதை எண்ணத்தை மூளையே முளையிலேயே கிள்ளும் எண்ணமும் செயற்படும். அமெரிக்காவின் இரு பயோடெக் நிறுவனங்கள் இந்த ஆராய்ச்சியில் தீவிரமாக இறங்கி இருக்கின்றன. இது மட்டும் வேலை செய்யுமானால், எந்த வகைப் போதையாக இருந்தாலும் தடுத்து விட முடியும் என்று நம்பிக்கையாகச் சொல்கிறார்கள் அந்த விஞ்ஞானிகள்.
மற்றுமொரு போதைத் தடுப்பு ஆராய்ச்சி ஸ்ட்ரெஸ் என்ற மன இறுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. மன இறுக்க வலையமைப்பை ஆராயும் விஞ்ஞானிகள், ஸ்ட்ரெஸ் காரணமாகவும் போதை வேட்கை அதிகரிக்கிறது என்கிறார்கள். எலிகளைச் சோதனைக்காகப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சியில் இது நிரூபணமாகியிருக்கிறது. புதிய சூழல், கூண்டில் புதிய எலி, வழக்கமான நடைமுறைகளில் மாற்றம் போன்ற காரணங்களின்போது, எலிகளுக்கும் மன இறுக்கம் ஏற்படுகிறது. அப்போது அவற்றின் போதை வேட்கையும் அதீதமாகிறது. எலிகளை விடவும் உயரிய உயிரினங்களான எமக்கும் ஸ்ட்ரெஸ் காரணிகள் பொருந்தும். மன இறுக்கம் அதிகமாகும்போது மூளையின் சிந்தனைத்திறனே மாறுதலுக்கு உள்ளாகிறது. இந்தச்சூழலில் பின்விளைவுகள் பற்றிச் சிந்திப்பதிலும் மாறுதல்கள் ஏற்படும். கடைசியாக நீங்கள் ஸ்ட்ரெஸ் ஆக இருந்த தருணத்தை யோசித்துப் பாருங்கள். பயந்தபோதோ, பதற்றமாக இருந்த போதோ, பயமுறுத்தப்பட்ட போதோ என்ன நடந்தது? ஃபைட் அல்லது ப்ளைட் என்று சொல்லப்படுகின்ற எதிர்த்துப் போரிடுதல் அல்லது தப்பியோடும் முடிவை மூளை எடுத்திருக்குமே... இருப்பினும் மன இறுக்கம் அதிகமாகும் சூழலில் மூளையின் சில பகுதிகளின் வேலைத்திறன் குறையும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால், மது அருந்தும் எண்ணமும் வலுப்பெறத்தானே செய்யும்? இதுதான் கவலையை மறக்க குடிப்பது என்பதோ? உண்மையில் மது அருந்துவதால் எந்தக் கவலையையுமே மறக்க முடியாது. போதை தலைக்கு ஏறும்போது, தற்காலிகமாக அந்த எண்ணங்களில் இருந்து விடுபடக்கூடும். ஆனால், நள்ளிரவில் தூக்கம் கலைந்து அத்தனை கவலைகளும் இரண்டாம் பாகமாக விஸ்வரூபம் எடுக்கும். முன்பிருந்த கவலைகளின் அளவை விட, இப்போதைய சஞ்சலங்களின் வலு நிச்சயம் அதிகரிக்கும். அதைத் தவிர்க்க மீண்டும் மது அருந்துவது ஒரேவழியாகத் தோன்றும்.
மீண்டும் மீண்டும் மது அருந்தும்போது, சம்பந்தப்பட்ட நபரது உடல்நிலை பாதிக்கப்படுவது ஒரு பக்கம் இருக்கட்டும். அதைத் தாண்டி அவரையும் குடும்பத்தையும் பாதிக்கும் முதல் விடயம் – பணம். பொருளாதாரம் மதுவாதாரமாக மாற மாற குடும்பமே கடன் வலையில் சிக்கும். இரவில் மட்டும் மது அருந்தத் தொடங்கியவர் நண்பகல், காலை என முக்காலமும் மூழ்கும்போது நேரம் என்ற பெறுமதிமிக்க விடயத்தையும் அவர் இழக்க நேரிடும். அதன் தொடர்ச்சியாக குடும்பத்தில் சச்சரவு, அண்டை வீட்டாரின் ஏளனம் என்று சமாளிக்கக்கூடிய விஷயங்களாகத் தொடங்குபவை சடாரென வாழ்வின் எல்லை இதுதானோ என்ற நிலைக்குத் தள்ளிவிடும். அது வேலை இழப்பு அல்லது தொழில் மூடல்.'

**ஏன் இந்த அளவு மிரட்டலாக இருக்கிறது போதை?**

நீங்கள் நிறுத்த விரும்பும்போது நிறுத்த முடியாததுதான் போதை... இதனால் கேடு விளையும் என உங்களுக்கு நன்றாகவே தெரிந்தாலும் கூட, உங்கள் வாழ்க்கைக்குள் அது உட்புகுந்துவிட்டால், அதைத் திருப்திப் படுத்துவதிலேயே காலம் எல்லாம் கழியும் என்கிறார் யு.எஸ். நஷனல் இன்ஸ்டிடியூட் ஒஃப் டிரக் அபியூஸ் அமைப்பின் இயக்குநர் நோரா வால்கோ.



போதை என்பது சாதாரணமானதொன்றல்ல. அது மகிழ்ச்சியைத் தொந்தரவு செய்யும் ஒரு விடயம். போதும் என்கிற மனமே வராத அளவு, மேலும் மேலும் உங்களை அது தன் பக்கம் இழுத்துக் கொண்டே இருக்கும் என்கிறார் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் மனநோய் பேராசிரியர் டாக்டர் மார்ட்டீன் பாலுஸ்.
போதை என்பது கட்டுப்படுத்த முடியாத வகையில் அதையே தேடும் தீவிரமான மூளைச் சீர்கேடு. சமூகப் பிரச்சினைகள், உடல்நலச் சிக்கல்கள் ஏற்படும் என நன்றாகவே தெரிந்தாலும், மனம் அதையே நாடும் என்கிறார் மருத்துவ விஞ்ஞானி ஸ்காட் லுகாஸ்.
பழக்கமாகத் தொடங்குவது பதற்றமாக மாறும்போது போதை புதிய பாதை அமைத்துவிடும். மது அருந்துவது நல்ல பழக்கம் என்று மூளையே சொல்வதாகவும் திரும்பத் திரும்ப அதைச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றவும் தொடங்கி விடும் என்கிறார் கிளினிக்கல் நியூரோசைன்ஸ் விஞ்ஞானி ஜோசப் ஃப்ராஸெல்லா.

# பிரபஞ்சத்தில் ஏலியன் வாழ்க்கையைத் துவம்சம் செய்து வரும் காமா கதிர் வீச்சுக்கள்

இணையவன்

பிரபஞ்சத்தில் உள்ள அண்டங்களில் செறிந்து காணப்படும் நட்சத்திரங்கள் தாம் அழிவடையும் கட்டத்தில் சூப்பர் நோவாக்களாக வெடிப்பதாக விஞ்ஞானிகள் கூறுவதை நீங்கள் அறிந்துள்ளீர்களா?
மேலும் இவ்வாறு சூப்பர் நோவாக்கள் வெடிக்கும் சமயத்தில் மிகவும் சக்தி வாய்ந்த காமாக் கதிர்களை அவை தம்மைச் சுற்றி வெளியிட்டு வருகின்றன. இந்த நிலையில் சமீபத்தில் பௌதிகவியலாளர்கள் சூப்பர் நோவாக்கள் வெளியிடும் மிகச் சக்தி வாய்ந்த காமாக் கதிர் வீச்சுக்கள் பிரபஞ்சத்தில் பரிணாமம் அடைந்து வரும் உயிர் வாழ்க்கையை அழித்து வருவதாகப் புதிய தகவலொன்றைத் தெரிவித்துள்ளனர். மேலும் இன்று நாம் செய்மதிகள் வாயிலாக ஆராய்ந்து வரும் சந்திரன், செவ்வாய், வெள்ளி, வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் மற்றும் புளூட்டோ கிரகங்கள் மட்டுமன்றி, நவீன விண் தொலைக்காட்டிகள் மற்றும் ரேடியோ, தொலைக்காட்சிகள் வழியாக இதுவரை அவதானித்துள்ள பால்வெளி அண்டம் மற்றும் ஏனைய அண்டங்களைச் சேர்ந்த நட்சத்திர மண்டலங்கள் மற்றும் கிரகங்கள் அல்லது குறும் கோள்களில் கூட எமது பூமியில் உள்ளது போன்ற உறுதியான சிக்கலான உயிர் வாழ்க்கையைக் கண்டுபிடிக்க முடியாது இருப்பதற்கு இந்தக் காமாக் கதிர் வீச்சு எரிப்பும் (Gamma ray burst) ஒரு முக்கிய காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.



அதாவது காமாக் கதிர்களின் இந்த மிகச் செறிந்த கதிர் வீச்சு, ஏனைய அண்டங்களில் செழிப்பு அடையக் கூடிய சிக்கலான உயிர் வாழ்க்கைகளின் பரிணாமத்தை 90 வீதம் பாதித்துள்ளமைக்கும், நமது பால்வெளி அண்டத்தின் உட்பகுதி கூட உயிர்கள் பரிணாமம் அடைய முடியாத தரிசாக இருப்பதற்கும், காரணமாக இருந்துள்ளதாக விஞ்ஞானிகள் கணிப்பிட்டுள்ளனர். இந்த காமாக் கதிர்கள் உயிரினங்களின் DNA மூலக்கூறுகளை முற்றாக அழிக்கும் வலிமை உடையவை என்பதுடன், அவை உயிர் வாழ்வதற்கு அவசியமான வளிமண்டலத்திலுள்ள வாயுக்களையும் மாசுபடுத்தி விடக் கூடியவை ஆகும். இந்தக் காமாக் கதிர்வீச்சுத் தாக்குதலுக்கு பூமியும் விதி விலக்காகவில்லை. 500 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமியைத் தாக்கிய காமாக் கதிர்வீச்சால் உயிரினங்களின் பெரிய இன அழிவு ஏற்பட்டதற்குச் சான்று இருப்பதாகத் தடயவியல் வல்லுநர்கள் தெரிவித்துவருவது குறிப்பிடத்தக்கது.

புவி

# எதிரி எனக்குள்ளே இருக்கிறானா?



ஒருவர் தனது குணநலன்களை வளர்த்துக்கொள்வது முடிவற்ற ஒரு செயல்முறை. உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும், இந்த நொடியில்கூட உங்கள் குணநலன் பரிணமிக்கிறது. தற்போதும், இந்தச் செயல்முறையை நிறுத்துவது சாத்தியம் அல்ல. நீங்கள் பார்ப்பது, நுகர்வது, கேட்பது, ருசிப்பது அல்லது தொடுவது எல்லாமே உங்கள் குணநலன்களை, உங்கள் ஆதாரமான இயல்பை மாற்றிக்கொண்டிருக்கின்றன. அன்றாட அனுபவங்கள் உங்கள் குணநலனை உருவாக்குகின்றன. உங்களால் இந்த மாற்றத்தை நிறுத்த முடியாவிட்டாலும், அதைக் கட்டுப்படுத்த முடியும். நீங்கள் பார்க்கும் அனைத்து விடயங்களும், நீங்கள் பழகும் மனிதர்களும், நீங்கள் செல்லும் சகல இடங்களும் உங்களது குணநலனை உருவாக்குகின்றன.

**உண்மையான குணம்**

நீங்கள் அனைவராலும் விரும்பப்படுபவராக இருக்கலாம். அருமையான பண்புடையவர் என்று உங்களைப் பற்றி மக்கள் கூறலாம். அவர்கள் பார்வையில் படுவதை வைத்து அப்படிச் சொல்கிறார்கள். அது நல்லதுதான். ஆனால் ஒருவரின் உண்மையான குணம் அல்லது இயல்பு என்பது யாரும் இல்லாதபோது அவர் எப்படி இருக்கிறார் என்பதைப் பொறுத்ததே. நீங்கள் வீட்டில் தனியாக இருக்கும் போது, உங்களை எடைபோட யாருமே இல்லாதபோது நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? தெருவில் தனிமையில் வாகனத்தை ஓட்டிக்கொண்டு போகும் போது, நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள்? என்ன பதில் சொல்கிறீர்களோ, அதுதான் உண்மையிலேயே நீங்கள். உங்கள் பதில் உங்களுக்குத் திருப்தி தருகிறதா? அப்படியானால் நீங்கள் அருமையானவர். அப்படி இல்லையென்றால் அது தொடர்பாக என்ன செய்ய விரும்புகிறீர்கள்? நீங்கள் எதை உள்வாங்குகிறீர்களோ, உங்களை எது உள் வாங்குகிறதோ அதைப் பொறுத்தே உங்கள் இயல்பு அமையும்.

**சுய பரிசோதனை**

நீங்கள் தொலைக்காட்சியில் எதைப் பார்க்கிறீர்கள்? என்ன இசை கேட்கிறீர்கள்? எவரது நிகழ்ச்சியைப் பார்க்கிறீர்கள். உங்களுக்கு ஆரோக்கியமான சமூகப் பழக்க வழக்கங்கள் இருக்கின்றனவா? இந்தக் கேள்விகளை எல்லாம் நீங்கள் உங்களிடமே கேட்டுக்கொள்ள வேண்டும். (அதற்குப் பதிலளிக்கவும் வேண்டும்) இது ஒரு சுய கணக்கெடுப்பு. சுய பரிசோதனை.

உங்களை எந்த விடயங்கள் மகிழ்விக்கின்றனவோ, எந்த விஷயங்களை நீங்கள் அதிகம் வெறுக்கிறீர்களோ, அவைதான் நீங்கள். ஒரு உதாரணம் எதிர்மறையான எண்ணம் கொண்டவர்கள் அல்லது எதற்கெடுத்தாலும் குறை சொல்பவர்களுடன் இருப்பதை நான் வெறுக்கிறேன். எப்போதும் குறைப்பட்டுக் கொள்பவர்கள் பேசுவதைக் கேட்கும்போது எனது தசை சுருங்குகிறது. ஏன் தெரியுமா? நான் என்னவாக இருக்கிறேன் என்பதே இதற்கான காரணம். நான் நேர்மறையான எண்ணம் கொண்டவன். நேர்மறையான நபர்கள் சூழ இருப்பதை விரும்புபவன். நான் ஊக்கப்படுத்துபவன். என்னைச் சுற்றியுள்ளவர்களை ஊக்கப்படுத்த விரும்புபவன். ஆனால் எதிர்மறையான எண்ணமும் முறைப்பாடு சொல்வதில் நாட்டமும் உள்ளவர்கள், தங்களது துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்கள். எதிர்மறையான நபர்கள் எனக்கு ஆயாசமூட்டுகிறார்கள்.

**சமரசம் வேண்டாம்**

என்னைப்பற்றி நான் புரிந்து கொண்ட பிறகும் நான் எதிர்மறையான நபர்களை ஊக்குவிக்கிறேன் என்றால் எதிரி என்னிடம் இருக்கிறான் என்று பொருள்.

நான் வளருவதற்கு உதவும் விடயங்களுக்கும், என்னைப் பிய்த்துப் போடும் விடயங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நான் புரிந்து கொள்வது என் பொறுப்பு. இந்த உண்மையைப் புரிந்துகொள்வது, நான் ஊக்குவிக்கும் நபர்கள், இடங்கள் குறித்து என்னைப் பொறுப்பாக நடக்க வைக்கும்.

உங்கள் வாழ்க்கையில் உள்ள எதிரியைப் போன்ற அம்சங்களை நீங்கள் அடையாளம் கண்டுவிட்டால், அவற்றைத் துண்டிக்கும் முடிவையும் சமரசமின்றி உடனடியாக எடுத்துவிடுங்கள். யாராக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் பயப் பட மாட்டேன் என்று விரட்டுங்கள். இந்த முடிவில் சமரசம் செய்து கொண்டுவிட்டீர்கள் என்றால் அந்தக் கணமே உங்களுக்கு நீங்களே எதிரியாகி விடுகிறீர்கள்.

**யார் எதிரி?**

நீங்கள் கேட்கலாம். நான் மிகவும் பிரியம் வைத்துள்ளவர் அல்லது குடும்ப உறுப்பினர் அப்படிப்பட்டவராக இருந்தால் என்ன செய்வது? நான் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் அவர்களைத் தூரத்தில் வைத்து நேசிக்கலாம் என்பதுதான் என் பதில். (இது உங்களது வாழ்க்கைத் துணைக்குப் பொருந்தாது. அவர்தான் உங்கள் எதிரி என்றால், அது இன்னொரு புத்தகத்துக்கான விடயம்.)

இது உங்களுக்கான பருவம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உங்களை மேலும் சிறந்தவராக்குவதற்கான நேசத்தை வளர்த்துக்கொள்ள இது தான் சிறந்த தருணம். உங்களது நல்வாய்ப்புக்கு இதைப் பயன்படுத்திக் கொள்ள நீங்கள் இந்தப் பருவம் முழுவதையும் கடக்க வேண்டும். உங்களுக்கானவர் யார் உங்களுக்கு எதிரி யார் என்பதை உண்மையிலேயே மதிப்பிடுவதற்கான சமயம் இது.

# அதற்கும் தகுதிவேணும்

யானை போன்றவர்களது நட்பைத் தவிர்த்து நாய் போன்றவர்களது நட்பைக் கொள்ள வேண்டும் என்கிறது நாலடியார். மனிதனது ஆரம்ப காலம் தொடங்கி, கொலை, கொள்ளைகளை மோப்பம் பிடித்துக் காட்டும் சம காலம் வரையாக மனிதருடன் நெருக்கமாகவுள்ளது நன்றியுள்ள நாய் இனம். அமெரிக்க மாநிலம் ஒன்றில் "லசி" எனும் ஒரு நாய்க்கு சிலைவைக்கப்பட்டிருக்கிறது. 25 வருடங்களுக்கு முன்னர் தொலைக் காட்சித் தொடராக அந்த நாயின் சாதனைகள் இங்கும் ஒளிபரப்பாகின. இன்று அமெரிக்க இரகசியக்காவல் பொலிஸ் படையில் கூட நாய் அதிகாரிகளும் இருக்கின்றன. அந்த அளவுக்கு நாய்களுக்கு அங்கு தனி மதிப்பு. ஏன்? எமது நாட்டிலும் குளிரூட்டப்பட்ட ஆடம்பர அறைகளில் 43 நாயார்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்திருந்தனவாம். எஜமானர்களைப் பொறுத்தவரை இவை நாய்கள் அல்ல. நாய்கள் என்று சொல்ல, சொல்பவருக்குத் தகுதி வேணும்.




வடக்கு மாகாண சபை தமது கைக்குவராத வெப்பியாரம் – காழ்ப்பின்வெளிப்பாடாக 'வைக்கோல்பட்டடை நாய்களுக்கு' உவமையானது தமிழினம். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாதாம், நாய் பசிக்காவிட்டால் தான் புல்லைத் தின்னுமாம்– ஆனால் வைக்கோலை ஒரு போதும் தின்னாது. நல்ல காலமாக வடக்கு மாகாணத்தவரின் தீர்க்கமான நிலைப்பாட்டினால் எங்களது மாகாணசபையாக அது இருக்கிறது. அல்லாது போயிருப்பின், தங்களைத் தின்ன விடவில்லை என்ற வயிற்றெரிச்சல்காரர்கள் இங்கும் தின்று தள்ளியிருப்பார்கள். ஏனெனில் அந்த அளவுக்குப் பார்க்கும் – கேட்கும் செய்திகள் அவர்களின் தின்னும் திறமையை, தோலிருக்க சுளை விழுங்கித் தனத்தைச் சொல்லி நிற்கின்றனவே. வைக்கோல் பட்டடை உவமையின் பிற்பாதி உவமித்தவர்களது பக்கமாகத் திரும்பி நிற்கிறது இங்கே.

இழந்து விட்டதனது சுயநிர்ணய உரிமைக்காக – சுதந்திரத்துக்காக இன்றுவரை நாய்படாப்பாடு பட்டுக் கொண்டிருக்கும் தமிழினத்தை நாய்கள் என்று சொல்ல, சொல்பவருக்குத் தகுதி வேணும்? அவர்களுக்கு அது இருந்ததனால் தான் கைது செய்யப்பட்டும், அல்லாமலும், இராணுவ வாகனங்களில் ஏற்றப்பட்டும்; சிறைச்சாலைகளில், இரகசியவதை முகாம்களில் நாதியற்று நாயாய் அழுந்துகிறது எம்மினம். வாழ்விடங்களில் இருந்து துரத்தப்பட்டு, அகதி முகாம்களிலும் ஓட்டைக் குடிசைகளிலும் நாயாய் பரிதவிக்கிறது தமிழினம். தூக்கிக் கொடுத்து விட்டு, பறிகொடுத்து விட்டு, உறவுகளின் படங்கள், சுலோக அட்டைகளுடன் விழிநீரோட வீதிகளிலும், ஆணைக்குழுக்களிடமும் நாயாய் அலைகிறது எம்சனம். தமிழ்ச் சமூகம் தீர்க்கமாக இல்லாவிடில் தமிழினத்தை நாய் என்று பல்லுக்குப் பதமாகச் சொல்வதற்கான தகுதியை அவர்கள் கொண்டிருக்கவே செய்வர்.

செல்வவேலாயுதம்



## கவிஞர் வீராவின் நூல், இறுவட்டு வெளியீடு

வர்ணம் கிரியேஷன்ஸ் வெளியீட்டில் கவிஞர் கு.வீராவின் இரண்டாம் உயிர் கவிதை நூல், கண்ணடிக்கும் காலம் கவிதை நூல், இரண்டாம் உயிர் ஒலிக் கவிதை இறுவட்டு வெளியீட்டு விழா மிகச்சிறப்புற இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் கடந்த பொங்கல் தினத்தன்று நடைபெற்றது.

முதலில் மங்கல விளக்கை திருமதி நிரஜா சரவணபவக்குருக்கள் ஏற்றி வைத்தார். தேவபாராயணத்தை சிவஸ்ரீ மகா. ஸ்ரீவத்ஸாங்க குருக்கள் நிகழ்த்த, திருமுறையை செல்வி கிருபானந்தி பேரின்பநாயகம் வழங்கினார். செல்வி சர்வாணி சரவணபவக்குருக்களின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து திருமதி மாலாதேவி மதிவதனன் வரவேற்புரை, நிகழ்த்த ஆசியுரையை சிவஸ்ரீ சா.சோமசபேசக் குருக்களும் வாழ்த்துரையை கலாபூசணம் கோப்பாய் சிவமும், தலைமையுரையை ஓய்வு நிலைப் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும் வழங்கினர். வர்ணம் கிரியேஷன்ஸ் சார்பாக உலகறிந்த உணர்வுப்பாடகர் வர்ண ராமேஸ்வரனது உரையும் ஒலிக்கச் செய்யப்பட்டது.

சிறப்புரையை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கமும் வெளியீட்டு உரையை கு.பாலஷண்முகனும் வழங்கினர்.


நூல்களும் இறுவட்டும் கொண்ட தொகுப்பை நூலாசிரியரின் தாயார் திருமதி சிற்சபேஸ்வரி குமாரசாமிக்குருக்கள் வெளியிட, விழாவின் பிரதம விருந்தினரும் முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரும், சமூகவியல்துறை தலைவருமான சிரேஷ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிரகள் வழங்கலும் கலைஞர் கௌரவிப்புக்களும் இடம்பெற்றன.

தொடர்ந்து இரண்டாம் உயிர் கவிதை நூலுக்கான மதிப்பீட்டுரையை பேராசிரியர் தி.வேல்நம்பியும், கண்ணடிக்கும் காலம் நூலுக்கான மதிப்பீட்டுரையை விஜயசுந்தரமும், இரண்டாம் உயிர் ஒலிக்கவிதை இறுவட்டுக்கான மதிப்பீட்டுரையை திருமதி கோகிலா மகேந்திரனும் வழங்க, நயப்புரையை மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தினார்.

நிகழ்வின் சிறப்பம்சமாக நூலாசிரியர் சார்ந்த குடும்பத்தினர் சார்பாக யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு ஒரு சிறுதொகை நிதி அன்பளிப்பு செய்யப்பட்டதுடன் சிறப்பு அழைப்பாளர்களுக்கு கனிதருமரக்கன்றுகளும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.



உ.கரோசன்
யாழ். புனித ஜோண் பொஸ்கோ ம.வி.



சு.மதுநிசா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

## தெரிந்து கொள்வோம்

உலக மக்கள் அமைதியாக வாழ்வதற்கு உகந்த நாடு – நோர்வே.
உலகில் அதிக மக்களால் தயாரித்து உண்ணப்படும் உணவு – நூடில்ஸ்.
கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அறிமுகம் செய்த நாடு – நோர்வே.
ஒரு நாட்டின் பரப்பளவுக்குள் அமைந்து இருக்கும் இன்னுமொரு நாடு – லெசதோ ( ஆபிரிக்கா )
ஒரே நாடாக இருக்கும் கண்டம் – ஆஸ்திரேலியா
பழைமை வாய்ந்த செய்தி நிறுவனம் – ரொய்ட்டர்
தனக்கு என்று தாய் மொழி இல்லாத நாடு – சுவிற்ஸர்லாந்து
பத்திரிகை வெளிவராத நாடு – திபெத்
ஒரு போதும் மலராத பூ – அத்திப்பூ
உலகில் வறுமையான நாடு – ருவாண்டா
விவாகரத்து செய்யமுடியாத நாடு – அயர்லாந்து
ஜப்பான் தீவுகளின் எண்ணிக்கை 4

## புத்திசாலிக் கழுதை

ஒரு நாள் காட்டுப் பகுதியொன்றில் கழுதை ஒன்று புல்மேய்ந்து கொண்டிருந்தது.
அந்தக் கழுதையைக் கவனித்த ஓநாய் ஒன்று அதைக் கொன்று தின்னும் நோக்கத்துடன் அதன் மீது பாய்ந்தது. தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந்தது கழுதை. ஓநாயின் பாய்ச்சலின் போது சற்று விலகிக் கொண்டு, "ஓநாயாரே, உம்முடைய வலிமையின் முன்னால் நான் எம்மாத்திரம்... நான் இன்று உமக்கு இரையாகப் போவது உறுதி. இதை யாராலும் தடுக்க முடியாது. நானும் உமக்கு இரையாகத் தயாராக இருக்கிறேன். அதற்கு முன்னால் நான் சொல்லக் கூடிய ஒரு விடயத்தைத் தயவு செய்து கேட்க வேண்டும்," என வேண்டிக் கொண்டது.
"ஓநாயாரே எனது காலில் பெரிய முள் ஒன்று குத்தி விட்டது. முள்ளை எடுக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. காலில் முள் உள்ள நிலையில் நீர் என்னைக் கொன்று சாப்பிட்டால் அந்த முள் உமது தொண்டையில் மாட்டிக் கொள்ளும். அது உமக்குக் கடுமையான வேதனையைத் தருவதுடன் உமது உயிரை வாங்கி விடவும் கூடும். அதற்கு அருள் கூர்ந்து முதலில் என் காலில் இருக்கும் முள்ளை எடுத்துவிடும். அதற்குப் பிறகு நீர் என்னை அடித்துத் தின்பதில் எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை," எனக் கழுதை கூறியது.
ஏமாந்த ஓநாய் அதற்கு ஒப்புக் கொண்டது.
கழுதை தனது பின்னங் கால்களைத் திருப்பிக் காண்பித்து, "இடது காலில் தான் முள் இருக்கிறது!" எனக் கூறியது. ஓநாய் கழுதையின் பின்னங்கால்களில் முள் இருக்கின்றதா என ஆராய்ச்சி செய்தது. அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு கழுதை பின்னங் கால்களால் ஓநாயைப் பலமாக உதைத்துப் படுகாயப்படுத்தியது. கழுதையின் உதையைத் தாங்கமாட்டாது ஓநாய் துடிதுடித்து வீழ்ந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழுதை வேகமாக ஓடி தப்பித்துக் கொண்டது.



## உலகின் பெரிய இலை

உலகின் மிகப் பெரிய வட்ட வடிவ இலையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அது நீரில் வளரும் இலை. இதன் பெயர் 'விக்ரோரியா ரிஜியா'. பார்ப்பதற்குப் பெரிய தாம்பாளத் தட்டுப் போலக் காணப்படும். இது, அல்லி வகையைச் சார்ந்தது. இந்த இலை 3 மீற்றர் விட்டம் வரைகூட வளரும். சராசரியாக இலையின் குறுக்களவு 1.85 மீற்றர். வட்ட வடிவமான இலை மட்டுமே மேல்நோக்கி நீரில் காணப்படும். இதன் அடிப்பகுதியில் வளரும் தண்டு 7 முதல் 8 மீற்றர் நீளத்தில் இருக்கும். தண்டுப் பகுதி முழுவதும் தண்ணீருக்குள்ளேயே இருக்கும். இதன் பிறப்பிடம் இங்கிலாந்து. இந்த இலையைக் கண்ட விக்ரோரியா மகாராணி, இதை 'விக்ரோரியா ரிஜியா' என்று அழைத்ததாகக் கூறுகிறார்கள். ஆனால், இதன் உண்மையான பெயர் அமேசானிகா. இங்கிலாந்தைத் தவிர்த்து பிரான்ஸ், கயானா மற்றும் அமெரிக்காவிலும் இது அதிகம் காணப்படுகிறது. குறிப்பாக அமேசன் காட்டில் இந்த அரிய வகை இலை அதிகம் உள்ளது.





த.அமலன்
யாழ். இந்துக் கல்லூரி

## கடல் நீருக்கு நிறமில்லை

கடல் நீர் தெளிவானது. ஆனால் கடல் நீர் நீல நிறம் போல் தெரியும். மேகத்தின் நிறத்துக்குத் தக்கதாக அதன் பிரதிபலிப்பு கடலின் மேல் பரப்பில் தெரியும். இதற்குச் சூரிய ஒளிக்கதிர்கள் தான் காரணம். ஆழமான கடலின் ஆழம் நீல நிறம் போலவோ அல்லது இருண்ட ஊதா நிறம் போலவோ காட்சியளிப்பதற்கு சூரிய ஒளிக்கதிர்களின் மாற்றமே காரணம். சூரிய ஒளி மறைந்ததும் நிறமெல்லாம் மாயமாக மறைந்து விடும்.





ச.பிரகவி
கோப்பாய் தெற்கு

# நேர்த்தியாக திட்டமிடுங்கள் நேரத்தை

-மிது

படிப்பது, புரிந்து கொள்வது, சூத்திரங்களை மனப்பாடம் செய்வது – இவை எல்லாம் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு முக்கியம் நேரத்தை நேர்த்தியாகத் திட்டமிடுவது. உயர்தரப் பரீட்சைக்கு சாதாரணமாகப் படிக்கும் ஒரு மாணவர்கூட நேரத்தை நேர்த்தியாக வடிவமைத்துப் படித்தால் எதிர்பார்த்ததை விடக் கூடுதல் மதிப்பெண்கள் பெறலாம்.

இன்ன பாடத்துக்கு இத்தனை நாள்கள் என ஒதுக்கீடு செய்து படிக்கலாம். இதற்காக ஓர் அட்டவணையைத் தயார் செய்து உங்கள் மேசையில் ஒட்டி வைத்துக்கொள்ளுங்கள். இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் கணிதத்துக்கு ஏழு நாள்கள் விடுமுறை உள்ளது. இந்த அவகாசத்தில் உண்மையிலேயே கணிதத்தைக் கரைத்துக் குடிக்கலாம்.

பொதுவாக ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிப் பாடங்களுக்கு தலா இரு நாள்கள் ஒதுக்கிக்கொள்ளுங்கள். இயற்பியல், வேதியியல், உயிரியல், கணக்குப் பதிவியல், வணிகவியல் ஆகிய பாடங் களுக்கு தலா நான்கு நாள்கள் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். மீதி உள்ள நாள்களை எந்தப் பாடத்துக்கு ஒதுக்கிப் படிக்க வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டமிடுதலில் முக்கியமான விஷயம்.

உதாரணத்துக்கு, மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்கள் உயிரியலுக்கு, கூடுதலாக ஒருநாளை எடுத்துப் படிக்கலாம். ஏனெனில், மருத்துவப் படிப்புக்கு கடும் போட்டி நிலவி வருவதால், உயிரியல் பாடத்தில் பெறும் மதிப்பெண் முக்கியத்துவம் வாய்ந்தது. அதேபோல் பிற பிரிவு மாணவர்களும், அவர்கள் படிக்க விரும்பும் மேற்படிப்புக்கு ஏற்ற பாடத்துக்கு ஒருநாள் கூடுதலாக ஒதுக்கிப் படிக்க வேண்டும். இதுதவிர மீதம் உள்ள நாள்களில், எந்தெந்தப் பரீட்சைக்கு இடையே விடுமுறை இல்லாமல் பரீட்சை வருகிறது என்பதைத் தெரிந்துகொண்டு, அந்தப் பரீட்சைக்கான பாடத்தைப் படிக்க அதிக நாள்களை ஒதுக்கலாம்.

ஆண்டுதோறும் பொதுத் தேர்வில், கடைசிப் பரீட்சைக்குத் தயாராவதில் மாணவர்கள் அக்கறை காட்டுவதில்லை. முன்னைய பரீட்சைகள் எழுதிய களைப்பில், மறுநாள் முதல் பாடசாலை நாள்கள் நிறைவடைகின்ற உற்சாகத்தில், கொண்டாட்டம் மற்றும் அலட்சியம் கலந்த மனோபாவத்தில் இறுதிப் பரீட்சையை எதிர்கொள்கின்றனர். இறுதிப் பரீட்சை என்பது இறுதிப் போட்டி போன்றது. எனவே, இறுதிப் பரீட்சையில் அலட்சியப் போக்கைக் கைவிட்டு, அந்தப் பரீட்சைக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து, ஆர்வமுடன் படித்தால் கூடுதல் புள்ளிகள் பெறலாம்.


பரீட்சைக்குத் தயாராகி வரும் நீங்கள், இரவு வழக்கமாக படித்துவிட்டு படுக்கைக்கு உறங்கப் போகும் நேரத்தை வரையறுத்துக்கொள்ள வேண்டும். வழக்கமாக நீங்கள் இரவு உறங்கச் செல்லும் நேரம் 10 மணி என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், பரீட்சைக்காக ஒரு மணி நேரம் கூடுதலாக செலவிடுகிறீர்கள். அதாவது, இரவு 11 மணிவரை படித்துவிட்டு உறங்கச் செல்கிறீர்கள். அவ்வாறு எனில் இரவு 10 மணியுடன் படிப்பதை நிறுத்திக்கொள்ளுங்கள். ஒரு மணி நேரம் சூத்திரம், வரைபடம், கேத்திர கணிதம் என எழுத்து சார்ந்த பயிற்சியில் ஈடுபட வேண்டும். ஏனெனில், வழக்கமாக இரவு 10 மணிக்கு தூங்கப் பழக்கப்பட்ட நிலையில், அந்த நேரத்துக்கு கண்கள் சொருக ஆரம்பித்துவிடும். இதனைத் தவிர்க்கவே, எழுத்துப் பயிற்சியில் ஈடுபடுவது அவசியமாகிறது.

அதேபோல் நள்ளிரவு, அதிகாலை என நேரம் மாறி மாறிப் படிப்பதால் உடல் நலம் கெடும். விடிய விடிய பிரமாதமாகப் படித்தோம், சாதிப்போம் என்பதெல்லாம் மாயை. எனவே, மனதை லேசாக வைத்துக் கொண்டு, மூளைக்கும், கண்களுக்கும் நல்ல ஓய்வு கொடுத்து, மெதுவாகப் படித்தால் போதுமானது. எனவே, இரவு நேரப் படிப்பு முறையில் நேரம் ஒதுக்கீடு முக்கியத்துவம் பெறுகிறது.

பரீட்சை மண்டபத்துக்கு கண்டிப்பாகக் கையில் கடிகாரம் கட்டிக் கொண்டு போக வேண்டாம். அடிக்கடி மணி பார்த்து தேவையில்லாத பதற்றம் அடைவீர்கள். வினாத்தாளில் அலங்காரம், சோடனை செய்வதைத் தவிர்க்க வேண்டும். கேள்விக்கான பதிலை முதலில் எழுதுங்கள். முதல் பிரிவில் உள்ள அனைத்துக் கேள்வி– பதிலும் எழுதி முடித்தபின்னர், நேரம் இருந்தால் மட்டுமே நீங்கள் எழுதிய பதிலுக்குத் தேவையான இடங்களில் அடிக்கோடு இடுவதையும், வண்ணம் தீட்டுவதையும் வைத்துக் கொள்ளலாம்.


ஒரு கேள்விக்கான பதிலை எழுதி முடித்த பின்பு, இரண்டு வரிகள் எழுதுவதற்குத் தேவையான இடங்களை விட்டு, அடிக்கோடு போடுங்கள். ஏனெனில், கடைசித் தருணத்தில் முதலில் எழுதிய பதில்களுக்கான முக்கிய குறிப்புகள் மனதில் தோன்றும். அப்போது, ஏற்கெனவே விட்டு வைத்துள்ள இடத்தில், பதிலுக்கான முக்கிய குறிப்பு களை எழுத வசதியாக இருக்கும்.

கணிதம், அறிவியல் பாடங்களில் வரைபடங்கள் மிகவும் நேர்த்தியாகவும், கோடு பிசகாமலும் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. வரைபடத்துக்கான தோற்றம், வரைபடம், குறிப்புகள் சரியானதாக இருந்தாலே முழு மதிப் பெண்கள் அளிக்கப்பட வேண்டும் என்கிறது விதிமுறை. அதற்காக கிறுக்கி வைக்க வேண்டும் என்பதில்லை. கட்டம் கோணலாக இருக்கிறதே என்று மதிப்பெண் குறையப் போவதில்லை. அடிமட்டத்தை வைத்துக் கொண்டு நேராகக் கோடு போடுகிறேன் என்று நேரத்தை வீணடிக்க வேண்டாம். கையாலேயே கோடு போட்டு சரியான விடை எழுதுங்கள். தேர்வு அறையை விட்டு வெளியே வந்ததும், அடுத்த தேர்வுக்கான பாடத்தை படிப்பதில் மட்டுமே அக்கறை செலுத்த வேண்டும். நடந்து முடிந்த தேர்வைப் பற்றிப் பேசிப் பயனில்லை.




# வண்ண, வண்ண கனவுகள் வருமா?

-மயூரா



அமெரிக்க மனித உரிமைப் போராளி மார்ட்டின் லூதர் கிங் ஜூனியரின் புகழ்பெற்ற வாசகம் "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்பது. 1963 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28 ஆம் திகதி வொஷிங்டனில் நடைபெற்ற மனித உரிமைவிழிப்புணர்வுக் கூட்டத்தில்அவர் ஆற்றிய உரையின் முத்திரை வாசகம் அது. அவரது கனவு, சரித்திரத்தை மாற்றியமைக்கும் வல்லமை கொண்டது.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமும் கனவு காணுங்கள் என்றார். ஆனால் இதைப்போன்ற கனவுகள் இருக்கின்றனவோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் நிம்மதியாக உறங்குகிறோம். அப்போது நாமும் கனவு காண்கிறோம். சுவாரசியம் நிறைந்த சுகமான கனவுகள் அவை. ஏன்தான் முடிந்ததோ என்று எண்ணுமளவுக்கு அவற்றில் பல சுகமானவையாயும் இருக்கத்தான் செய்யும். அவற்றில் சில மனத்தில் துயரத்தைக் கொண்டுவந்து சேர்க்கவும் கூடும்.

கனவுகள் பற்றி சுவாரசியமான பல தகவல்கள் உலாவுகின்றன. எமது கனவுகள் எல்லாம் கறுப்பு வெள்ளை என்கிறார்கள். சில விநாடிகள் கூட நீடிக்காதவை எமது கனவுகள் என்கிறார்கள். கனவுகள் தொடர்பாகப் பல ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. நமது கனவுகளில் நாம் பறக்கிறோம், தேர்வு எழுத முடியாமல் திணறுகிறோம், பஸ்ஸையோ ரயிலையோ தவற விட்டு விட்டுத் தடுமாறுகிறோம். இப்படியான பொதுவான கனவுகள் எல்லோருக்கும் வருகின்றனவாம்.

யானை துரத்துவது, பாம்பு துரத்துவது, நாய் துரத்துவது போன்ற கனவுகளையும் நாம் காண்கிறோம். பார்ப்பது, கேட்பது போன்ற உணர்வு கொண்ட உணர்வுபூர்வ கனவால் நாம் பயப்படுகிறோம், பதறுகிறோம், சிலசமயங்களில் பரவசப்படுகிறோம். இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியவை கனவுகள்.

இரவில் ஏதோ ஓர் அமானுஷ்ய உலகில் உலவியதைப் போல் கண்ட கனவைக்காலையில் விவரிக்கிறோம். அப்போது நாம் கனவென்னும் அனுபவத்தையே சொல்கிறோம். நாம் பார்த்த, படித்த, அறிந்துகொண்ட விடயங்களிலிருந்து கனவு தனக்கான காட்சிகளை உருவாக்கிக்கொள்கிறது. பல சந்தர்ப்பங்களில் கனவில் பார்த்த, கேட்ட ஒரு விடயத்தை வாழ்வில் சில காலம் கழித்து எதிர்கொள்ளும் சூழலும் உருவாகிறது. இதை எம்மால் நம்பவே முடியாமல் போகிறது. ஆனால் மூளையின் அதியற்புத நினைவுத் திறனால் இது சாத்தியமாகிறதுஎன்கிறார்கள் உளவியலாளர்கள்.

என்ன காரணத்தால் கனவு வருகிறது என்னும் கேள்விக்கு இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை. ஆனால் பத்து வயதுக்கு மேற்பட்டவர்கள் தினமும் நான்கு முதல் ஆறு கனவுகள் காண்கிறார்கள். உறக்கத்தின் போது கண்களின் விரைவான இயக்க நிலையில் மூளை விழித்திருக்கையில் செயல்படுவதைப் போன்று செயல்படுகிறது. இந்தச் சமயத்தில் கனவுகள் ஏற்படுகின்றன, ஆனால் இந்தச் சமயத்தில் மட்டும்தான் கனவு காண்கிறோம் என்றும் சொல்வதற்கில்லை என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எல்லாக் கனவுகளும் அர்த்தமுள்ளவை என்றும் சொல்ல முடியாதாம். சில கனவுகளுக்கு ஆழமான பொருள்கள் உள்ளன. சில கனவுகள் எமது வாழ்வின் சம்பவங்களை பிரதியெடுக்கும் சாதாரணச் சம்பவங்களைக் கொண்டவை. பெரும்பாலான கனவுகளை நாம் மறந்து விடுகிறோம்.

உணர்ச்சியமயமான கனவுகளைக் கூட எம்மால் நினைவுகூர முடியாமல் போய்விடுகிறது. இது ஏன்? பொதுவாக நாம் உறங்கும்போது எதையும் நினைவில் வைத்துக் கொள்வதில்லை. மேலும் கனவு காணும்போது கனவு மட்டுமே நிகழ்கிறது அதை நினைவில் வைத்துக்கொள்ளும் செயல் நடைபெறுவதில்லை என்று சொல்கிறார்கள். அதனால் தான் கனவுகளை மறந்து விடுகிறோம்.

ஆனால் கனவுகள் மீது பெரும் ஆர்வம் கொண்டவர்கள் தங்கள் வாழ்வில் கனவுகள் முக்கியமானவை என்று நினைப்பவர்கள் கனவுகளை அதிகம் நினைவில் வைத்துக் கொள்கிறார்கள்.

# மீண்டும் புத்துயிர் பெற வேண்டும் இலக்கிய அமைப்புகள்

-பேராசிரியர் இரா.சிவசந்திரன்



தேவிபரமலிங்கம்

“கடந்த மூன்று தசாப்தங்களாக உறங்கிக் கிடந்த சில இலக்கிய அமைப்புகள் நாட்டில் ஏற்பட்டுள்ள ஜனநாயக சூழ்நிலையால் மீண்டும் நெட்டி முறித்துக் கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அவ்விதம் மீண்டும் செயற்படுவதால் இலக்கியச் சஞ்சாரத்தை ஏற்படுத்த முடியும்.

அவ்விதம் இருந்த, மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம், அமரர் எஸ். பொன்னுத்துரை (எஸ்.பொ) யின் நினைவு நிகழ்வை நடத்துவது வரவேற்கத்தக்கதாகும். அவ்வித வேறு சில அமைப்புகளும் திரும்பவும் இயங்க முன்வர வேண்டும்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவசந்திரன்.

கடந்த (08.02.2015) ஞாயிற்றுக் கிழமை மாலை நல்லூர் நாவலர் கலாசாரமண்டபத்தில் நடந்தேறிய எமது மண்ணின்ஆளுமைஎஸ்.பொன்னுத்துரையின் நினைவஞ்சலி நிகழ்வில் தலைமையுரை ஆற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமரர் பொன்னுத்துரைக்கு சர்வதேச மட்டத்தில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அவர் பிறந்த மண்ணில் காலம் தாழ்த்தியே நடைபெறுகிறது. எஸ்.பொ.எழுத்துலகில் மிகப் பெரிய ஆளுமை கொண்டவராகத் திகழ்ந்தவர். அதிகப்படியான நூல்களை எழுதிப் பதிப்பித்தார். வேறு சிலரின் எழுத்துக்களையும் பதிப்பித்து வெளியிட்டார்.

“எமது மண்ணுக்கு அப்பால் கிழக்கு மாகாணம், புலம்பெயர்ந்த நாடுகளிலும் இளம் படைப்பாளிகளை அவர் ஊக்குவித்து வளர்த்ததும் குறிப்பிடத் தக்கது. வடக்குக் கிழக்கு இரு பல் கலைக்கழகங்களும் புதிய மாணவர் களுக்கு அவரது நூல்களைப் பாட நெறியில் உட்படுத்த முன்வர வேண்டும்” எனக் கேட்டுக் கொண்டார்.



படம்: எம்.எல். லாபிர்

யாழ். பல்கலைக்கழகக் கல்விப் பீடாதிபதி கலாநிதி த.கலாமணி பேசுகையில்:–

“அமரர் எஸ்.பொ, ஆஸ்திரேலியாவில் ‘இலக்கியப் பவர்’ என்னும் அமைப்பை நிறுவி நடத்தி வந்தார். இலக்கியப்பவர் என்பதன் அர்த்தமென்ன என்று அவரிடம் வினவினேன். நெருக்கமாக இருத்தல், ஒருமித்துச் செயற்படலென விளக்கினார்.

அந்த அமைப்பு மிகக் கட்டுப்பாடுகளுடன் ஒழுங்காக இயக்கப்பட்டும் வந்தது. அதில் என்னையும் இணைத்துக் கொண்டார். ஆஸ்திரேலியாவில்கலாநிதிப்பட்டத்துக்காக நான்கு வருடங்கள் கற்றுக் கொண்டிருக்கையில் அமரர் குடும்பத்தில் ஒருவனாக இணைந்து வாழ்ந்த காலங்கள் மறக்க முடியாதவை.

போட்டிகளில் கலந்து கொள்ளும் வழக்கம் இல்லாதவர். அவரது படைப்புகள் மிக உயர்ந்தவையாகத் தெரிவாகின. எனினும் அவரைக் கௌரவிக்கவும், பட்டங்கள் சூட்டவும் எவரும் முன்வந்தாரில்லை. அதேவேளை பட்டங்கள், பரிசுகளுக்காக ஆலாப் பறக்காத இறுமாப்புக் கொண்டவராகப் பலராலும் கருதப்பட்டவராகவும் எஸ்.பொ. வாழ்ந்தார்.

“அவரது இழப்பின் பின்பாகவேனும் அவரால் படைக்கப்பட்டுள்ள படைப்புகள் பற்றியும், அவரது வாழ்வியலையும் பேராசிரியர்கள் ஆய்வு செய்ய முன்வர வேண்டும்” என்றும் தெரிவித்தார்.

அடுத்து கவிஞர் சோ. பத்மநாதன் பேசுகையில்“எஸ்.பொவின்‘வரலாற்றில் வாழ்தல்’ என்னும் இரு பாகங்களிலும் ஆயிரக்கணக்கான பக்கங்களிலும் உருவான இரு நூல்களும் அவரது வாழ்வியலைக் கூறும் ஏழு காண்டங்களில் அமைந்த வரலாற்றுப் பொக்கிஷம்.

அவரது வாழ்வும் எழுத்தும் எவ்வித ஆலாபனங்கள் இல்லாத அப்பட்ட உண்மைகளாகத் திகழ்ந்துள்ளன. எஸ். பொ. என்னும் மிகப் பெரிய ஆளுமை இதுவரையில் ஆய்வுகளுக் குள்ளே அகப்படாமல் போனது நல்லதென்றே கருதலாம். ஆய்வுகள் சில தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படுகின்ற வெறுமையான கண்துடைப்புகளே. அவற்றில் ஒன்றிரண்டு”சிலவேளை நன்றாக அமைந்து விடுவதுமுண்டு. கலகக்காரன், பாலியல் எழுத்தாளனெனவும் புகழ் பெற்றிருந்தார்” என்றார்.

மூத்த எழுத்தாளர் ஐ.சாந்தன் பேசுகையில்;

எஸ்.பொ மாக்ஸிச எதிராளியல்லர். அந்த அமைப்பில் இருந்து அவர் வெளியேற, சிலரது துரோகச் செயற்பாடுகள் காரணமாக அமைந்தாலும், அவரது பணிகள் மாக்ஸிசத்துக்கு இன்னொரு பரிணாமத்தை வழங்கிய தென்றே சொல்வேன். உழைப்பாளி வர்க்கத்தில் தோன்றியவர் மாக்ஸிச கோட்பாட்டு வாழ்க்கையை விலத் திச் சென்று விடவும் முடியாது.

குப்பிளான் ஐ.சண்முகன், மாவை மு.நித்தியானந்தன், ஐ.சாந்தன் ஆகிய இளவல் இலக்கியக்காரர்களை அவர் குறும்பாகத் ‘தவ்வல்கள்’ என்பதுண்டு. ‘அவரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு, கற்பதற்காகக் கொழும்பில் தங்கி இருந்த போது கிடைத்தது. அதனால் எங்களையும் புரட்சிக்காரர்களாக ஒரு சிலர் கருதிக் கொண்டனர். அதிகம் பேசாத அவரிடம் அபரிமிதமான எழுத்தாற்றல் குடிகொண்டிருந்தது என்று தெரிவித்தார். வரவேற்புரையை தேவிபரமலிங்க மும், நன்றியுரையை அமரரின் சகோதரர் ஆசிரியர்ச.சரவணமுத்துவும்நிகழ்த்தினர். குப்பிளான் ஐ.சண்முகன் அமரரின் இன்னொரு சகோதரர் ச.சரச்சந்திரன் ஆகியோரும் அஞ்சலி உரைகளை வழங்கினர்.

# நீங்களும் வெற்றியாளனாக மாற சிந்தியுங்கள்!

வலையவன்

முதலிடம் என்ற வெற்றிக்கான அடிப்படை மீதுதான் வெற்றி யாளர்கள் அனைவரும் உண்ணுகிறார்கள்; உறங்குகிறார்கள், சுவாசிக்கிறார்கள். நீங்கள் முதலிடத்தை விரும்பினால் அந்த இடத்தில் உங்களை வைத்துப் பார்க்க வேண்டும். அந்த உண்மையின் அடிப்படையில் உங்களை முன்னிறுத்த வேண்டும். நீங்கள் முதன்மையானவர் என்று மற்றவர்களுக்குத் தெரிவதற்கு முன்பே உங்களுக்கு அது தெரிந்திருக்க வேண்டும்.

நம்பிக்கை என்பது நாம் எதிர்பார்க் கும் விடயங்களுக்கான அடிப்படை. இன்னும் கண்கூடாக வெளிப்படாத விடயங்களுக்கான தடயம். வெற்றியாளனாக வேண்டும் என்றால் வெற்றியாளனாகவே உங்களைக் கருதிக் கொள்ள வேண்டும்.

வெற்றி பெறுவதற்கு நாம் தகுதியானவர் என்பதில் கடுகளவும் கூடச் சந்தேகம் வரக்கூடாது. வெற்றியாளர் ஆக வேண்டும் எனில் வெற்றியாளனாகவே உங்களைப் பார்த்துக்கொள்ள நீங்கள் பயிற்சி செய்ய வேண்டும் என்கிறார் எழுத்தாளர் டெர்ரி எல். ஹார்ன்பக்கிள்.

### ...தி வெற்றி

சென்ற நூற்றாண்டின் சிறந்த குத்துச் சண்டை வீரர் முகமது அலி. வெற்றிபெறுவதற்கான உளவியலில் நிபுணர். மிகச் சிறந்த குத்துச் சண்டை வீரராக அவர் உலகத்துக்குத் தெரியவருவதற்கு முன்பே, தான் சிறந்தவன் என்று உலகத்துக்குக் கூறியவர். உலகம் அவரை யார் என்று அறிவதற்கு முன்பே, உள்ளூர் உடற்பயிற்சிக் கூடங்களில் நின்றுகொண்டு தான் சிறந்தவன் என்று கூறியவர். வெளிப்படையாக அதைக் கூறும் தைரியம் வருவதற்கு முன்பே தன்னிடம் தான் சிறந்தவன் என்று



கூறிக்கொண்டவர். அலி, மற்றவர்களை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு முன்பு, தன்னைத் தானே ஏற்றுக்கொள்ளச் செய்தார். உங்களது வெற்றிக்கான திறன்களின் மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை உங்களது எதிரி பார்க்கவும், கேட்கவும், உணரவும் வேண்டும். உங்கள் எதிரி உங்கள் வெற்றியைக் கற்பனை செய்யத் தொடங்கி விட்டால் போதும், போரில் பாதியை வென்றது போலத்தான்.

### அடையாளமும் யதார்த்தமும்

உங்களது எதிரி யார்? உங்கள் தளைகளிலிருந்து வெளிவராத வகையில் உங்களை அழுத்துபவன்தான் உங்கள் பகைவன். எனக்கு அமைந்த தடைகள்தான் எனது எதிரிகள். எனது தந்தையும் தாயும் இருவேறு இனத்தவர்கள். நான் அரசின் சேமநலத் திட்டங்களை நம்பி வளர்ந்தவன். அப்பா குடிகாரர். எனது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் எந்த வாய்ப்பும் எனக்கு இல்லை என்றுதான் சமூகமும் புள்ளி விவரங்களும் என்னிடம் கூறிக்கொண்டே இருந்தன.

நிர்ணயிக்கப்படாத எனது இன அடையாளத்தால் என் சகாக்களின் வட்டத்தில் உணர்வு ரீதியாக அதிகம் பாதிக்கப்பட்டிருக்க வேண்டியவன் நான். மது அடிமைப் பழக்கத்துடன் போராடியிருக்க வேண்டி யவன். சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தாழ்வான நிலையில் இருந்திருக்க வேண்டியவன். ஒரு வெற்றிகரமான திருமணத்தை நான் எண்ணிப் பார்த்திருக்கவே முடியாது.

ஆனால், எனது யதார்த்தமோ வேறு. எனது இன அடையாளம் தொடர்பான பிரச்சினைகள் எனக்குப் பள்ளியில் இருந்திருக்கலாம். ஆனால் நான் யார் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கையும் திருப்தியும் நிச்சயமாக இருந்தது. உயர்நிலைப் பாடசாலையில் வகுப்பு மாணவர்களிடையே விருப்பத்துக்குரியவனாக இருந்தேன். மது என்னை அடிமைப் படுத்தவில்லை. எனக்கு அருமையான வாழ்க்கைத் தரம் இருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நானும் எனது மனைவியும் சந்தோஷமான திருமண வாழ்க்கையை நடத்திவருகிறோம். நாங்கள் இருவரும் இன்னமும் சிறந்த நண்பர்களாக இருக்கிறோம்.

### வெற்றி மனநிலை

மற்றவர்களின் அனுபவங்கள் உங்கள் வாழ்வைத் தீர்மானிக்க அனுமதிக்காதீர்கள். நீங்கள் என்னவாக ஆக வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை உங்களுக்கு மட்டும் தான் உள்ளது. உண்மையான வெற்றியாளர், தன்னைச் சுற்றி வெற்றியாளர்கள் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட வர்களாகவும் இருப்பார்கள். என்னை விஸ்தரித்துக்கொள்வதற்கு உதவும் நபர்களுடன் தொடர்ந்து அறிமுகம் செய்துகொள்வதை எனது வாழ்க்கையின் தனிப்பட்ட இலக்காக வைத்துள்ளேன்.

ஆழமற்ற நீர் நிலையில் நீச்சல் கற்கவே முடியாது. ஆழத்தைக் கண்டு அச்சப்பட வேண்டாம். உங்களைச் சுற்றி இருப்பவர்கள் உங்க ளுக்குக் கீழ் நிலையில் இருப்பவர்களாகவோ உங்களுக்குச் சமமான நிலையில் இருப்பவர்களாகவோ இருந்தால் உங்களால் உயரவே முடியாது. அவர்களைவிட நீங்கள் மேலானவர் என்று சொல்ல வரவில்லை. நாம் எல்லாரும் சமமாகப் படைக்கப் பட்டவர்கள்தான். ஒரு மேலாளராக ஆக நீங்கள் விரும்பினால், உங்கள் மனநிலை மேலாளருக்கு உரியதாக இருக்க வேண்டும். நீங்கள் ஆக முயலும் இடத்தில் நிறையப் பேர் இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள். நிறுத்தப்பட்டிருக்கும் காரை நீங்கள் பின்தொடர முடியாது. அதனால் வெற்றியாளர்களுடன் இருங்கள். நீங்களும் வெற்றியாளர் ஆகுங்கள்.

# நம்புங்கள்!

## நீங்கள்தான் சிறந்தவர்



■ இணையவன்

நீங்கள்தான் உலகிலேயே அழகானவர். அறிவுள்ளவர். அனைவரிடமும் அன்பு பாராட்டுபவர். உங்கள் திறமையில் எந்தச் சந்தேகமுமில்லை. நீங்கள் படிக்கின்ற பாடக் கல்வியில் தலை சிறந்தவர் என்று உறுதியாக நம்புங்கள்.

ஆனால், நீங்கள் படிக்கின்ற கல்வியில் கூடவே கொள்ள வேண்டிய மென் திறன்தான் உங்களைத் தனித்திறனுள்ளவர்களாகக் காட்டி மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி, உங்களை உயர்நிலையை அடையச் செய்யும்.

நாம் எமது முன்னேற்றத்தில் கவனம் கொள்ளாமல் அடுத்தவர்களைப் பற்றி அதிகம் சிந்திக்கிறோம். எமக்குப் பிடித்த நபர்களுக்கு, எது பிடிக்கும் எது பிடிக்காது என்ற ஆராய்ச்சியில் இறங்கிவிடுகிறோம். அது நண்பர்களாக இருக்கலாம், அல்லது பிடித்த நடிகர்களாகவோ, அல்லது விளையாட்டு வீரர்களாகவோ இருக்கலாம்.

ஆனால் எமது பலம் என்ன, பலவீனம் என்று ஆராயத் தொடங்குவதில் எமக்கு இன்று ஆர்வம் இல்லை. உங்களுக்குப் பிடித்தவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளச் செலவிடும் நேரத்தில் பாதியாவது உங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் செலவிடுங்கள்.

### மென் திறன்கள்

மென் திறன் தகுதிகள் என்பது, படிப்பைத்தவிர, உங்களுடைய பேச்சுத்திறன், தலைமைப்பண்பு, நம்பகத்தன்மை, உங்களுடைய தனிப்பட்ட குணாதிசயங்கள், நீங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வல்லவரா, நீங்கள் பயந்தாங் கொள்ளியா, பொது இடங்களில் பேசுவதற்குக் கூச்சப்படுவீர்களா, எதிர்ப்பாலினத்தவரிடம் பேச யோசிப்பீர்களா போன்றவையாகும்.

இது தவிர, நேரக்கட்டுப்பாடு, எதுவும் முடியும் என்ற உறுதியான எண்ணம், கூர்ந்து கவனிக்கும் திறன், உங்களுடைய ஆளுமைத் திறன், தன்னையும் மற்றவரையும் எந்த நேரமும் உத்வேகப் படுத்துதல் உள்ளிட்டவையே. இவை இன்றைய சூழ்நிலையில் அவசியமாகின்றன.

இந்தத் தகுதிகள் அனைத்து மனிதர்களுக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கு இருந்தே ஆக வேண்டும். யதார்த்தமாக வாழப் பழகிக்கொள்வது, கல்வியோடு கூட மென் திறன்களையும் தெரிந்து கொண்டு நடைமுறைப்படுத்துவது, எம்மால் முடியும் என்ற முழுத் தன்னம்பிக்கை என்ற மூன்றையும் கடைப்பிடித்தால் வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும்.

### ஆட்குறைப்பில்

ஒரு நிறுவனத்தில் ஆள்குறைப்பு நடைபெறும்போது, இவ்வளவு பேர்கள் எமது அலுவலகத்தில் பணி புரிந்தால் போதும். மற்றவர்களை அனுப்பிவிடலாம் என்று எதை வைத்துத் தீர்மானிக்கிறார்கள்.

வேலை செய்பவர்களில் யாருக்குப் நேர்மறையான எண்ணம் இருக்கிறது, மற்றவர்களுக்கு உதவி செய்பவர்கள் யார், நிறுவனத்தின் மேல் நம்பிக்கை வைப்பவர்கள் யார் என்ற தகுதிகளை அலசிய பின்பே நிறுவனம் அவர்களைத் தக்க வைத்துக் கொள்கிறது.

வேலை தருகிற முன்னணி நிறுவனங்கள் இளைஞர்களுக்கு ஏற்கனவே இருக்கிற படிப்பைத் தவிர மென் திறன் தகுதிகள் இருக்கும் என்று கணக்கிடுகின்றன.

இந்த மூன்று அம்சத் திட்டங்கள் இருந்தால் இவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து விடுகின்றன. விவரம் அறிந்த நிறுவனங்கள் கல்வித் தகுதியின் அடிப்படையில் மட்டுமின்றி, இந்த மென்திறன் தகுதியை வைத்துத்தான் பெரும்பாலும் வேலை வழங்குகின்றனர்.

இவை நீங்கள் விரும்பும் வேலை யைப் பெறுவதற்கு மட்டுமின்றி அத னைத் தக்க வைத்துக்கொள்ளவும் பெரிதும் உதவும்.

### நடைமுறை வாழ்க்கைக்கும்

நடைமுறை வாழ்க்கையில் பார்த்தால், ஒருவருடைய உறவைப் பெறுவது மிகவும் சுலபம். ஆனால் அந்த உறவை வெகுகாலம் தக்க வைத்துக்கொள்வது கடினம். நீங்கள் தனி நபரல்ல. நாளை நீங்கள் உயர்ந்த பதவியை அடையப் போகிறீர்கள். உங்களிடம் பலர் வேலை செய்யப் போகிறார்கள். ஏன், நீங்களே சொந்தமாக ஒரு நிறுவனத்தைத் தொடங்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. அத்தகைய நிலையில், நீங்கள் தலைவராக இருந்து கொண்டு நிறுவனத்தை வழி நடத் தும் நேரம் வரலாம். அந்த நேரத்தில் நீங்களும், உங்களுடன் பணிபுரிபவர்களும் இந்தத் தகுதிகளைக் கொண்டிருந்தால்தான் குழுவாக நீங்கள் செயற்பட முடியும்.

உலகம் முழுவதும் எல்லாமே ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் எமது வெற்றி கைகூட, மற்றவர்களிடம் எவ்வாறு நாம் பழகுகிறோம், அவர்கள் மதிக்கத்தக்கதாக நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதெல்லாம் மென்திறனால் மட்டும் சாத்தியம்.

நீங்கள் மனிதர்களாகப் பிறந்து, மனிதர்களாகவே மறைந்து விடக்கூடாது. நீங்கள் தலைவராகப் பிறந்தவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில், ஒவ்வொரு இளைஞர்களுக்குள்ளும் ஒரு தலைவன் இருக்கிறான்.

# எழுதி வாசியுங்கள் இலட்சியத்தை

உங்கள்இலட்சியத்தை வெளிப்படையாக எழுதி வைக்க வேண்டியது முக்கியமானது. எனது வீட்டின் இலட்சியத்தை நான் திட்ட அறிக்கையாக வைத்திருக்கிறேன். அது எங்களின் எதிர்காலத் திட்டமாக இருக்கும்.

### வாழ்வின் ஊக்கம்

அந்தத் திட்ட அறிக்கை நாம் எமது வாழ்க்கையைப் பற்றி ஊக்கமான வார்த்தைகளில் பேசப்போகிறோம் என்பதைச் சொல்கிறது. கடின உழைப்பு மற்றும் தளராத மனஉறுதி மூலமாகப்பெரும்செல்வத்தைச் சேர்ப்போம் என்பதையும், பணத்தைச் சரியான வழிகளில் முதலீடு செய்வோம் என்பதையும், அதன் வாயிலாக எமது குழந்தைகளின் குழந்தைகளும் மரபு வழியாகப் பெரும் செல்வத்தைப் பெறுவார்கள் என்பதையும் அது கூறுகிறது.

இதை ரசிப்பவர் இளையவர்களாக இருக்கலாம். வயதானவர்களாக இருக்கலாம். ஆணாக, பெண்ணாக, கறுப்பு நிறத்தவராக, வெள்ளையர்களாக அல்லது ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். நீங்கள் யாராக இருந்தாலும் சரி, உங்களது இலட்சியத் திட்டத்தை வெளிப் படை யாக எழுதிவையுங்கள். அதை உரக்கப் படியுங்கள், மன உறுதிப் பாட்டுடன் ஒரு நாளில் அதனை இரண்டு முறையாவது படியுங்கள். எதை மனஉறுதியுடன்பேசுகிறீர்களோ, அது உங்களை நோக்கி வருகிறதா என்று பாருங்கள்.



### மீண்டும் இதை உரக்க வாசியுங்கள்:

மற்றவர்கள் செய்யாத ஒன்றை நான் இன்று செய்வேன். அதனால் பிறருக்குக் கிடைக்காத நாளை எனக்குக் கிடைக்கும்! மீண்டும் வாசியுங்கள். மற்றவர்கள் செய்யாத ஒன்றை நான் இன்று செய்வேன். அதனால் பிறருக்குக் கிடைக்காத நாளை எனக்குக் கிடைக்கும்! மீண்டும் வாசியுங்கள். மற்றவர்கள் செய்யாத ஒன்றை நான் இன்று செய்வேன். அதனால் பிறருக்குக் கிடைக்காத நாளை எனக்குக் கிடைக்கும்!

மதிப்பிற்குரியவர்களே, இது மிகவும் எளிமையானது. உங்களால் முடியும் என்று நீங்கள் சொன்னீர்களானால் உங்களால் முடியும். உங்களால் முடியாது என்று சொன்னால் முடியாது. உங்கள் உதடுகளிலிருந்து வரும்சகலவார்த்தைகளும்உங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். எந்த எதிர்மறையான எண்ணமும் உங்களைச் சிறையில் முடக்கும் என்று எண்ணுங்கள். எதிர்மறையான மனிதர்களிடம் இருந்து விலகி இருங்கள். வெற்றிகரமான, நேர்மறையான, ஆற்றல்மிக்க மனிதர்களுடன் உறவை வைத்துக் கொள்ளுங்கள்.

### சாத்தியம்தான்

என்னால் முடியும் என்று சொல்வதை விட அது சாத்தியம் என்று சொல்வதுதான் முக்கியமானது என்று லெஸ் ப்ரவுன் என்ற அமெரிக்கத் தன்னம்பிக்கைப் பேச்சாளர் ஒருமுறை சொன்னார்.

நான் அப்படிப்பட்ட ஒரு நபர்தான். வேறு ஒருவரால் செய்ய முடியுமென்றால், என்னாலும் செய்ய முடியும். இன்னொருவருக்குச் சாத்தியமாகும் ஒன்று எனக்கும் சாத்தியப்படும். நீங்கள்தான் அந்தச் சாத்தியம்! சிகரத்தை எட்டுங்கள். ஆழ உழுதுகொண்டே செல்லுங்கள். தொடர்ந்து முன்னேறுங்கள். அது சாத்தியம் என்று சொல்லுங்கள்!

### வெற்றி நமக்குத்தான்

அமெரிக்க தன்னம்பிக்கைப் பேச்சாளர் ஜானி டி. விம்ப்ரே எழுதி சக்சஸ்ஞான், சென்னை வெளியிட்டுள்ள from the HOOO to doing GOOD ஏ்னும் நூலிலிருந்து

*தொகுப்பு : நீதி*